விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(த-2933)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

## சுதந்திரக் கட்சியின் 67-வது நிறைவு தினத்தில்

# தேசிய அரசிலிருந்து விலகுவது தொடர்பான தீர்மானம் அறிவிப்பு

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக செய்தி வெளியீடு



(கொழும்பு) தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவது தொடர்பான இறுதித் தீர்மானம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 67-வது நிறைவு தினத்தில் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. அதன்படி இது தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி வெளிப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(02-ம் பக்கம் பார்க்க...)

## பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் பொறுப்பு பெற்றோர்களிடமே

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(புதுக்குடியிருப்பு)

பிள்ளைகளை நல்வழிப்படுத்தி நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் முதன்மையான பொறுப்பு பெற்றோர்களிடமே உள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் மீது கூடு 16

## தமிழரசுக் கட்சியை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்



(பனிக்கன்குளம்)

இலங்கை தமிழரசுக் கட்சியை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலின் 15

## பால்மா விலையை அதிகரிக்க தீர்மானம்!

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் பால்மாவின் விலையை மீண்டும் அதிகரிக்க வேண்டும் என நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


தற்போது நாட்டில் டொலரின் பெறுமதி அதிகரித்தமை காரணமாக கடந்த 2 மாதங்களு 16

## பாலசிங்கத்தின் அறிவும் அனுபவமும் ஏற்றுக்கொள்ளப்படாதது பாரிய விளைவுகளை எமக்கும் ஏற்படுத்தியது

### இளைஞர்களுடனான சந்திப்பில் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் அறி



வும் அனுபவமும் ஏற்றுக்கொள்ளப்படாதது பாரிய விளைவுகளை எமக்கு ஏற்படுத்தியது என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 15

## யாழில் விகாரைகள் அமைக்க முடியவில்லை

(கொழும்பு)

பௌத்த மதத்திற்கும் சிங்கள மாணவர்களின் பல்கலைக்கழக கல்விக்கும் வடக்கில் எவ்விதமான சுதந்திரமும் இல்லை என 15

## குற்றவாளிகள் யாராக இருப்பினும் அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும்

### அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த மைத்திரி - ரணில் தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன மீண்டும் அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இடம் பெற்ற பாரிய ஊழல் மோசடிகளுடனும், படுகொலைகள் உட்பட கொடூரமான குற்றச்செயல் 15



### பிரதேச செயலகங்களில்

## தண்டப் பணத்தை செலுத்து வசதி

(கொழும்பு)

மோட்டார் வாகன தவறுகள் தொடர்பிலான தண்டப்பணத்தை பிரதேச செயலகங்களில் செலுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்களில் இதற்கென தனியானபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன சட்டத்தில் சமீபத்தில் 16

## கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு



16

### மகிந்தவின் ஆட்சிக் காலத்தில்

## பாதுகாப்பை காரணம் காட்டி எல்லைகளை மீறி செயற்பட்டோம்

### உண்மையை ஒப்புக்கொண்ட பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு என்று கூறி தனிநபர் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் கடந்த ஆட்சியில் இடம் பெற்றது என தெரிவித்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ரத்துபஸ்வெல சம்பவம் முக்கியமானது எனவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தென் மாகாண உறுப்பினர்கள் சந்திப்பு நேற்று அம்பலாங்கொடையில் இடம்பெற்றது. 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கொவிசெத
திகதி 2018.06.16
சீட்டிழுப்பு இலக்கம் 1792
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 21 23 40 73
தேசிய லொத்தர் சபை

## சுவன
திகதி 2018/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 92
ஆங்கில எழுத்து: F
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 17 31 45 65
தேசிய லொத்தர் சபை

## சுபிரி வாசனா
திகதி 2018/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 1334
எழுத்து: 05
வெற்றி இலக்கம்: 04 05 15 25 67 52
தேசிய லொத்தர் சபை

## ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16-06-2018
சீட்டிழுப்பு இலக்கம் 848
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 5 2 3 3 2 1
தேசிய லொத்தர் சபை


வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532


## தேசிய அரசிலிருந்து விலகுவது...

அரசாங்கத்திலிருந்து விலகிய சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களுடனான சந்திப் பொன்றின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், ஐக்கிய தேசிய கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் குறித்த தமது நிலைப்பாட்டை உடனடியாக வெளிப்படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாடு முழுவதும் இந்த வருடம் தொடக்கம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 22 ஆயிரத்து 492 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு அறிவித்துள்ளது.

அந்த வகையில் ஜனவரியில், 7 ஆயிரத்து 178 பேரும், பெப்ரவரி மாதத்தில் 4 ஆயிரத்து 390 பேரும், மார்ச் மாதத்தில் 3 ஆயிரத்து 325 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் டெங்கு நோய்த் தாக்கம் வெகுவாகக் குறைந்ததாக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## புதிய வீடு விற்பனைக்கு

கோண்டாவில் காங்கேசன்துறை வீதியின் அருகில் அமைந்துள்ள புதிய சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை
தொடர்பு:
0778421093
(4552)

## விற்பனைக்கு

சுன்னாகம் AGA Office வீதியில் ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0761619517
(4444)

## பகிரங்க ஏல விற்பனை

எமது வித்தியாலயத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

மண்வெட்டி-1, ஒற்றைச்சில்லுவண்டி-1, குறுக்குச்சட்டம்-1, Laminating Machine A4-1, Mouse-10, Key Board-8, Computer Table-4, Computer Chair-18, Cabinet Steal-1, Computer CPU-15, Monitor-8

இடம்:- வித்தியாலய முன்றல்
காலம்:-2018.06.29, வெள்ளிக்கிழமை
மு.ப 11.00 மணி
✣ பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் பாடசாலை நேரத்தில் பார்வையிடலாம்.
✣ பொருட்களை ஏலத்தில் எடுப்பவர்கள் உடன் பணம் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
அதிபர். யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
(4548)

## மணமகள் தேவை

1984ல் பிறந்த யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
தொடர்புகளுக்கு:
0778121713, 0768711961
(4551)

## சேவை முகவர்
## காணி, வீடு விற்பனைக்கு

B.M.C லேன், உரும்பிராய், கொக்குவில், A9, நுணாவில் 600 மீற்றர் தூரம் 21 பரப்பு புதிய தென்னங்காணி ஆகியன விற்பனைக்கு. யாழ்.நல்லூர் பகுதியில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
V.சுந்தரம்
0774819801
(4555)

## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)
Dr.P.ஆறுமுகம்
T.P :- 0777 569 205
18.06.2018-24.06.2018 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=
மீண்டும் யாழில்



ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.


இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி . ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

இப்போது நாம் புதிய முகவரியில்
விதுனா லொச்
ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409
(ஸ்ரீ-2932)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.04.1947

மறைவு
17.05.2014

அமரர்
# சிற்றம்பலம் சின்னத்தம்பி
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்- ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)
[திதி :-03.07.2018]

சீரிய சிந்தனைகள் –உம்
வாழ்விலே செயல்களாகி
புனிதராய் உயர்ந்து நின்றீர்,
நேரிய பாதை சென்று நல்--
காரியம் பலவும் செய்தீர்,
மானுட தர்மத்தின் காவலன் நீங்களன்றோ?
நிலம் வியக்க இங்கு நிறைவாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம்துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

வரணி (4546) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

# கதிரன் பீதாம்பரம்

பிறப்பு
06 - 11 - 1949



இறப்பு
14 - 06 - 2018

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் இலந்தைக்காடு வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் பீதாம்பரம் அவர்கள் 14.06.2018ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன்-சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகனும், பூமணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி-ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், தேவராசா (சுவிஸ்), அம்பிகாதேவி, பராசக்தி, சரஸ்வதி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், குமாரவேலு, தேவராசா, பவளராசா, காலஞ்சென்றவர்களான முருகேசு, சிவலிங்கம், சரஸ்வதி, தங்கம்மா, இரத்தினம் மற்றும் சிவபாக்கியத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனக்கிரியை இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைக்காடு
வல்வெட்டித்துறை
(ஸ்ரீ-2946)

தகவல்:-
குடும்பத்தினர்

## வேலையாட்கள் தேவை

1) NVQ4/NVQ5 அல்லது அதற்கு மேலாக படித்தவர்கள்
2) அலுவலக உதவியாளர்கள்
3) கமரா பொருத்துனர்
4) ஆட்டோ மீற்றர் பொருத்துனர்
5) வயரிங் வேலை தெரிந்தவர்கள்
6) வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்

மென்பொருள் வல்லுனர்கள் / விரிவுரையாளர்கள்
HTML, PHP, MySql , JS, CSS, Visual C #, Asp.Net
தெரிந்தவர்கள் தேவை

## தொழில் கற்றல்

சிசிடிவி வல்லுனர்: A/L அல்லது O/L முடித்தவர்கள்
2 வார பயிற்சி கட்டணம் 7500/= வரை

மென்பொருள் வல்லுனர் பயிற்சி: A/L முடித்தவர்கள்
6 மாத பயிற்சி கட்டணம் 30,000/= வரை

பிற இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்

3ம் வருட நிறைவையொட்டி 10,000/= விலைக்கழிவு

HIKVISION COMPLETE SET WITH INSTALLATION

2 வருட உத்தரவாதம்




4 Cameras + DVR + Harddisk + PowerSupply 10Amp
BNCs + DCs + 50m 3c2v + Powercable
+ Installation + 1 AMC

55,600/=

45,600/=

(4547)

HIKVISION AUTHORIZED GOLD VALUE ADDED SOLUTION PATNER

SST

சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்
இல.: 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புக்கு.: 0212217994/ 0775527099 முகநூல்: sunsakthy traders
இணையம்.: sunsakthy.com மின்னஞ்சல்.: info@sunsakthy.com

HIKVISION AUTHORIZED GOLD DEALER PARTNER


# ராஜீவ்காந்தி கொலை! கைதிகள் ஏழு பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்



முருகன் பேரறிவாளன் சாந்தன்
நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

## எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் வலியுறுத்து



(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று கடந்த 27 வருடங்களாக சிறையிலிருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், நளினி உள்ளிட்டோரை விடுதலை செய்ய முடியாது என்று மத்திய பா.ஜ.க. அரசு அறிவித்திருப்பது ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தருகிறது.

அ.தி.மு.க. அரசு இவர்கள் 7 பேரையும் விடுதலை செய்ய 19.2.2014 அன்றே முடிவு எடுத்து மத்திய அரசின் கருத்தையும் கேட்டிருந்த நிலையில், ஏறக்குறைய 4 வருடத்திற்கும் மேலாக அமைதியாக இருந்த மத்திய அரசு, இப்போது திடீரென்று விடுதலையை நிராகரித்து இருப்பது மனிதநேயமற்ற முடிவாகவே தி.மு.க. கருதுகிறது.

குறிப்பாக சிறையில் வாடும் 7 பேரும் தங்களை விடுதலை செய்யவேண்டும் என்று தொடர்ந்த வழக்கில் "3 மாதங்களுக்குள் தமிழக அரசின் கோரிக்கை மீது உங்கள் முடிவை தெரிவியுங்கள்" என்று கடந்த ஜனவரி மாதமே உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், வழக்கம் போல் தாமதம் செய்து, இப்படியொரு முடிவை ஜனாதிபதி மூலம் அறிவித்திருப்பது மத்திய அரசு தனக்கு உள்ள பொறுப்பை தட்டி கழிப்பது போல் அமைந்துள்ளது.

குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டத்தின்படி, மத்திய அரசின் புலனாய்வு நிறுவனங்கள் விசாரிக்கும் வழக்குகளில் தண்டனை பெற்றவர்களை மாநில அரசு விடுதலை செய்யும் முன்பு மத்திய அரசின் கருத்தை கேட்கவேண்டும் என்றுதான் இருக்கிறதே தவிர, ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்று கூறப்படவில்லை.


ஆனாலும் தமிழக அரசின் அமைச்சரவை முடிவிற்கு மத்திய அரசு கருத்து தெரிவிப்பதற்கு பதிலாக, ஜனாதிபதி மூலம் மாநில அரசின் கோரிக்கையை நிராகரித்திருப்பது, உள்நோக்கம் கொண்டதாகவும் விடுதலை செய்வதை சிக்கலாக்குவதாகவும் தோன்றுகிறது.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்யும் பிரச்சினையில், பொறுப்பை தட்டிக்கழிப்பதிலும் குழப்பம் ஏற்படுத்துவதிலும், மாநில அரசும், மத்திய அரசும் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

ஆகவே தமிழக அரசின் அமைச்சரவை 7 பேரையும் விடுதலை செய்ய ஏற்கனவே எடுத்த முடிவின் அடிப்படையில், மத்திய உள்துறை அமைச்சகம் தனது கருத்தை உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, மத்திய அரசை வலியுறுத்தவேண்டும் என்றும், 27 வருடங்களுக்கும் மேலாக சிறையில் வாடும் 7 பேரையும் விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## ஏழு பேரையும் விடுவிப்பதே தமிழக அரசின் நிலைப்பாடு

### அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள ஏழு பேரையும் விடுவிக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடு" என்று, தமிழக மீன்வளத் துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ராஜீவ்காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் 7 பேரை விடுவிக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடு.

"தமிழக அரசின் நிலைப்பாட்டை, உயர்நீதிமன்றத்தில் எடுத்துரைத்து வெற்றி காண்போம்.

"அதனுடன், பேரறிவாளனின் தாய் அற்புதம்மாளின் வேதனையை தமிழ் அரசாங்கம் உணர்ந்துள்ளது" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ‘ஜீனியஸ்’ ரொனால்டோ மிரட்டல் ஹட்ரிக்

## உலக கால்பந்தில் அபாரம்



உலக கிண்ண கால்பந்து தொடரில் ‘ஹட்ரிக்’ கோல் அடித்து அசத்தினார் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இவரது மாயாஜாலம் கைகொடுக்க, ஸ்பெயின் அணிக்கு எதிரான லீக் போட்டியை போர்த்துக்கல் 3-3 என சமன் செய்தது.

ரஷ்யாவில் ‘பிபா’ உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. சோச்சியில் நடந்த ‘பி’ பிரிவு லீக் போட்டியில் ‘நம்பர்-4’ அணியான போர்த்துக்கல் அணி, ஸ்பெயினை (10ஆவது இடம்) எதிர்கொண்டது. ஆரம்பம் முதலே அனல் பறந்தது. போட்டியின் 4வது நிமிடத்தில் ‘பெனால்டி ஏரியாவில்’, ரொனால்டோவை எதிரணியின் நாசோ மடக்க, போர்த்துக்கலுக்கு ‘பெனால்டி கிக்’ வாய்ப்பு கிடைத்தது. இதில் மிரட்டிய ரொனால்டோ, அப்படியே கோலாக்கி அசத்தினார்.

**தியாகோ பதிலடி**

முன்னாள் சம்பியன் (2010) ஸ்பெயின் வீரர்களும் சளைக்கவில்லை. 24 ஆவது நிமிடத்தில் எதிரணியின் தற்காப்பு அரணை அசாத்தியமாக தகர்த்த ஸ்பெயினின் தியாகோ கோஸ்டா, பந்தை வலைக்குள் அனுப்பினார். பின் அணித் தலைவருக்குரிய முறையில் அபாரமாக விளையாடிய ரொனால்டோ, நேரம் பார்த்து காத்திருந்தார். 44ஆவது நிமிடத்தில் பந்தை பெற்ற இவர், எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் இடது காலால பந்தை வலையை நோக்கி உதைத்தார். பந்து கோல் காப்பாளர் டேவிட்டின் கையில் பட்டு, சற்று விலகி வலைக்குள் செல்ல, போர்த்துக்கல் முதல் பாதியில் 2-1 என முன்னிலை பெற்றது.

**குறையாத விறுவிறுப்பு**

போட்டியின் விறுவிறுப்பு இரண்டாவது பாதியில் குறையவில்லை. இனியஸ்டாவை தேவை இல்லாமல் போர்த்துக்கலின் மவுடின்கோ ‘பவுல்’ செய்ய, ஸ்பெயினுக்கு 55ஆவது நிமிடத்தில் ‘பிரீ கிக்’ கிடைத்தது. இதில், சில்வா அடித்த பந்தை பெற்ற பாஸ்கட் தலையால் முட்டினார். அதை பெற்ற தியாகோ, அப்படியே உதைத்து கோலாக்க, போட்டி 2-2 என சமநிலையை எட்டியது. அடுத்த 3ஆவது நிமிடத்தில் நாசோ பட்டையைக் கிளப்பினார். யாரும் எதிர்பாராத விதமாக, இவர் அடித்த பந்து கோல்போஸ்டில் பட்டு, நூலிழையில் வலைக்குள் செல்ல, ஸ்பெயின் அணி 3-2 என முன்னிலை பெற்றது.

**மிரட்டிய ரொனால்டோ**

இதனால், போர்த்துக்கல் அணிக்கு நெருக்கடி அதிகரித்தது. ஜெரார்ட் பிக்ரு, ரொனால்டோவை ‘பவுல்’ செய்ய, போர்த்துக்கலுக்கு 88ஆவது நிமிடம் ‘பிரீ கிக்’ வாய்ப்பு கிடைத்தது. சமன் செய்யும் வாய்ப்பு என்பதால், அரங்கமே அமைதியானது.

இந்த வாய்ப்பில், 33 வயதிலும் ‘சுப்பர் ஸ்டார்’ என்பதை நிரூபித்தார் ரொனால்டோ. 20 மீ., தூரத்திலிருந்து எதிரணி வீரர்களின் பல தலையை தாண்டி, வெறும் 9 வினாடியில் கோல் காப்பாளரின் இடது பக்கம் பந்தை அடித்து கோலாக்க, ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர்.

இதன் மூலம், ‘ஹட்ரிக்’ கோல் அடித்து அசத்தினார். முடிவில், போட்டி 3-3 என்ற கணக்கில் சமனானது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன.

**மூத்த வீரர்**

ரொனால்டோ, உலக கிண்ண அரங்கில் ‘ஹட்ரிக்’ கோல் அடித்த மூத்த வீரர் (33 ஆண்டு, 131 நாள்) என்ற சாதனை படைத்தார். இதற்கு முன், நெதர்லாந்தின் ராப் ரென்சென்பிரிங் (1978, எதிர் - ஈரான், இடம், ஆர்ஜென்ரீனா) 30 வயது, 336 நாளில் எட்டியதே சாதனையாக இருந்தது.

**மகிழ்ச்சி**

ரொனால்டோ கூறுகையில், “எனது கால்பந்து வாழ்வில் மற்றொரு சாதனை நிகழ்த்தி இருப்பது மகிழ்ச்சி. ஸ்பெயினுக்கு எதிரான போட்டியை சமன் செய்தது திருப்தி தருகிறது. லீக் சுற்றில் இன்னும் பல சவால் உள்ளன. எங்களால் முடிந்த அளவு சிறப்பாக செயல்படுவோம்,” என்றார்.

ஹட்ரிக் கோலடித்த ரொனால்டோ

## ‘மிஸ்’ செய்த மெஸ்சி



ஐஸ்லாந்துக்கு எதிராக வெல்ல வேண்டிய வாய்ப்பை கோட்டைவிட்டது ஆர்ஜென்ரீனா. எளிய ‘பெனால்டி’ வாய்ப்பை மெஸ்சி நழுவ விட போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

ரஷ்யாவில் நடக்கும் உலக கிண்ண கால்பந்து தொடரின் ‘டி’ பிரிவு லீக் போட்டியில் மெஸ்சியின் ஆர்ஜென்ரீனா அணி, ஐஸ்லாந்து அணியை சந்தித்தது.

போட்டியின் 19ஆவது நிமிடம் அகுயரோ, இடது காலால் அடித்த பந்து கோல் வலையை முத்தமிட ஆர்ஜென்ரீனா அணி 1-0 என முன் னிலை பெற்றது.

இத்தொடரில் களமிறங்கிய அணிகள் குறைந்த மக்கள் தொகை (3,39, 747 பேர்) கொண்ட ஐஸ்லாந்து, மனம் தளராமல் போராட அடுத்த 4ஆவது நிமிடத்தில் அதிசயம் நிகழ்த்தியது.

சிகுயர்ட்சன் அடித்த பந்து ஆர்ஜென்ரீனா கோல் காப்பாளர் கேப்ரியல்லோ வலது கையில் பட்டு எகிறியது. அருகில் இருந்த பின்பாக்சன் பந்தை மீண்டும் திருப்பி அடித்து கோலாக மாற்றி சாதனை படைத்தார். உலக கால்பந்து வரலாற்றில் ஐஸ்லாந்து அடித்த முதல் கோலாக இது அமைந்தது.

1-1 என சமனில் முடிந்த முதல் பாதியில் பந்து பெருமபாலும் ஆர்ஜென்ரீனா வீரர்களின் கட்டுக்குள் இருந்தாலும் தற்காப்பு பகுதி பலவீனமாக இருந்தது.

**மரடோனா அதிர்ச்சி**

இரண் டாவது பாதியில் 64ஆவது நிமிடம் ஆர்ஜென்ரீனா அணிக்கு ‘பெனால்டி’ வாய்ப்பு கிடைத்தது. இதை ஜோக மாற்றி ஆர்ஜென்ரீனா வெல்ல வேணடும் என ‘ஜாம்பவான்’ மரடோனா, கேலரியில் இருந்து ‘கமான்... கமான்...’ என கத்தினார்.

இதற்கேற்ப கோல் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் மெஸ்சி, கோல் காப்பாளர் ஹால்டர்சனுக்கு வலது புறமாக அடித்தார். இதை கவனித்த காப்பாளர் அப்படியே பாய்ந்து அசத்தலாக தடுத்தார். தேசிய அணிக்காக இப்படி எளிதாக கோல் அடிக்க கிடைக்கும் ‘பெனாலடி’ வாய்ப்பை மெஸ்சி நான்காவது முறையாக (ஜேர்மனி-2012, பிரேசில்-2014, 2016-சிலி மற்றும் தற்போது) கோட்டை விட்டார். இதை நேரில் பார்த்துக் கொண்டிருந்த ‘ஜம்பவான்’ மரடோனா உள்ளிட்ட ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

எப்படியும் ஒரு கோல் அடித்து விட வேண்டும் என போராடிய ஆர்ஜென்ரீனா அணிக்கு பலன் கிடைக்கவில்லை. 81ஆவது நிமிடம் மெஸ்சி அடித்த பந்து கோல் போஸ்ட் மிக அருகில் சென்று ஏமாற்றியது.

முடிவில் போட்டி 1-1 என சமனானது.

**30 வயது, 213 நாட்கள்**

உலக கிண்ண கால்பந்து அரங்கில் களமிறங்கிய வீரர்களின் வயது சராசரி அதிகம் (30 வயது, 213 நாட்கள்) கொண்டதாக ஆர்ஜென்ரீனா, ஐஸ்லாந்து மோதிய போட்டி அமைந்தது.

இதற்கு முன் 1994ல் ஜேர்மனி, பெல்ஜியம் மோதிய போட்டியில் சராசரி 30 வயது, 96 நாட்கள் கொண்டதாக இருந்தது.

**144**


நேற்று தனது 144ஆவது போட்டியில் களமிறங்கினார் ஜேவியர் அலெக்சாண்ட்ரோ மஸ் செரானோ. இதையடுத்து அதிக போட்டிகளில் பங்கேற்ற ஆர்ஜென்ரீனா வீரர்களில ஜேவியர் ஜனெட்டியை (143) முந்தி முதலிடம் பிடித்தார்.

**தொடரும் சோகம்**

ஐந்து முறை சிறந்த வீரருக்கான ‘பிபா’ விருது வென்றவர் மெஸ்சி. இவருக்கு ‘பெனால்டி’ என்றாலே அலர்ஜி போல. ஆர்ஜென்ரீனா மற்றும் பார்சிலோனா அணிக்காக கடைசியாக அடித்த 7 ‘பெனால்டி’ வாய்ப்புகளில், 4ல் இவர் கோல் அடிக்கத் தவறினார்.


உலக கிண்ண தொடரில் மெஸ்சி களமிறங்கிய 16 போட்டியில் 12 ஆவது முறையாக ஒரு கோல் கூட அடிக்காமல் ஏமாற்றினார்.

சிறந்த வீரர் ரொனால்டோவா... மெஸ்சியா என்ற போட்டி எப்போதும் நிலவும், ‘ஹட்ரிக்’ கோல் அடித்த ரொனால்டோதான் தற் போதைக்கு ‘ஹீ ரோ’ வாக ஜொலிக்கிறார்.










## ஜெயிக்குமா ஜேர்மனி?

உலக கிண்ண கால்பந்து தொடரில் ஜேர்மனியின் முல்லர், பிரேசிலின் நெய்மர் கலக்கலான ஆட்டத்தை வெளிப்படுத்த காத்திருக்கின்றனர்.

ரஷ்யாவில் ‘பிபா’ உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. இன்று மொஸ்கோவில் நடக்கவுள்ள ‘எப்’ பிரிவு லீக் போட்டியில் ஜேர்மனி, மெக்சிக்கோ அணிகள் மோதுகின்றன. ஜேர்மனி அணியை பொறுத்தவரை ‘நடப்பு சம்பியன்’ அந்தஸ்துடன் களமிறங்குகிறது. இதுவரை 4 முறை பட்டம், 8 முறை இறுதி என எதிரணிக்கு அச்சம் தரும் வகையில் வலம் வருகிறது. ‘நம்பர் 1’ அணியான இவர்களை சர்வதேச அரங்கில் அசைப்பது கடினம். இதற்கு, பயிற்சி யாளர் ஜோச்சிம் லோவ் முக்கிய காரணம். கடந்த 12 ஆண்டாக அணியை வெற்றிகரமாக வழிநடத்தி வருகிறார்.

‘இ’ பிரிவு லீக் போட்டியில் பிரேசில், சுவிட்சர்லாந்து அணிகள் மோதுகின்றன.

பிரேசில் அணியின் பெருமையை சொல்லி தெரிய வேண்டியது இல்லை. உலக கிண்ண தொடரில் அதிக முறை (5) பட்டம் வென்று சாதித்துள்ளது.

பீலே, ரொனால்டினோ என பேர் சொல்லும் வீரர்கள் வரிசையில் தற்போது நெய்மர் இணைந்துள்ளார். 26 வயதில் கால்பந்து அரங்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். கடந்த 2014ல் சொந்த மண்ணில் 4 கோல் அடித்தும், கிண்ண வாய்ப்பு கைகூடவில்லை. இந்த ஏமாற்றத்தை நீக்கி மாற்றம் தருவார் என நம்பலாம். இவருடன் கேப்ரியல் என்ற 21 வயது வீரரின் துடிப்பான ஆட்டம் கிடைத்தால், வெற்றியுடன் ஆரம்பிக்கலாம்.




நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம் —கொக்குவில்
**வருடாந்த மஹோற்சவம்**
**18.06.2018-30.06.2018**

18.06.2018- திங்கட்கிழமை கொடியேற்றம்
வசந்த மண்டபப்பூஜை காலை 08.30மணி
கொடியேற்றம் மு.ப 10.00 மணி
20.06.2018- புதன்கிழமை மஞ்சத்திருவிழா
வசந்த மண்டபப்பூஜை மாலை 05.00மணி தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதியுலா
24.06.2018- ஞாயிற்றுக்கிழமை கைலாயவாகனத்திருவிழா
வசந்த மண்டபப் பூஜை மாலை 05.00மணி தொடர்ந்து அம்பாள் கைலாயவாகனத்தில் திருவீதியுலா
26.06.2018- செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழா
வசந்த மண்டபப் பூஜை மாலை 05.00மணி தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதியுலா
27.06.2018- புதன்கிழமை தேர்த்திருவிழா வசந்த மண்டபப் பூஜை காலை 06.30மணி தொடர்ந்து இரதோற்சவம்
28.06.2018- வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் வசந்த மண்டபப் பூஜை காலை 06.30மணி தொடர்ந்து தீர்த்தோற்சவம்
வசந்த மண்டபப் பூஜை பி.ப 03.30மணி தொடர்ந்து திருவூஞ்சல், கொடியிறக்கம்
29.06.2018- வெள்ளிக்கிழமை பூங்காவனம் வசந்த மண்டபப் பூஜை மாலை 05.30மணி தொடர்ந்து பூங்காவனத்திருவிழா
30.06.2018- சனிக்கிழமை சங்காபிஷேகம் காலை 08.00மணி
தேரடி வைரவர் பொங்கல் பி.ப 03.30மணி

“தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்”

பரிபாலனசபை
16.06.2018 கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
(4547)

# தாமரை மொட்டுச் சின்னத்தில் தேர்தலில் களமிறங்கும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள்

## ஜோன் செனவிரத்ன தகவல்



(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தாமரை மொட்டுச் சின்னத் தில் போட்டியிடுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரி வித்துள்ளார்.

தாமரை மொட்டுச் சின் னத்தில் போட்டியிட வாய்ப்பை வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு உறுதியளித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில், தமது அணியை சேர்ந்த 16 நாடாளு மன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் பொதுத் தேர்த லில் தாமரை மொட்டுச் சின் னத்தில் போட்டியிடுவார்கள் எனவும் அவர் தெரிவித் தார். (இ-7)

# கருணை மனு நிராகரிக்கப்பட்ட பேரறிவாளன் உள்ளிட்டோரை தமிழக அரசு விடுவிக்கும்

## தம்பித்துரை நம்பிக்கை



(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள பேரறிவாளன் நளினி உள் ளிட்ட ஏழு பேரையும் விடு விக்க தமிழக அரசு அனை த்து முயற்சிகளையும் மேற் கொள்ளுமென நம்புவதாக நாடாளுமன்ற துணை சபா நாயகர் தம்பித்துரை தெரி வித்துள்ளார்.

சென்னை விமான நிலை யத்தில் நேற்று (சனிக்கி ழமை) ஊடகவியலாளர் களைச் சந்தித்த போது அவர் மேற் கண்டவாறு தெரிவித் தார்.

ராஜீவ் கொலையா ளிகளை விடுவித்தல் தொட ர்பில் தமிழக அரசு உச்ச நீதிமன்றில் அனைத்து வாதப்பிரதிவாதங்களையும் முன்வைக்கும்.

அ.தி.மு.க. அரசை பொறு த்த வரையில் புரட்சித் தலை வியும் முன்னாள் முதல்வரு மான ஜெயலலிதா என்ன முடிவெடுத்திருந்தாரோ, அத ற்கு இணங்க ராஜீவ் கொலைக் குற்றத்தில் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்களை விடுதலை செய்ய நட வடிக்கை எடுக் கப்படுமென தம்பித்துரை தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 27 வரு டங்களாக சிறைத் தண் டனை அனுபவித்துவரும் பேரறிவாளன், நளினி, சாந் தன் உள்ளிட்ட ஏழு பேரை யும் விடுவிக்கக் கோரி இர ண்டு முறை மத்திய அரசி ற்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியிருந்தது.

எனினும் குறித்த இரு கடிதங்களும் நிராகரிக்கப் பட்ட நிலையில் மீண்டும் ஜனாதிபதியின் கவனத்திற்கு அமையுமாறு தமிழக அரசு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

இதேவேளை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தால் குறி த்த மனுவும் நிரா கரிக் கப்பட்டுள்ள நிலையில் தனது மகனை கருணைக் கொலை செய்துவிடுமாறு பேரறிவா ளனின் தாய் அற் புதம்மாள் கோரிக்கை விடுத் துள்ளார்.

இந் நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரு பவர்களை விடுதலை செய் யக் கோரி கோரிக்கைகள் வலுப் பெற்று வரும் நிலை யில் துணை சபாநாயகர் இவ்வாறு கருத்துத் தெரி வித்துள்ளமை குறிப்பிட த்தக்கது. (இ-7)

# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் உடன் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும்

## தபால்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தில் ஈடு பட்டுள்ள தபால் சேவை ஊழி யர்கள் அனைவரையும் உட னடியாக சேவைக்கு சமுகம ளிக்குமாறு தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன வேண் டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை தபால் தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள் சாதாரண மானவை என தபால் திணைக்களம் தெரிவித் துள்ளதாக தகவல் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக் கையில் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் கால ங்களில் நியாயமான தீர் வினை பெற்றுத் தருவதாக வும் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. இதேவேளை தபால் தொழிற்சங்க ஊழியர்கள் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரி ப்பு நேற்று 6ஆவது நாளா கவும் தொடர்ந்தமை குறிப்பி டத்தக்கது. (இ-7)

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ள தாக சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

வருடத்தின் இதுவரை யான காலப்பகுதியில் எலிக் காய்ச்சலினால் 1,710 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சின் தொற்று நோய் பிரிவு தெரிவித்துள் ளது.

அதனடிப்படையில் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் எலிக்காய்ச்சலால் 163 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 6 மாதங்களில் களுத்துறை யில் மாத்திரம் 245 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட் டுள்ளதாக தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் எலிக்காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக் கொள் வதற்கான விசேட சுகாதார நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பா ளர் பபா பலிஹவடன தெரி வித்துள்ளார். (இ-7)

# முன்பள்ளி மெய்வல்லுநர் விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள் ளியின் மெய்வல்லுநர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளி பொற் பதி அறிவாலயத் தலைவர் சண்.வாமதேவன் தலைமை யில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக திருநெல்வேலி நொதேன் சென்ரல் வைத்தி யசாலை பணிப்பாளர் எஸ். பொன்னுசாமி, சிறப்பு விரு ந்தினர்களாக யாழ்.கல்விவலய முன்பள்ளி ஓய்வுநிலை உத விக் கல்விப்பணிப்பாளர் கவிமல நாதன், யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டல் தொழிலதிபர் திஜெய சீலன், கொக்குவில் டெய்லிபூட் சிற்றி உரிமையாளர் சி.யோக பாலன், யாழ்ப்பாணம் கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அகிரு பாகரன், யாழ்ப்பாணம் விவ சாயத் திணைக்கள அபிவிரு த்தி உத்தியோகத்தர் ஆரிய ரத்தினம் தரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# பக்தி ரச கீதங்கள்

(யாழ்ப்பாணம்)

வேலம்பிராய் கண்ணகை சிவகாமி அம்மன் தேவஸ் தான தேர்த்திருவிழா நாளை மறுதினம் 19ஆம் திகதி முற்ப கல் 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அம் பிகை தேரில் ஆரோகணி த்த வேளை ஆலய முத ன்மை மண்டபத்தில் கலை மாமணி க.லோகேஸ்வர னின் பக்திரச கீதங்கள் இசை யரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும். (இ

# இராசி பலன்

**மீனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள் ளைகளின் நலனில் அக்கறை கூடும், அரைகுறையாக இருந்த பணிகளில் மீதியும் தொடர்வீர்கள்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆதாய மில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ் வீர்கள், குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உரு வாகும், முயற்சிகளில் முன் னேற்றமுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங் கள் ஏற்படலாம், புதிய நட்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்:** சுவாரஸ்யமான சம்பவங் கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் இருந்த குழப்பங்கள் குறையும், தெய்வீக சிந்தனை மேலோ ங்கும் நாள்.

**கடகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனு ண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்:** சென்ற இடத்தில் செல்வா க்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகை யுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்தி களால் திகைப்படையலாம், விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உரு வாகும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, புத |
| | இராசி பலன் கிரகநிலை | | சுக், ராகு, சந் |
| கேது, செவ் | சந்திராஷ்டமம் பூராடம், உத்தராடம் | | |
| சனி | | குரு | |

**17.06.2018**

ஆனி 03, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

சதுர்த்தி பிற்பகல் 4.49 மணிவரை

பூசம் முற்பகல் 11.17 மணிவரை

சுபநேரம் 8.53-10.23 மணிவரை

இராகுகாலம் 4.23-5.53 மணிவரை

தந்தையர் தினம், சதுர்த்தி விரதம்

வளவன்

**தனுசு:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடு த்த காரியத்தை நிறைவேற் றுவதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர் கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செய்தொழில் மேன்மை யுண்டு, எதிர்பாராத தன வரவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற எனக்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது

## பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
பிரதி சபாநாயகர் பதவி கிடைத்திருந்தால் பாராளுமன்ற வரலாற்றில் மாத்திரமே இடம்பிடித்திருப்பேன்.

ஆனால் இன்று ஒவ்வொருவருடைய மனங்களிலும் இடம்பிடித்திருக்கிறேன். அதற்காக பிரதி சபாநாயகர் பதவி கிடைக்காமல் தடை போட்டவர்களுக்கு மீண்டும் எனது நன்றிகள் என பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பிரதி விவசாய அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிரதி விவசாய அமைச்சர் பதவியானது மக்களுக்கு சேவை செய்வதற்கு எனக்கு கிடைத்துள்ள வாய்ப்பு. யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் ஆதரவினாலேயே எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. எமக்கு மிகப் பொருத்தமான பதவிதான் கிடைத்துள்ளது. எமது பிரதேசத்தின் வாழ்வாதாரம் விவசாயம். விவசாயத் துறையில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதனை கிளிநொச்சி மக்களுடனான சந்திப்பின் போது உணர்ந்து கொண்டேன். எமது மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இது எனக்கு கிடைத்த பதவி உயர்வு அல்ல. மக்களுக்கு சேவையாற்ற எனக்கு கிடைத்த சந்தர்ப்பமாகவே நான் இதனைக் கருதுகிறேன் எனத் தெரிவித்தார். (இ-4-30)

# வலி.வடக்கில் மீள்குடியேறிய மக்களின் காணிப்பிணக்குகளை தீர்க்க சட்ட உதவி

(யாழ்ப்பாணம்)
வலி.வடக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள காணிகள் தொடர்பாக இது வரை காலமும் தீர்க்கப்படாமல் உள்ள பிணக்குகளை சட்ட ரீதியாக தீர்த்து வைப்பதற்குரிய சகல விதமான சட்ட உதவிகளும் வழங்கப்படவுள்ளதால் சட்டரீதியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய காணிப் பிணக்குகளை எதிர் நோக்கியுள்ள பொது மக்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார்.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பல கிராம அலுவலர் பிரிவுகள் பல ஆண்டுகளுக்கு பின்பு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு உள்ள பல தனியார் காணிகளின் எல்லை நிர்ணயம் உட்பட்ட பல பிணக்குகள் சட்டரீதியாக தீர்க்கப்பட வேண்டியுள்ளதால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன் காரணமாக பொதுமக்கள் தங்களது காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்குரிய இலவச சட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளதால் பொது மக்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-9)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# ஆட்டோ சாரதிகளுக்கு மீளவுயிர்ப்பித்தல் பயிற்சி



(யாழ்ப்பாணம்)
இதய சுவாச மீளவுயிர்ப்பித்தல் பயிற்சி செயன் முறையானது யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை யாழ்.மருத்துவ சங்கம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் உணர்வழியியல் சிகிச்சை பிரிவின் அனுசரணையில் நடைபெற்றது. இப் பயிற்சியின் முடிவில் பயிற்சியில் கலந்து கொண்ட ஆட்டோ சாரதிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டு, இனிவரும் காலங்களிலும் இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் யாழ்.மருத்துவ சங்கம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் உணர்வழியியல் சிகிச்சை பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ

# பசுமாட்டை இறைச்சியாக்கிய கும்பல் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட்டம்




(கரணவாய்)
பசுமாட்டை இறைச்சியாக்கிக் கொண்டிருந்த மூவர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடினர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சாவண்டாந்தை பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெல்லியடி பொலிஸார் நேற்று அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்த முற்பட்டனர். இருப்பினும் குறித்த மோட்டார் சைக்கிள் வேகமாக சென்று மறைந்துள்ளது.

தொடர்ந்து பொலிஸார் சாவண்டாந்தை சந்தைப் பகுதிக்கு இதனை சென்று பார்த்த போது பொதுச்சந்தையில் அமைந்துள்ள இறைச்சிக் கடையின் பின்பகுதியில் பசுமாட்டை வெட்டி இறைச்சியாக்கிக் கொண்டிருந்த மூவர் தமது வாகனத்தை அங்கேயே விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அப் பகுதி வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உட்பட்டது என்பதால் வல்வெட்டித்துறை பொலிஸாரிடமும் சுகாதார பிரிவினரிடமும் இறைச்சியையும் வாகனத்தையும் ஒப்படைத்துள்ளனர். (இ-60)

# வழிகாட்டல் கருத்தரங்கு



(இளவாலை)
புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு யா/வலித்தூண்டல் றோ.க.த.கலவன் பாடசாலையில் கடந்த 14ஆம் திகதி சித்திரமேழி பழனியானந்தன் சன சமூக நிலையத்தின் அனுசரணையுடன் பாடசாலை அதிபர் சி.கணேசராசா தலைமையில் நடைபெற்றது. (இ-104)




# தேசோதய கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டதேசோதய உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும்.

இக் கூட்டத்திற்கு தேசோதய உறுப்பினர்களும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற கூட்டத்தின் பின் உள்ளூராட்சி தேர்தல் சர்வோதய கட்டட புனரமைப்பு போன்ற காரணங்களால் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

எனவே இம் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் விழாவிற்கு அழைத்து செல்லப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு தேசோதய மாவட்டத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-7)

# விளையாட்டு விழாவும் பரிசளிப்பும் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)
புலோலி இளைஞர் கழக விளையாட்டு விழாவும் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு வைபவமும் பாராட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் புலோலி இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் ம.கிரிசாந் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கணனி பொறியியலாளர், முன்னாள் புலோலி கிரிக்கெட் குழுத் தலைவர் காந்தருபன் கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை முன்னாள் பிரதேச சபைத் தலைவர் இ.ஸ்ரீரங்கேஸ்வரன், புற்றளை மகா வித்தியாலய அதிபர் கி.குகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# கூட்டுறவுச் சங்க கட்டடத்தை திறக்க நோர்வே அமைச்சர் பலாலி வருகிறார்

(யாழ்ப்பாணம்)
பலாலி கிழக்கு வயாவிளானில் அமைந்துள்ள விவசாய உற்பத்தியாளர் விற்பனைச் சங்க கட்டடம் நோர்வே வெளிவிவகார அமைச்சரால் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும். (இ

# பாடசாலையை மீள இயங்க வைக்குமாறு மக்கள் கோரிக்கை



(வரணி)
தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மாசேரி வரணி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்திருந்த யாழ்.ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பிற பிரதேசங்களுக்குச் சென்றமையால் மாணவர்கள்வரவின்மையால் 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

பின்னர் மக்கள் மீளவும் குடியமர்ந்து தமது அன்றாட நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்ற போதிலும் இது வரைக்கும் இப்பாடசாலை மீளவும் இயக்கப்படவில்லை.

இதனால் இக்கிராமத்து பிள்ளைகள் அயல் பிரதேச பாடசாலைகளுக்கும் நகர் பாடசாலைகளுக்கும் சென்று கல்வி கற்று வருகின்றனர்.


மேலும் இப்பாடசாலையின் ஓடுகள், மரங்கள் போன்றனவும் இனந்தெரியாதோரால் கழற்றி செல்லப்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளதோடு இப் பாடசாலை அமைந்துள்ள காணியினை தனியார் ஒருவர் அபகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட போது கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தலையிட்டு பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தி அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரு கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு பாடசாலை மிகவும் முக்கியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு மீளவும் இப்பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ள வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# நல்லாட்சி பொதுமக்களால் வெறுக்கப்படும் ஒரு அரசே!

## -கூட்டு எதிரணி எம்.பி. ரோஹித-

(கொழும்பு)



இந்த நாட்டில் பொதுமக்களால் வெறுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் இருக்குமானால், அது இந்த நல்லாட்சி அரசாங்கமாகத்தான் இருக்க முடியும் என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்களப் புது வருடத்தை மாற்றினார்கள், தொழிலாளர் தினத்தை 7 ஆம் திகதிக்கு மாற்றினார்கள், வொட்காவை தண்ணீராக மாற்றினார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித தெரிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் ஒரு புதிய அரசாங்கத்திற்காக காத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

களுத்துறை பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி பொது வேட்பாளரை ஆதரிக்காது

## அமைச்சர் அமரவீர திட்டவட்டம்

(கொழும்பு)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்காது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியான வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எனவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் சிலருடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அமைச்சர் மகிந்த அமரவீர இதனை கூறியுள்ளார். எந்தத் தரப்பினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இளைஞனின் சடலம் மீட்பு

(கொழும்பு)

புஸ்ஸல்லாவவில் நேற்றுக் காலை குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புஸ்ஸல்லாவ வகுகபிட்டிய பாலவல பிரதேசத்தில் வசித்து வந்த துவான் தில்கான் (வயது -24) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (இ-7)


**FLORENCE NIGHHTINGAALE**
School of Nursing

புளோரன்ஸ் நைற்றிங்கேள் தாதியர் பயிற்சிப் பாடசாலை

தாதியராக வைத்தியசாலையில் தொழில் புரிய ஆசைப்படுகின்றீர்களா? ஒரு வருட பாடநெறியினை பூர்த்தி செய்தபின் உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்.

தகைமை:
O/L ஆறு பாடம்
வயது-17-35 வரை



பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 718 6438

கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்.
குஞ்சர் கடையடி, கரணவாய் மத்தி, நெல்லியடி.
(4544)



**ஊர்க்குஞ்சு விற்பனைக்கு**

1 நாள் கலப்பு குஞ்சு, 1 நாள் கீழுத்து வெட்டி, 2 மாத விறாந்துக்குஞ்சு, சேவல் குஞ்சு மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகள்:0778448295



**வீடு விற்பனைக்கு**

பாண்டியன் தாழ்வு பெற்றிக் லேனில் 4 பரப்பு 8 குளி உடன் சேர்ந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
078 397 3120
(4548)



**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (6 வருடங்களுக்கு முன்பு விவாகரத்துப் பெற்றவர்) வயது 48, மிக வசதியான நற்பண்புடைய மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான 40 வயதிற்கு குறைவான பெண்ணை அவரது தாயார் தேடுகின்றார்.

ஜாதகம் சீதனம் தேவையில்லை. மணமகன் சொந்தத் தொழில் செய்பவர்.

தொடர்புகளுக்கு:
077 711 1256, 077 711 1257



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4ம்பாதம்
கி.பா:33 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSC அரசதொழில்
தொ.இ: B/8678

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
தொ.இ: B/8681

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2ஆம்பாதம்
கி.பா: 17 செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: NDT MSC CIVIL ENG. பொறியியலாளர்
தொ.இ: B/8682

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1ஆம்பாதம்
கி.பா: 48
உயரம்: 6'
தகைமை/தொழில்:NDCT QS CIVIL ENG.அரசதொழில்
தொ.இ: B/8685

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4ஆம்பாதம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L AAT
தொ.இ: G/7990

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4ம்பாதம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BBM ஜேர்மன் குடியுரிமை
எதிர்பார்ப்பு: லண்டன்PRமட்டும்
தொ.இ: G/7994

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1ம்பாதம்
கி.பா: 15
உயரம்: 5'
தகைமை/தொழில்: 5'
தொ.இ: G/7998

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ஆம்பாதம்
கி.பா: 44 சூரி செவ் 9 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/7999

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பொலிகண்டி கந்தவன சுப்பிரமணிய சுவாமி ஆலய
கௌரவமிக்க பிரதமகுருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ.
சந்தானராமசர்மா வைத்தியநாதக்குருக்கள் ஐயா
அவர்களிற்கான அன்பு வாழ்த்து



எந்தையாய் நாளும்
சிந்தையில் நிறைந்திருக்கும்
எங்கள் குருவே!
கந்தவனக் கல்யாண வேலவனின்
கருணையதை கற்பூர ஒளியிலே
தாங்கிவந்து இனிதான அன்போடு
இங்கிதமாய் எமக்களித்து
எங்கள் வளர்ச்சிக்காக என்றென்றும்
ஊன்றுகோலாக நிற்கும்....
நாள்தோறும் தெய்வீகமணம் கமழும்
நிந்தன் திருநாமம் - வரும் நாளில்
நீதி அடைகொண்டு புகழை அலங்கரிக்க -
சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்
செய்தமை கண்டு உள்ளம் அடைந்த
பெருவகையால் உளமார வாழ்த்தி
நிற்பதோடு நீண்ட ஆயுளோடு நெடிய
சேவை தொடர நின்பாதம் பணிந்து
வாழ்த்துகின்றோம்.

Congratulations

அன்பான தாயக புலம்பெயர் வாழ்
வளர்ப்புப் பிள்ளைகள்
(4543)

# அமெரிக்க CIA யின் World factbook ல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு

(வோஷிங்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளிநாடுகளைத் தளமாகக் கொண்டு செயற்படும் ஆயுத இயக்கம் என்ற வகைக்குள் அமெரிக்காவின் புலனாய்வு முகவர் நிறுவனமான CIA தனது 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான 'வேர்ல்ட் ஃபக்ட் புக்' (World Fact book) என்ற தலைப்பிலான தமது தகவல் வெளியீட்டு ஊடகங்களில் தரவேற்றம் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன், வெளிநாடுகளைத் தளமாகக் கொண்டு செயற்படும் அமைப்புகளில் இந்திய துணைக் கண்டத்துக்கான அல்கொய்தா, ஹர்ஹத் உல் ஜிஹாதி இஸ்லாம், ஹர்ஹத் உல் ஜிஹாதி இஸ்லாம்- வங்கதேசம், ஜெய்சியே முகமது, லஸ்கர் இதொய்பா ஆகிய ஆயுத அமைப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்துத்துவா அமைப்புகளான விஸ்வ ஹிந்து பரிஷத் மற்றும் பஜ்ரங்தள் ஆகியவை மத ஆயுதக் குழுக்கள் என அமெரிக்காவின் சிஐஏ வகைப்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சிஐஏ சர்வதேச நாடுகள் குறித்த 'வேர்ல்ட் ஃபக்ட் புக்' (World Factbook) என்ற தலைப்பிலான தகவல்களை தம்முடைய இணையத்தளத்தில் ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது.

அண்மையில் இந்தியா குறித்த தகவல்கள் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் என்ற தலைப்பில் அ.தி.மு.க, ஆம் ஆத்மி, காங்கிரஸ் என பல கட்சிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதற்கு அடுத்ததாக அரசியல் அழுத்தம் தரும் குழுக்கள், தலைவர்கள் என ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் குரியத் மாநாட்டு கட்சியை பிரிவினைவாத இயக்கம் என்கிறது.

பஜ்ரங்க் தள் மற்றும் விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகியவற்றை மத ஆயுதக் குழு (militant religious organization) என வகைப்படுத்தியுள்ளது. மதானியின் ஜாமியாத் உலமா இ ஹிந்த், ஒரு மத அமைப்பு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஒரு தேசியவாத இயக்கம் என்கிறது.

பஜ்ரங்தள், விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகியவற்றை மத ஆயுதக் குழுக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு பா.ஜ.க. தலைவர்களும் இந்துத்துவா அமைப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இவை அல்லாமல் இந்தியாவை தளமாக கொண்டு இயங்கும் பயங்கரவாத அமைப்புகள், வெளிநாடுகளை தளமாக கொண்டு இயங்கும் பயங்கரவாத அமைப்புகள் என்கிற பட்டியல்களையும் சிஐஏ ஃபேக்ட் புக் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவைத் தளமாக கொண்டு ஹிஸ்புல் முஜாஹிதீன், இந்தியன் முஜாஹிதீன், ஐஎஸ்ஐஎஸ் ஆகியவை செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய துணைக் கண்டத்துக்கான அல்கொய்தா, ஹர்ஹத் உல் ஜிஹாதி இஸ்லாம், ஹர்ஹத் உல் ஜிஹாதி இஸ்லாம்- வங்கதேசம், ஜெய்சியே முகமது, லஸ்கர் இதொய்பா, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவை வெளிநாடுகளைத் தளமாகக் கொண்டு செயற்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# போர்க்குற்றச்சாட்டுக்குள்ளாகிய மேஜர் ஜெனரல் கல்லகே ஓய்வு



(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரில் முக்கிய பங்காற்றியவரும், போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டவரும், போருக்குப் பின்னர் சர்ச்சைக்குரிய ஒருவர்ாகவும் இருந்த மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

வன்னியில் இறுதிக்கட்டப் போரில், 58 ஆவது டிவிசனின் கீழ் கொமாண்டோ படைப்பிரிவுகளை வழி நடத்தியவர் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே. போரின் இறுதிக் கட்டத்தில், 59 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றினார்.

போரின் போது இடம் பெற்ற மனிதவுரிமை மீறல்களுக்குப்பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளின் வரிசையில் முக்கியமான ஒருவராக இடம்பிடித்திருந்த இவருக்கு எதிராக, பிரித்தானியாவில் சட்ட நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கப்பட்ட போது அங்கிருந்து தப்பி வந்தார்.

அண்மையில் அவுஸ் திரேலியாவுக்கு செல்வதற்கு முற்பட்ட போது, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளால் இவருக்கு நுழைவிசா மறுக்கப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் 51 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்த போது, நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலணி தொடர்பாக விளக்கமளித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் முரண்பட்டு சர்ச்சைக்குள்ளாகியிருந்தார்.

இதையடுத்து, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே உடனடியாகவே, இராணுவத் தலைமையகத்தில் காலாட்படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

வேறு உயர் பதவிகள் அளிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்த இவர் விரைவில் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

இதனால், காலாட்படைகளின் தளபதி பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# இலங்கையின் கடல் வளங்கள் குறித்து ஆய்வு செய்ய வருகிறது நோர்வே கப்பல்


(கொழும்பு)

கடல் வளங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, நோர்வேயின் ஆய்வுக் கப்பலான, Dr Fridtjof Nansen இலங்கைக்கு வரவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை வரவுள்ள இந்த ஆய்வுக் கப்பல், வங்காள விரிகுடாவில் இலங்கையின் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில், 26 நாட்கள், ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த ஆய்வுகளில் இலங்கை மற்றும் நோர்வேயைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் ஈடுபடவுள்ளனர்.

இலங்கை - நோர்வேயிற்கிடையிலான மீன்பிடி தொடர்பான தொழில்நுட்ப மற்றும் நிறுவன ஒத்துழைப்பு திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.



மீன்களின் வளம் உள்ளிட்ட கடல் வளங்களின் தற்போதைய இருப்பு தொடர்பாக மதிப்பீடுகளைச் செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

கடைசியாக, இலங்கையில் 1978 - 1980 காலப்பகுதியில், இந்தக் கப்பல் கடல் வள ஆய்வை மேற்கொண்டிருந்தது. இந்த ஆய்வை மேற்கொள்ளும் நோர்வே கப்பல், நோராட் நிறுவனத்துக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




### நிகழ்வுகள்

❖ 1596 -நச்சு நாடுகாண் பயணி வில்லியம் பாரென்ட்சு ஆர்க்டிக் தீவுக்கூட்டமான ஸ்பிட்சுபெர்கனைக் கண்டுபிடித்தார்.

❖ 1631 -மும்தாஜ் மகால் பிள்ளைப்பேற்றின் போது இறந்தாள். அவளது கணவர் முகலாயப் பேரரசர் ஷாஜகான் அடுத்த 17 ஆண்டுகளுக்கு அவளுக்கான நினைவுச்சின்னம் தாஜ்மகாலைக் கட்டுவதில் முனைந்தார்.

❖ 1885- விடுதலைச் சிலை நியூயார்க் துறைமுகத்தை வந்தடைந்தது.

❖ 1911 - செங்கோட்டை வாஞ்சிநாதன் திருநெல்வேலி ஆளுநர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டு சாவடைந்தான்.

❖ 1929-நியூசிலாந்து மர்ச்சிசன் நகரில் 7.8 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 17 பேர் உயிரிழந்தனர்.

❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் லான்காஸ்ட்ரியா கப்பல் செருமானிய லூப்டுவாபே படையினரால் சென் நசேர் அருகில் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதில் குறைந்தது 3,000 பேர் கொல்லப் பட்டனர்.

❖ 1985- டிஸ்கவரி விண்ணோடத்தில் முதலாவது அரபிய விண்வெளிவீரர் (சுல்தான் பின் சல்மான் பின் அப்துலசீசு அல் சவுதி) விண்வெளிக்கு சென்றார்.

❖ 1992-"கூட்டு ஆயுதக்குறைப்பு" ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ், ருஷிய அரசுத் தலைவர் போரிஸ் யெல்ட்சின் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

### பிறப்புகள்

❖ 1800- வில்லியம் பார்சன்சு, ஆங்கிலேய-அயர்லாந்து வானியலாளர், அரசியல்வாதி (இ. 1867)

❖ 1882 - இகோர் ஸ்ட்ராவின்ஸ்கி, ருஷிய இசைக்கலைஞர், இசையமைப்பாளர் (இ. 1971)

❖ 1883- மயிலை சின்னத்தம்பிப் பிள்ளை ராஜா, தமிழக அரசியல்வாதி (இ. 1943)

❖ 1939 - இயன் கிருகரன், இலங்கை-செருமானியத் தொழிலதிபர்

❖ 1950 - ப. அருளி, தமிழக சொல்லாய் வறிஞர்

❖ 1973 -லியாண்டர்பயஸ், இந்திய டென்னிசு வீரர்

❖ 1976 - ஸ்காட் அட்கின்ஸ், ஆங்கிலேய நடிகர்

❖ 1980 - வீனஸ்வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிசு வீராங்கனை

❖ 1988 - ஸ்ரெபனி றைஸ், ஆத்திரேலிய நீச்சல் வீராங்கனை

### இறப்புகள்

❖ 1631 - மும்தாஜ் மகால், சாஜகானின் மனைவி (பி. 1593)

❖ 1674 - ஜிஜாபாய், மராத்தியப் பேரரசரின் தாயார் (பி. 1598)

❖ 1839 - வில்லியம் பென்டிங்கு பிரபு, பிரித்தானிய இந்தியாவின் 14ஆவது தலைமை ஆளுநர் (பி. 1774)

❖ 1911- வாஞ்சிநாதன், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1886)

❖ 1996 -மதுகர் தத்ரேய தேவ்ரஸ், இந்திய அரசியல்வாதி (பி. 1915)

### சிறப்பு நாள்

❖ தந்தையர் தினம் (எல் சால்வடோர், குவாத்தமாலா)


❖ விடுதலை நாள் (ஐசுலாந்து, 1944)

❖ ஆக்கிரமிப்பு நாள் (லாத்வியா)

❖ பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான போராட்ட நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 200 | 100 | 160 | 140 | 170 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 215 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 250 | 280 | 300 | 160 |
| தக்காளி | 250 | 300 | 240 | 280 | 300 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 180 | 160 | 60 | 140 | 160 | 160 |
| கரட் | 250 | 400 | 200 | 300 | 400 | 280 |
| பூசணி | 50 | 40 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 100 | 120 | 75 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 50 | 35 | 50 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 90 | 160 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 510 | 160 | 200 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 120 | 65 | 100 | 160 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 180 | 160 | 180 |
| லீக்ஸ் | 300 | 400 | 200 | 300 | 400 | 250 |
| பீற்றூட் | 140 | 120 | 60 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 200 | 400 | 70 | 240 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 200 | 280 | 240 | 320 | 250 |
| போஞ்சி | 300 | 400 | -- | 320 | 120 | 200 |
| கத்தரிகுப்பாள் | 120 | 120 | 95 | 140 | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 40 | 35 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 120 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-80 | 30-60 | 70 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | -- | 180 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 300 | 350 | -- | 280 | 280 | 250 |
| முள்ளங்கி | 80 | 150 | 30 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | -- | 60 | 80 | -- |





புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகள் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவர் மு.ஜெகதேவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் கலந்து கொண்டார்.

## ரோஹிதவின் பிறந்தநாள் கொண்டாட்டம்





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடைசி மகன் ரோஹித ராஜபக்ஷ நேற்று முன்தினம் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

தனது நண்பர்களுடன் இணைந்து அவர் தனது பிறந்த நாளை இல்லத்தில் கொண்டாடினார்.

நண்பர்களுடன் அவரது தாயார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் காதலி டட்டியானா ஆகியோர் இதில் இணைந்திருந்தனர்.

பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஷிராந்தி ராஜபக்ஷ தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (இ-7)

### காந்தியைக் கொன்ற கோட்சேவை விடுதலை செய்தவர்கள்

# ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் 7 பேரை சிறையில் வைத்திருப்பது கண்டனத்திற்குரியது

(சேலம்)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதானவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் முத்தரசன் நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்காமல் மத்திய அரசு கபட நாடகமாடுகிறது. ஒருபக்கம் மாநில அரசிடம் கொலையாளிகள் குறித்த விபரங்களை கேட்கிறது. மறுபக்கம் உள்துறை மூலம் விடுதலை செய்ய மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஆயுள் கைதி என்றால் ஆயுள் முழுவதும் சிறையில் இருப்பது அல்ல காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சேவை 13 ஆண்டுகளில் நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருப்பவர்களை அரசு விடுதலை செய்யாமல் இருப்பது கண்டனத்திற்குரியது. விசாரணை அதிகாரிகளே சிலரின் பெயரை தவறுதலாகச் சேர்த்து விட்டதாக கூறியிருக்கிறார்கள். சோனியா காந்தியும் இவர்களை மன்னித்து விட்டதாக கூறியுள்ளார்.

எனவே மத்திய, மாநில அரசுகள் இனியும் காலம் தாழ்த்தாமல் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### அலோசியஸிடம் பணம் பெற்ற விவகாரம்

# சத்தியக் கடிதத்தை வழங்குவதற்கு ரஞ்சன் ராமநாயக்க நிபந்தனை

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸிடம் பணத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்று சத்தியக் கடிதத்தை வழங்க தான் தயாராக இருப்பதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே ரஞ்சன் ராமநாயக்க இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் மோசடிகளையோ, ஊழல்களையே செய்யவில்லை என சத்தியக் கடிதத்தை வழங்கிய பின்னர், தானும் சத்தியக்கடிதத்தை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணை முறிப்பத்திர விவகாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ் தனக்கு மட்டுமல்ல 118 பேருக்கு பணம் கொடுத்துள்ளதாக தயாசிறி ஜெயசேகர முதலில் கூறியிருந்தார்.

அவர் அர்ஜுன் அலோசியஸிடம் 10 இலட்சம் ரூபாவை பெற்றதாக நீதிமன்றத்தில் தகவல் வெளியானதையடுத்தே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்கு 30 இலட்சம் ரூபா பணம் கொடுக்கப்பட்டதாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், அலோசியஸிடம் பணம் பெறாதவர்கள் தாம் பணத்தை பெறவில்லை என சத்தியக் கடிதத்தை வழங்க வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள சிலர் தெரிவித்து வருகின்றனர்.

எது எப்படி இருந்த போதிலும் கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தல் காலங்களில் நாட்டிலுள்ள மிகப் பெரிய வர்த்தகர்கள் அரசியல்வாதிகளுக்கு தேர்தல் செலவுக்கு பணத்தை வழங்குவது வழமை என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்ததுடன், ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அலோசியஸ் முதலாளி 5 கோடி ரூபாவை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மயானத்தில் குழி தோண்டியவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(கொழும்பு)


பிலியந்தல பட்டுவந்தர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மயானத்தில் இறுதிச் சடங்கு ஒன்றிற்காக சிலர் குழி ஒன்றை தோண்டிக் கொண்டிருந்த வேளை அந்த இடத்திற்கு அருகில் இருந்த லொறி ஒன்றை சாரதி அல்லாத ஒருவர் செலுத்த முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தைச் செலுத்த தெரியாத குறித்த நபரால் லொறியை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நான்கு பேர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நால்வரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (இ-7)




கோப்பாய் மத்தி கிராம அலுவலகத்தின் ஒழுங்கமைப்பில் "பார்த்தீனியத்தை ஒழிப்போம் பயிர் வளத்தை காப்போம்" எனும் தொனிப்பொருளில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர்கூடத்தில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வு தாய்மையான கோப்பாய் மத்தி 26 ஆம் கட்ட நிகழ்வாக ஆரம்பமாகி தொடர் சிரமதானம், பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையை முன்னிலைப்படுத்தி நடைபெறவுள்ளதாக கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார். இந்நிகழ்வில் கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் க. அனுஜன், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், உரும்பிராய் கமநல சேவை நிலையத்தின் விவசாய போதனாசிரியர், ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியர், யாழ்.நீதிமன்ற சமுதாய சீர்திருத்த அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (படங்கள்:- பொ. சோபிகா)

# விடுதலைப் புலிகளுக்கு நிதி குற்றஞ்சாட்டப்பட்டோர் விடுதலை

(ரொரண்டோ)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பாளர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு சுவிஸ் சமஷ்டி குற்றவியல் நீதிமன்றம் சிறைத்தண்டனையை வழங்கவில்லை. இந்தக் குற்றம் சுமத்தப்பட்ட 13 பேருக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை அல்லது வழக்கிலிருந்து விடுதலை என்பன தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது. குற்றவியல் அமைப்பில் பங்கெடுத்தமை மற்றும் அதற்கு ஆதரவளித்தமை என்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகவில்லை எனக் கூறிய நீதிமன்று அனைவரையும் சிறையிலிருந்து விடுதலை செய்தது. ஐந்து பிரதிவாதிகள் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலையாகினர். ஏனையோர் நிதிக்குற்றச்சாட்டுக்களுக்கு இன்னமும் முகங்கொடுக்கின்றனர்.



நிதித் திரட்டல் மற்றும் அதனை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை ஒருங்கிணைத்த உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (WTCC) ஒரு குற்றவியல் அமைப்பு அல்ல என்று நீதிமன்று மேலும் தீர்ப்பளித்தது. விசாரணையில் பங்கு பெறுவதற்கான இழப்பீடு, 2009 இல் தொடங்கப்பட்ட விசாரணையின் விளைவு மற்றும் தார்மீக சேதங்கள் ஆகியவை பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்டன.

ஜனவரியில் தொடங்கி மார்ச்சில் முடிக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போது, அரச தரப்புச் சட்டவாளர் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு 6 1/2 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்குமாறு கோரினார். இந்த வழக்கு விசாரணைக்கு $3.85 மில்லியன் ரூபா செலவாகியது.

இந்த 13 பிரதிவாதிகளில் 12 பேர் சுவிஸ் குடியுரிமை பெற்ற தமிழர்கள். மற்றையவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர். குற்றவியல் அமைப்பில் பங்கெடுத்தமை அல்லது அதற்கு உதவியமை, மோசடி, ஏமாற்றல், சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் மிரட்டிப் பணம் பறித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளே இவர்கள் மீது சுமத்தப்பட்டன.

பெருமளவில் ஆயுதப் போராட்டத்திற்கு சுவிசில் உள்ள தமிழ்ச் சமூகத்திடமிருந்து நிதி திரட்டுவதற்கு அதி நவீன அமைப்பு உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் (WTCC) பயன்படுத்தப்பட்டது என்றும் சுவிஸில் உள்ள தமிழ்ச் சமூகம் குறித்த விடயங்கள் முறையாகப் பதிவுசெய்யப்பட்டு அவர்கள் பணம் செலுத்தக் கூடிய இயலுமை மதிக்கப்பட்டதென்றும் பணம் கொடுக்க மறுத்த குடும்பங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்றும் ஜிலியட்டே நோட்டோ என்ற அரசதரப்பு சட்டவாளர் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 7 தமிழர்களின் கருணை மனு நிராகரிப்பு தூக்கிலிருந்து தப்பிய கொலையாளிகள் அதிர்ஷ்டசாலிகள்-சுப்பிரமணியன் சுவாமி

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக 7 தமிழர்கள் விடுதலை கோரிய மனு ஜனாதிபதியால் நிராகரிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், அதனை பா.ஜ.க. சிரேஷ்ட தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வரவேற்றுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள, பேரறிவாளன் உட்பட 7 பேர் 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலேயே இருப்பதால், அவர்களைக் கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என தமிழக அரசு மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியிருந்தது. தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், தமிழக அரசின் கோரிக்கையை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நிராகரித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைப்படி இந்த நிராகரிப்பு நிகழ்ந்துள்ளதாகக்கூறப்படுகிறது.



இதுகுறித்து டுவிட்டரில் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளதாவது.

தமிழக அரசு சட்ட சபையில் நிறைவேற்றியது சட்டவிரோத தீர்மானம். அதனை ஜனாதிபதி நேரடியாகவே தள்ளுபடி செய்துள்ளார். தூக்கில் இருந்து தப்பியுள்ள கொலையாளிகள் அதிர்ஷ்டசாலிகள். இத்தாலியில், முக்கிய குற்றவாளி வசித்து வருகிறார். அவர் தீவிர உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

**Subramanian Swamy**
@Swamy39

Rashtrapati has flatly rejected the stupid Illegal resolution of the TN Legislative Assembly to set Rajiv Gandhi the killer conspirators free. Actually the killers are lucky that they have not been hanged as per SC .The Head conspirator is living in Italy but seriously ailing

3:50 AM - Jun 15, 2018

3,844 1,395 people are talking about this







வடமராட்சி தமிழ்ச்சங்கத்தின் மாதாந்த கலைநிகழ்வு நேற்று முன்தினம் மாலை சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்தில் இடம்பெற்றது. இதில் "சட்டம் தெளிவோம்" எனும் தலைப்பில் சட்டத்தரணி நி.நிரஞ்சித் சிறப்புரையாற்றினார். யாழ்.யோகா உலக மாணவன் காஷ்ரோவின் யோக ஆற்றுகையும் தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கிய "சுழலும் சொற்போர்" நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து மாணவர்களுக்கான மாதாந்த உதவி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. (படங்கள்:- பொ. சோபிகா)

# பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்- தமிழக அரசு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் ஏழு பேரையும் விடுவிக்க தமிழக அரசு தொடர்ந்து முயற்சிக்கும் என தமிழக அரசின் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்தார். சென்னையில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைக்கூறியுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் உட்பட ஏழுபேரையும் விடுதலை செய்யக்கோரிய தமிழக அரசின் மனுவை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நிராகித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனையை ஏற்றே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. ராஜீவ் கொலைக்குற்றவாளிகள் எந்தச்சூழலிலும் சுதந்திரமாக நடமாடமுடியாது என உள்துறை அமைச்சக சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஏழு பேரையும் விடுவிக்க தமிழக அரசு தொடர்ந்து முயற்சிக்கும் என தமிழக சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி உள்ளிட்ட ஏழு பேர் கடந்த 27ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை கைதிகளாக உள்ளனர்.

இவர்களை இந்திய அரசியலமைப்புச்சட்டம் 161 இன் கீழ் விடுவிக்கக்கோரி தமிழக அரசு மத்திய அரசிற்கு கடிதம் எழுதியிருந்தது.

எனினும் இரு கடிதங்களும் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் மத்திய அரசு ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பியிருந்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 3 நாட்களாக எரிந்த தீ கட்டுப்பாட்டில்



(மொனராகலை)

மொனராகலை - ஹோரம்புவ - மில்லகெல வனப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

படையினர், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பிரதேசவாசிகளும் இணைந்து இந்தத் தீபரவலை கட்டுப்படுத்தியதுடன், வரட்சி கால நிலை காரணமாக தீயை அணைக்கக் கடும் சிரமப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில், இனந்தெரியாதவர்களால் வனப்பகுதிக்கு தீ வைக்கப்பட்டதா? என விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# ஞானசாரரின் காவியுடை மீது விமல் வீரவன்ச கரிசனை

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச்செயலர் ஞானசார தேரர், சிறைக் கைதிகளுக்கான உடையை அணியவில்லை என்று சிறைச் சாலை வட்டாரங்களை மேற் கோள் காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தியா எக்னெலிகொடவை, நீதிமன்றத்துக்குள் வைத்து அச்சுறுத்திய குற்றச்சாட்டில், ஞானசார தேரருக்கு ஆறு மாதங்கள் அனுபவிக்கும் வகையில் ஒரு ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையை ஹோமகம நீதிமன்றம் வழங்கியது இதையடுத்து அவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

சிறைச்சாலையில் தண்டனைக் கைதிகள் வழக்கமாக அணியும் அரைக் காற்சட்டையை ஞானசார தேரர் அணியவில்லை. தொடர்ந்தும் அவர் காவி உடையுடனேயே இருந்து வருகிறார்.



அவர் சிறைக் கைதிகள் அணியும், அரைக்காற்சட்டையை அணிவதில் இருந்து விலக்கு அளிக்குமாறு விண்ணப்பித்துள்ளதாக கூறப்படுகிறது. சிறைச்சாலையில் ஞானசார தேரரைச் சந்திக்க யாரும் அனுமதிக்கப்படவில்லை.

அவரை வைத்தியர் ஒருவர் பரிசோதித்து, பாதத்தில் இருந்த காயங்களுக்கு சிகிச்சை அளித்தார். ஞானசார தேரருடன் 14 சிறைக்கைதிகள் ஒரே அறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஞானசார தேரர் சிறைச்சாலையில். காவி உடையை அணிவதற்கு அனுமதி அளிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கடிதம் எழுதியுள்ளார்.

இதனிடையே, ஹோமாகம நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, ஞானசார தேரரின் சட்டத்தரணிகள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாவற்குழியில் திருவாசக அரண்மனை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மண் திருவாசகத்தை உயிர்ப்புடன் பேணும் மண் என்றால் மிகைப்படாது. மார்கழியில் திருமுறைக் காப்பிட்டு திருவாசகப் பாக்களை ஓதும் வழக்கமாயினும் சரி, நீத்தார் சடங்குகளில் திருப்பொற்சுண்ணத்தைப் படிக்கும் மரபாயினும் சரி ஆலயங்களில் மற்றும் மடங்களில் திருவாசக முற்றோதலை மேற்கொள்வதானாலும் சரி திருவாசகத்திற்கு முதன்மை வழங்கும் நடைமுறை இன்றும் தொடர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அமைத்த திருவாசக அரண்மனை 'திருவாசகம் என்றால் யாழ்ப்பாணம்' என்ற உயர் தகுதிப்பாட்டை எம்மவர்க்கு வழங்கியுள்ளது. எதிர்வரும் 24.06.2018 இதன் திறப்பு விழாவும் மறுநாள் திருக்குடமுழுக்கு விழாவும் இடம்பெறவுள்ளன.

### பத்துப் பரப்பில் கோவில் வளாகம்

அவுஸ்திரேலியா சிட்னியில் வாழும் இதய வைத்திய நிபுணர் மனமோகன், சிவகௌரி தம்பதியரின் உபயமாகக் கிடைத்த காணியில் அவர்களின் உபயமாக அமைக்கப்பட்ட கோவில் உயர்ந்து நிற்கிறது. கோவிலில் மூலவராகத் தட்சணாமூர்த்தி. அவர் முன்னால் நந்தியெம்பெருமான் அதற்கும் முன்னால் கற்றேர் அதில் சிவலிங்கத்துடன் மணிவாசகர் என அரண்மனை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களில் அறுநூற்று ஐம்பத்தாறு திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் மனித வலுவினால் உளிகொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

### சிறப்பு மிக்க நாவற்குழி

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது அவரை நாவற்குழியில் இருந்து பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களாம். அவர் அங்கிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பவனியாக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார் என்கின்றனர். யாழ்ப்பாணத்தவரின் உணவுக்களஞ்சியமும் நாவற்குழியிலேயே அமைந்திருந்தது. போர்ச் சூழலில் இதன் அருமை பலராலும் உணரப்பட்டிருந்தது. இந்த உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாகவே கோவில் வளாகம் அமைந்துள்ளது.

### கோவில் அமைவிற்கான கரு

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சொற்பொழிவு ஒன்றிற்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலை சென்ற போதே இக்கரு உதயமானது. திருமந்திரமும் திருவாசகமும் என்ற பொருளில் அவர் உரையாற்றியபோது அங்கிருந்த ஒரு சித்தர் திருமுருகனாரை ஆசீர்வதித்து "திருவாசகத்தை யாழ்ப்பாணத்தில் நீ காப்பாற்றுவாய். காற்று, மழை, நெருப்பு என எவையும் தீண்டாத வண்ணம் அதைப் பாதுகாக்கக் கூடிய பணியை மேற்கொள்ளக்கடவாய்" என்றாராம்.

டிஜிற்றல் யுகத்தில் திருவாசகத்தைக் காப்பாற்ற இணையம் உள்ளதுதானே எனப்பலரும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில் எக்காலத்திலும் அழியாத ஒரு வழியில் திருவாசகத்தைப் பேணும் முயற்சியாக திருவாசக அரண்மனை அமைக்கும் ஆணை மறைபொருளாக அந்தச் சித்தராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பல நற்பணிகளை இன்று எம்மண்ணில் முன்னெடுக்கும் சிவபூமி அறக்கட்டளையின் வாயிலாக இப்பணி நடந்தேறியுள்ளது.

### விமானம் உயர்ந்த கலைக் கோவில் - மூலவராக தட்சணாமூர்த்தி

சோழர் காலக்கட்டடக் கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கோவிலை நினைவுறுத்தும் வகையில் முப்பது அடி உயரத்தில் விமானம் நிமிர்ந்து நிற்கின்றது. அதில் சிவலிங்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. மூலவராக தட்சணாமூர்த்தி காணப்படுகின்றார். இலங்கையில் கருவறையில் தட்சணாமூர்த்தி குடிகொள்ளும் முதற்கோவிலும் இதுதான். கருங்கல்லில் 4 1/2 அடி உயரமுள்ளவராக இந்த ஞானகாரகன் விளங்குகின்றார்.

விமானத்தில் சிவலிங்கங்கள் அமைக்கப்பட்ட கோவிற்சிறப்பும் இங்குள்ள தனித்துவங்களில் ஒன்று எனலாம். ஊரெழு சண்முகநாதனின் கைவண்ணமும் தென்னிந்தியச் சிற்பக் கலைஞர் புருஷோத்தமனின் கலைவண்ணமும் திருமுருகனாரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்துள்ளன. இதைவிட நல்லுள்ளம் படைத்த சான்றோர் பலர் நிதி வழங்கி இக்காரியம் செயற்பட உதவியுள்ளனர். ஏறத்தாழ 400 இலட்சம் ரூபா மதிப்பில் பணிகள் இடம்பெற்றதாக மதிப்பிட முடிகின்றது.





கோவிலின் உட்பிரகாரத்தில் கிழக்கு மற்றும் மேற்கு சுவர்களில் 656 திருவாசகப் பாடல்களும் கருங்கற்களில் கைகளால் செதுக்கப்பட்டுள்ளன. பாரதிபுரத்தைச் சேர்ந்த 29 வயது இளைஞரான விநோத் என்ற கலைஞர் இந்த வரலாற்றுப் பணியைச் செய்துள்ளார். புகழுடற் சின்னங்களில் தம் கைவினையை வெளிப்படுத்திய தேர்ச்சிமிக்கவர். இன்று பக்திசார்ந்த வரலாற்றுப் பணியை மேற்கொண்டு பெருமை பெற்றுள்ளார். இதைவிடக் கிழக்கு மற்றும் மேற்குப்புற உட்பிரகாரத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் 108 மணிகளும் காணப்படுகின்றன. அடியவர்கள் தங்கள் விருப்பப்படி அபிஷேகித்து ஆனந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப் படவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

இதைவிட வாயிலில் சிவபுராணத்தை கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் ஆகிய 12 மொழிகளில் மொழி பெயர்த்து 30 அடி நீளச்சுவரில் அமைத்துள்ளனர். கோவிலில் எவ்வேளையும் திருவாசகம் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒலிப்பொறிமுறையையும் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம், யாத்திரிகர் தங்கும் அறை, பூசகர் அறை, களஞ்சிய சாலை எனக் கோவிலுக்குரிய இதர அம்சங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

### பெருங்கனவு நனவாகியது

சைவாபிமானிகளின் பெருங்கனவொன்று நனவாகியிருக்கின்றது. உலக நாடுகளில் பைபிளை வெள்ளைக் கற்களில் பதித்துள்ளனர். திருக்குர்ஆனை, மகாபாரதத்தை கற்களில் எழுதிப்பதிவு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். சைவபக்தி இலக்கியமாகிய திருவாசகத்தைக் கற்களில் எழுதிய சாதனை யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. இதனை எமது இளம் சந்ததியினர் அவசியம் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டும். பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் இத்தெய்வத் திருப்பணியைத் தமது பிள்ளைகளுக்கு உணர வைக்க வேண்டும். எங்களிடம் இருக்கின்ற இந்து அமைப்புக்கள் மற்றும் பஜனைக் குழுவினர் வருடம் முழுவதும் திருவாசக முற்றோதல் மேற்கொள்ளக் கூடிய நியமத்தை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சிவபூமி என்பதை மெய்ப்பிக்கும் காரியம் ஒன்று திருமுருகனார் வாயிலாக நிறைவேறியிருக்கின்றது. தெய்வம் அவருள் நின்று இயக்கியிருக்கின்றது என்றால் மிகைப்படாது. ஒரு தெய்வத் திருப்பணியை நிறைவேற்றிய அவருக்கு நன்றியுரைக்க வார்த்தைகள் இல்லை.

செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# ஞானசாரருக்கு விடுதலை வேண்டும்

## ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத்தண்டனையிலிருந்து அவரை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தாயகத்தை காக்கும்தேசிய இயக்கத்தின் தலைவர் முருத்தட்டுவ ஆனந்த தேரர் இந்தக் கடிதத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவிக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அவரை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முருத்தட்டுவ ஆனந்த தேரர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார். (இ-7)




### ஆனந்தக் கூத்தாடுதம்மா

பல்லவ தீவின் பவானியே
பாவங்கள் யாவையும் தீர்த்திடும் நாயகியே
பாம்பின் மீது அமர்ந்து அருள் பாலிப்பவளே
படை படையாக வரும் பக்தர் கண்டு
பார்வையிலேயே அருள் மழை பொழிபவளே
உன் மகோற்சவம் காண வேண்டி
என் மனம் ஆனந்தக் கூத்தாடுதம்மா

வ.பவளகேசி
கொய்யாத்தோட்டம்

### துயர் தீர்க்க வாருமம்மா

நயினையில் குடி கொண்ட எங்கள்
நாகபூஷணித் தாயே- எம்
துயரினை ஒருகணம் நீ பாருமம்மா
அதையே தீர்க்க விரைந்தோடி
வாருமம்மா
இரவு வந்தால் பகலும் வருமென
நாம் காத்திருக்கிறோம்
உன்னை விட எமக்கு வேறு கதி
இல்லையம்மா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

### மணிபல்லவத்தின் நாகேஸ்வரியே...!

கலையெழில் கொஞ்சும் இராஜ
கோபுரம் மலைபோல் நிற்க
அலைதவழ் ஆழி சூழ்ந்த
மணிபல்லவத் தீவில் என்றும்
குலைந்திடா இளமை பொங்கக்
குடியிருக்கும் நாகேஸ் வரியே
நிலையின்றித் தவிக்கும் எந்தன்
நெஞ்சினில் அமைதி தாராய்!

சின்னையா சிவபாலன்
கோண்டாவில்



# தீர்வின்றேல் சாகும் வரை உணவு தவிர்ப்பில் குதிப்போம்

## பேருந்து உரிமையாளர் போராட்டம் தொடர்கிறது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை கண்டித்தும் தமக்கு உரிய தீர்வு கோரியும் கடந்த 14 ஆம் திகதி தமது சேவைகளை நிறுத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதோடு மாவட்ட செயலகம் முன்பாக தமது பேருந்துகளை கொண்டுவந்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் தமது போராட்டத்துக்கான தீர்வு கிடைக்கும் வரை தாம் போராடப் போவதாகவும் தீர்வின்றேல் சாகும் வரை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் குதிப்போம் எனவும் தெரிவித்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் முல்லை மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து தமது போராட்டத்தை தொடர்ந்தனர். இந்நிலையில் நேற்று மாலை தமிழரசு கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்துரையாடினர்.

இதேவேளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இவர்களை சந்தித்து கலந்துரையாடி நேற்று முன்தினம் மாலை வடக்கு மாகாண முதலமைச்சருடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் மாலை முதலமைச்சர் இல்லத்தில் சந்திப்பு இடம் பெற்ற நிலையில் உடனடியாக தீர்வை வழங்கமுடியாத நிலையில் நாளை திங்கட்கிழமை போக்குவரத்து அதிகாரசபை மற்றும் பேருந்து உரிமையாளர்களது நிலைமைகளை அறிக்கையிட்டு ஒரு தீர்வைத் தருவதாக தெரிவித்ததாகவும் தீர்வு கிடைக்கும்வரை தமது போராட்டத்தை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்து நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டம் தொடர்கிறது. (2-281)

# விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்

## பிரதி விவசாய அமைச்சர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

(பரந்தன்)

விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படும் என பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்த பிரதி விவசாய அமைச்சர் திருவையாறு பகுதியிலுள்ள சுதந்திர கட்சி பிரதேச சபை உறுப்பினர் இல்லத்தில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டிருந்தார். இதன்போது பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நிறைவில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த பிரதி விவசாய அமைச்சர், விவசாய செய்கைகள் மேற்கொள்ளும் போது இங்குள்ள விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடலில் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் பிரச்சினைகளிற்கு



தீர்வு காண்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்

அத்தோடு விவசாய போதனாசிரியர்களிற்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக காணப்படுகின்றது. குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தென்னிலங்கையில் இருந்து பலர் நியமிக்கப்பட்டனர். குறித்த செயற்பாட்டிற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்து அதனை தடுத்திருந்தோம்.

இதன் பின்னர் குறித்த வெற்றிடங்கள் நிரப்படாமலேயே காணப்படுகின்றது. வெற்றிடங்கள் காரணமாக மாவட்டத்தின் விவசாயம் பாதிக்கும் என்பது உண்மை. குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளேன். அதன் பிரகாரம் விரைவில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என தான் நம்புவதாகவும் அவர் இதன் போது உறுதி தெரிவித்தார். (2-312)




# மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கான பாடசாலை வகுப்பறைக் கட்டடம், அதிபர் விடுதி ஆகியவற்றை கல்வி ராஜாங்க அமைச்சர் வே.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பல்வேறு நிகழ்வுகளில் நேற்று முன்தினம் கலந்து கொண்டிருந்தார்.



இதன்போது குறித்த பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி கட்டடங்களை பாடசாலை பயன்பாட்டிற்கு கையளித்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் உரையாற்றுகையில்,

பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் நான்கு ஆண்டு திட்டத்தில் 70 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 6ஆயிரம் மில்லியன் வடக்குக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் கல்வி வெறுமனே யாழ்ப்பாணம் மட்டும் என நாம் எடுத்துக்கொள்ள முடியாது. வன்னியில் உள்ள மூன்று மாவட்டங்கள் உட்பட கிளிநொச்சியையும் இணைத்து நான்கு மாவட்டமாக யோசிக்க வேண்டும். கிளிநொச்சியின் கல்வி தரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக அண்மையில் பிரதமர் இங்கு வருகை தந்த போது விசேட திட்டங்களிற்காக விசேட கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார். அதற்காக எமது செயலாளர் சென்றுள்ளார்.

எனவே ஏற்றத் தாழ்வில்லாது அனைவரும் சமமான கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் இங்கு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (2)







வவுனியாவில் அனைத்து பள்ளிவாசல்களிலும் நேற்று நோன்புப் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன. நாட்டின் பல பாகங்களிலும் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டதை அடுத்து, வவுனியாவில் அனைத்து பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் நடைபெற்றிருந்தன.

இதேவேளை கிளிநொச்சி நகரில் உள்ள பள்ளிவாசலில் இஸ்லாமியர்கள் நோன்பு தொழுகையில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கிளிநொச்சி கச்சேரி வளாகத்தில் உள்ள தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) நடைபெறும் NVQ சான்றிதழுக்கான தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்குரிய புதிய பிரிவுகள் ஜூலை -02 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

பாடநெறிகளுக்குரிய விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ICTT, Computer, Hardware, Beauty culture ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் தற்பொழுது எமது தொழிற்பயிற்சி நிலையத்தில்பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 21-06-2018 ஆகும்.

கற்கை நெறிகள் யாவும் சிறந்த தொழில் வாய்ப்பை பெற விரும்பும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு பயன் மிக்கதாகவும் கட்டணம் இன்றி கற்கக் கூடிய வாய்ப்பையும் தருகின்றது.

எனவே இறுதித் திகதிக்கு முன்னர் நேரடியாக விண்ணப்பங்களை பெற்று நிரப்பி சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். கற்கை நெறிகள் யாவும் தேசிய தகைமை மட்டம்-4 இற்குரிய சான்றிதழுக்கானவை ஆகும்.

மேலதிக தகவலுக்காக (VTA) கச்சேரி வளாகம், கிளிநொச்சி அல்லது கல்வி இணைப்பாளர் உதினேஸ்குமார் 077 668 4302 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவலை பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வரட்சி நிவாரண உதவித்திட்டம் 300 குடும்பங்களுக்கு வழங்கிவைப்பு

(மன்னார்)

நாட்டில் நிலவிய வரட்சி காரணமாக கிளிநொச்சியை சேர்ந்த பல்வேறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அநேகமான குடும்பங்கள் விவசாயம், மீன்பிடி மற்றும் தோட்டச் செய்கையில் பாரிய அளவில் நட்டத்தை எதிர் நோக்கியிருந்தனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த அநேகமான மக்கள் தங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைத்து தங்களுடைய பெயர் விபரங்கள் மற்றும் நட்ட விபரங்களை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திலும் பதிவு செய்துள்ளனர்

இந்த நிலையில் வரட்சியால் பாதிக்கப்பட்ட தேவையுடைய 300 குடும்பங்களுக்கு மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினரால் வரட்சி நிவாரண உதவி திட்டம் வழங்கிவைக்கப்பட்டது. குறித்த வரட்சி நிவாரண உதவி திட்டத்தின் பயனாளிகள் தெரிவானது, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும்மன்னார்மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவர் இருவருக்கும் இடையிலான கலந்தாலோசனையின் பின் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் முன்மொழிவின் அடிப்படையில் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மிகவும் பின் தங்கிய வரட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட பரமன்கிராய் மற்றும் கௌதாரி முனை, ஞானிமடம், செட்டியார் குறிச்சி, கொள்ள குறிச்சி ஆகிய ஐந்து கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. வரட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் சுமார் 4ஆயிரம் ரூபா பெறுமதியான மா, சீனி, அரிசி உள்ளடங்கலான வரட்சி நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (2)

# காணிகளற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் முழுமையாக்கப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் குறைந்த நிதியொதுக்கீடுகளில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களைப் பூரணப்படுத்துவதற்கும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென பிரதேச பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.

கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கண்டிக்குளம் சந்திப்பகுதியில் அமைந்துள்ள வீட்டுத்திட்டத்தின் அதிகளவான வீடுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

கடந்த 2010ஆம் ஆண்டிற்குப்பின்னர் காணிகளற்ற குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு அவற்றில் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் வழங்கப்பட்ட நூறு வீடுகளும் முழுமைப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

அதேபோல மீள் குடியேற்றத்தின் பின்னர் நேப் வீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீடுகளில் அதிகளவான வீடுகள் முழுமைப்படுத்தப்படாது காணப்படுகின்றன.

அத்துடன், இந்திய அரசின் நிதியுதவியுடன் புளியம்பொக்கணை, முசிலம்பிட்டி ஆகிய பகுதியில் வழங்கப்பட்ட மாதிரி வீட்டுத்திட்டங்களில் பல வீடுகள் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற வீடுகளை புனரமைத்துத் தருமாறும் பூரணப்படுத்தப்படாத வீடுகளை பூரணப்படுத்துவதற்கான நிதி உதவிகளை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் பிரதேச பொது அமைப்புக்கள் கோரியுள்ளதுடன், கண்டாவளைப் பிரதேசத்தில் ஏராளமான குடும்பங்கள் வீடுகளின்றி வாழ்ந்து வருகின்றன. எதிர்காலத்தில் இவர்களுக்கான வீட்டுத்திட்டங்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பிரதேச பொது அமைப்புக்கள் கோரியுள்ளன. (2-312)

உன்னையே நீ அறிவாய்.

– சோக்கிரட்டீஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அறிவாயுதத்துடன் எம் இளைஞர்கள் தமிழினத்தை வழிநடத்த வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கான புத்துருவாக்கப் பணிகள் நடந்தவண்ணமுள்ளன.

இன்றுவரை தமிழினம் விழித்திருந்து தனக்கெதிரான சதித்திட்டங்களை உடைத்தெறிகிறது எனில் அதற்கு மூலகாரணம் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட நம் இளைஞர்களே என்றால் அது மறுக்க முடியாத நிதர்சனமாகும்.

இளைஞர்கள் அதர்மத்துக்கு அநீதிக்கு எதிராகச் சதா சிந்திப்பவர்கள். அவர்களிடம் பதவி ஆசை கிடையாது. பகட்டுச் சிந்தனை கிடையாது. எம் இனம் வாழவேண்டும், யுத்தத்தால் எல்லாம் இழந்துபோன எங்கள் மக்கள் மீண்டும் எழ வேண்டும் என்பதுதான்.

இத்தகைய உன்னதமான நினைப்புகள் அன்று முதல் இன்றுவரை நம் இளைஞர்களிடம் வேரூன்றியிருப்பதால்தான் உலகம் வியக்கும் தியாகத்தை எங்கள் மண் இந்த உலகுக்கு வரலாறாகக் கொடுத்தது.

எத்தனை நாடுகள் திரண்டு எம் இனத்துக்கு துரோகம் இழைத்த போதிலும் எங்கள் இனம் தளராமல் தலைநிமிர்ந்தெழ வேண்டும் என்ற மனத்திடத்தைக் கொண்டுள்ளதெனில், அதற்கு அடிப்படை நேர்மைத்திறன்மிக்க நம் இளைஞர்கள் என்றால் அதில் மிகைப்படுத்தல் எதுவுமில்லை.

அதேநேரம் ஆயுத பலம் முடிவுக்கு வர, அறிவுப் பலத்தோடு எம் தமிழ் இளைஞர்கள் தங்கள் எழுச்சியை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

எனவே எம் இளைஞர்கள் அறிவாயுதத்தைக் கொண்டு தமிழர் தாயகத்தில் நடக்கும் அநீதிகளை, அதர்மத்தனங்களை வெட்டிப் புதைக்க வேண்டும்.

எங்கெல்லாம் ஏழை மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் குரல் கொடுக்க எங்கள் இளைஞர்கள் தயாராகுவது கட்டாயமானதாகும்.

இந்த அறிவாயுதத்தை பயன்படுத்துவதில் அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் இளைஞர்கள் முன்னிற்க வேண்டும்.

வீட்டுத்திட்டத்தில் ஒரு அரச பணியாளர் பேரம் பேசுகிறார் என்றால்; குறித்த வீட்டுத் திட்டத்தை வைத்து ஓர் அரச உத்தியோகத்தர் குரோதம் செய்ய நினைக்கிறார் என்றால் அந்த அலுவலகத்தில் பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அந்த அக்கிரமத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பது அவசியமாகிறது.

எமது உரிமை என்பது முதலில் எங்களால் தடைப்படாமல் இருக்க வேண்டும்.

என் உறவினனுக்குக் கிடைக்க வேண்டியதை நானே தடுத்துக் கொண்டு எனக்கு உரிமை தா என்று கேட்பதில் அடிப்படை நியாயம் இருப்பதாக எவரும் நினைக்க முடியாது.

எனவே அன்பார்ந்த இளைஞர்களே! அறிவாயுதத்தை ஏந்துங்கள். அதனூடு நீதி, நியாயம், நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், கடமை என்பவற்றை வலுப்படுத்துங்கள். இதைச் செய்யும்போது எல்லாம் வெற்றியாகும்.

# முன்னாள் போராளிகளுக்கு வட மாகாண சபை ஒரு திட்டத்தை கூட நடைமுறைப்படுத்தவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இராணுவ அதிகாரி ஒருவரை எங்கள் தமிழ் மக்களும் முன்னாள் போராளிகளும் தோளில் தூக்கும் நிலைக்கு அவர்களை தள்ளியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் என குற்றம் சாட்டியுள்ள ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என்.டக்ளஸ்தேவானந்தா, வடக்கு மாகாண சபை இதுவரை முன்னாள் போராளிகளுக்கு ஒரு திட்டங்களைக் கூட நடைமுறைப் படுத்த தவறிவிட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தலைமைகள் கடந்த காலங்களிலும் தற்போதும் விடுகின்ற பிழைகள்தான் தமிழ் மக்களை துன்பத்தில் ஆழ்த்துகின்றது.

அண்மையில் கிளிநொச்சியில் இராணுவ அதிகாரி ஒருவரை எமது மக்கள் தோளில் தூக்கி கொண்டாடியுள்ளார்கள். இதேபோன்று அவருக்கு மாலை அணிவித்து கௌரவித்து அவரை இடமாற்றம் பெற்று செல்ல வேண்டாம் எனவும் கோரியிருந்தார்கள்.

எமது மக்களுடைய இந்த நிலைக்கு தமிழ் அரசியல் தலைமைகள்தான் காரணம், தமிழ் மக்களு டைய அழிவுகளுக்கு அரசை காரணம் கூற முடியாது. இதற்கு அரசும் காரணம் அல்ல, தமிழ் மக்களுடைய அழிவுகளுக்கு எமது தமிழ் அரசியல் தலைமைகள்தான் காரணம். இந்த சூழ்நிலையை ஏற்படுத்தியதும் இந்த அரசியல் தலைமைகள்தான்.

இவர்கள் அரசியலில் இருந்து கொண்டு சுகபோக வாழ்க்கை அனுபவிப்பதிலேயே குறியாக இருக்கின்றனர். அரசியல் அதிகாரம் இல்லை, ஒன்றுமில்லை என்று கூறிக்கொண்டு தொடர்ந்தும் அந்த பதவிகளிலேயே இருந்து கொண்டு மக்களை ஏமாற்றி தாம் இலாபமடைந்து வருகின்றனர். வடக்கு மாகாண சபை அதிகாரமற்ற சபை என்று கூறிக்கொண்டே, அடுத்த வடக்கு மாகாண சபைக்கு போட்டியிடுவதற்கு தற்போதே ஆயத்தமாகிவிட்டனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகின்றது. இவ்வாறு 38 உறுப்பினர்களுக்கும் ஐந்து வருடத்தில் 98 கோடியே 80 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பணத்திற்கு என்ன நடந்தது? இந்தளவு பணத்தை சேர்த்து முன்னாள் போராளிகள், விதவைகள் என்போருக்கு பல திட்டங்களை ஏற்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் இவற்றை செய்யாமல் அதிகாரம் இல்லை அதிகாரம் இல்லை என்று கூறிக்கொண்டு தாங்கள் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

அதிகாரம் இல்லை என்றால் திரும்ப எதற்காக இவர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தியாவது மக்களுக்கு நன்மைகளைச் செய்து கொடுக்க வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எங்கள் வழிக்கு தற்போது வந்துள்ளார்கள்.

ஆகவே எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை மக்கள் எமக்கு வழங்கினால் அதனை பயன்படுத்தி எமது மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டியவற்றை செய்து கொடுப்போம். புதிய அரசியலமைப்பு என பல விடயங்களை கொண்டு வருவதாக ஆட்சிக்கு வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இதுவரை அதனை நிறைவேற்றியிருக்கின்றதா? எந்த அரசு ஆட்சிக்கு வந்தும் 6 மாதத்திற்குள் தேசிய பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பின்னர் எப்போதும் அது தீர்க்கப்பட முடியாது.

தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் திரும்ப சர்வதேசமாம் என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

முள்ளிவாய்க்காலில் சர்வதேசம் எங்க போனது? இனியும் எங்களை சர்வதேசம் பார்க்கப் போவதில்லை, எங்கள் பிரச்சினைகளை நாங்கள்தான் தீர்க்க வேண்டும்.

எங்களுக்கான ஒரு வாய்ப்பை மக்கள் ஏற்படுத்தி தந்தால் அதனை நாங்கள் சரி வர பயன்படுத்துவோம் என்றார். (ம-4)

# நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை போராட்டங்களை கைவிட மாட்டோம்

## தபால் தொழிற்சங்கம் உறுதி

(கொழும்பு)

எமது கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை வீதிகளில் இறங்கிப் போராடுவோம் என தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

"தபால் ஊழியர்கள் தமது பணிப் புறக்கணிப்பை உடன நிறுத்த வேண்டும். அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஒரு மாத காலத்துக்குள் நிரந்தரத் தீர்வு வழங்கப்படும்" என்று தபால் மா அதிபர் கேட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

"பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மத்திய விநியோகப் பகுதி உட்பட தபால் திணைக்கள ஊழியர்கள் நாடுமுழுவதும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் 13 இலட்சத்துக்கு மேற்பட்ட தபால்கள் மற்றும் பார்சல்கள் நாடு முழுவதும் தேங்கிக் கிடக்கின்றன.

5 நாட்கள் போராட்டம் நீடிக்கபபட்டபோதும் தொழிற சங்கத்தை அழைத்து தபால் அமைச்சர் பேச்சு நடத்தவில்லை.

எமது கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு தரப்படும் வரை தபால் விநியோகப் பணிகளில் ஊழியர்கள் பங்கேற்கமாட்டார்கள்" என்று தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார மேலும் தெரிவித்தார். (ம)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வர்ணாசிரமத் தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமா?**

சத்திரியன் கல்வி கற்றுத் தேர்ந்த பின்பு மக்களைக் காக்கும் பணியில் இறங்கவேண்டும். சத்திரியன், வீரம், அமைதி, கருணை மற்றும் தர்மசீலன் ஆகிய குணங்களைக் கொண்டவனாக இருக்கவேண்டும். தர்மத்தின் வலிமையால் எதிரிகளை வெல்லலாம். சத்திரியன் நீதிமானாக இருக்க முயற்சிக்க வேண்டும். மன்னன் முறையற்ற செயல்களில் ஈடுபடுதல் கூடாது. குடும்ப வாழ்க்கையை முறைப்படிக் கடைப்பிடிக்கலாம். அதில் விரக்தி ஏற்பட்டால் அனைத்தையும் விட்டுவிட்டு நாட்டைப் புதல்வர்களிடம் ஒப்படைத்துவிட்டு வனப்பிரஸ்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். வனவாசத்தின் மூலம் சந்நியாசத்தை அடைந்து மோட்சத்தை அடையலாம். *(தொடரும்)*

# தனியார் மருத்துவமனைக்கான வற் வரி அடுத்த வாரம் முதல் நீக்கம்

தனியார் மருத்துவமனைகளில் அடுத்த வாரம் முதல் வற் வரி அறவிடப்படுவது இரத்துச் செய்யப்படவுள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் கருத்துரைத்த அவர்,

தனியார் மருத்துவமனைகளில் அடுத்த வாரம் முதல் வற் வரி அறவிடப்படுவது இரத்துச் செய்யப்படவுள்ளது.

அரசாங்கம் மக்களுக்காக வழங்கும் நிவாரண வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த வரி இரத்து மேற்கொள்ளவுள்ளதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ம)

## கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள

# இந்திய மீனவ படகுகளை விடுவிக்கத் தீர்மானம்

இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய மீனவ படகுகளை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி 2017ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டுள்ள 216 படகுகளில் 42 படகுகள் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவற்றில் 32 படகுகள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 13ஆம் திகதி இலங்கை அரசாங்கம் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலும் இந்திய மீனவ படகுகளை விடுவிக்க இலங்கை தயாராகவுள்ளதாகவும் அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)





யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளன குழு விளையாட்டு போட்டியின் மென்பந்து மற்றும் எல்லே போட்டிகளில் ஊர்காவற்றுறை பிரதேச சம்மேளன பெண்கள் அணி முதலாம்,இரண்டாம் இடங்களை பெற்றுக்கொண்டது. பெண்களுக்கான மென்பந்து, எல்லே போட்டிகள் கடந்த 15ஆம் திகதி சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான மென்பந்து போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் சம்மேளன அணி சம்பியனாகவும் எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது. (க)

# சகல துறையிலும் அசத்தல் வடமாகாண அணி வெற்றி

பானுஜன், டினோசனின் துடுப் பாட்டம் மற்றும் விதுஸனின் பந்து வீச்சு ஆகியன கைகொடுக்க, வட மாகாண அணி, 135 ஓட்டங்க ளால் இமாலய வெற்றியொன்றைப் பதிவு செய்தது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில், 19 வயது மாகாண அணிகளுக்கிடையிலான 50 ஓவர் கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி தற்போது நடைபெ ற்று வருகின்றது.

தென்மாகாணம், மத்திய மாகா ணம், மேல்மாகாணம் (தெற்கு), மேல் மாகாணம் (மத்தி), மேல் மாகாணம் (வடக்கு), வடமாகா ணம், கிழக்கு மாகாணம், வட மேல் மாகாணம், ஊவா மாகா ணம், வடமத்திய மாகாணம் என 10 அணிகள் இந்தச் சுற்றுப் போட் டியில் பங்கேற்கின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டியொன்று கொழும்பு என். சி.சி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாண அணியை எதிர்த்து வடமத்திய மாகாண அணி மோதியது. நாணயச் சுழ ற்சியில் வென்ற வடமத்திய மாகா ணம் முதலில் களத்தடுப்பில் ஈடு படத் தீர்மானித்தது.

அதற்கிணங்க களமிறங்கிய வடமாகாணம், எஸ்.பானுஜன் மற்றும் ரி.டினோசனின் அரைச்ச தங்களின் உதவியுடன், 47 ஓவர் களில் அனைத்து விக்கெட்களை யும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.பானு ஜன் 55, ரி.டினோசன் 50 ஓட் டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வடமத்திய மாகாண அணி சார்பாக தமித் சமரவிக்கிரம 47 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வடமத்திய மாகாண அணி, வடமாகாண அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியா மல், 36.1 ஓவர்களில் 76 ஓட்டங் களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக அபிஸ்க சேனாதிர 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத் தார்.

பந்துவீச்சில் வடமாகாண அணி சார்பாக ரி.விதுசன் 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை யும், முர்பின் அபினாஸ் 2 விக் கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

# மணற்காடு சென்.அன்ரனீஸ் இளையோர் அணி சம்பியன்

மருதங்கேணிப் பிரதேச செய லக இளையோர் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடை பெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் மணற்காடு சென்.அன்ரனீஸ் அணியை எதிர் த்து செம்பியன்பற்று இளையோர் அணி மோதியது.

போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் களைப் பெற்றிருந்தன. வெற்றியா ளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு நாடப்பட்டது. அதில் சென். அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (க-26)

# கைதடியில் பொது விளையாட்டு மைதானம் உறுப்பினர் கேதீஸ்வரன் வேண்டுகோள்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கைதடியின் 6 கிராம சேவ கர் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஒரு விளையாட்டு மைதானத்தை அமைக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் க.கேதீஸ்வரன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த 7 ஆம் திகதி கொடிகாமத்தில் அமைந்து ள்ள சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக் கையை பிரதேச சபை உறுப்பினர் க.கேதீஸ்வரன் முன்வைத்தார். கைதடியில் 6 கிராம சேவகர் பிரிவுகளிலும் 12 சனசமூக நிலை யங்கள், 6 பாடசாலைகள், 6 விளை யாட்டுக்கழகங்கள், 6 இளைஞர் கழகங்கள் என்பன சிறப்பாக இய ங்கி வருகின்றன.

எனவே இவற்றினுடைய விளை யாட்டு செயற்பாடுகளுக்கும் இளை ஞர் யுவதிகள், சிறுவர்கள் போன் றோரின் பயன்பாட்டுக்கும் கைதடிப் பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்று அமைப்பது அவசியம்.

எமது பிரதேச சபைக்குச் சொந் தமான சுமார் 5 ஏக்கர் காணி J/290 கிராம சேவகர் பிரிவில் பயன்பாட ற்றுக் காணப்படுகின்றது. அதில் 10 பரப்பு காணி வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமாக் கப்பட்டுள்ளது.

எனவே வேறு வேறு திணைக் களங்கள் அக்காணியை தங்கள் பயன்பாட்டுக்கு கோருவதை தவிர் க்கும் முகமாக அக்காணிக்கு எமது பிரதேச சபை எல்லைகள் அமைத்து பராமரிக்க வேண்டும்.

குறித்த காணியில் எமது கைதடிக்கான சிறந்ததொரு பொது விளையாட்டு மைதானம் அமை க்க வேண்டும்.

இதற்கு எமது சபை தவிசாளர், உறுப்பினர்கள் என அனைவரும் ஒத்துழைத்து செயற்பட வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் க.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத் தார்.

இக்கோரிக்கையினை ஆமோ தித்த சபை தவிசாளர் க.வாம தேவன் குறித்த காணி தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து விளை யாட்டு மைதானம் அமைப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என தெரிவித்தார். (க-89)

# இளவாலை யங்ஹென்றிஸின் புட்சால் இரண்டாவது பருவகாலம் ஆரம்பம்



இளவாலை புனித ஹென்றிய ரசர் கல்லூரியின் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ரீதி யிலான புட்சால் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின், இரண்டாவது பருவகால சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இள வாலை சென்.ஹென்றிஸ் கல் லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. முதற்சுற்று ஆட்டங் கள் தொடக்கம் இறுதிப்போட்டி வரையில் இன்றைய தினமே நடைபெறவுள்ளது.

14, 16, 18 மற்றும் 20 வயதுப் பிரிவு என போட்டிகள் நடைபெற வுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா 30 அணிகள் பங்குபற்ற வுள்ளன. முதற்சுற்றில் அணிகளு க்கு தலா 3 சந்தர்ப்பங்கள் வழங் கப்படும். 3 போட்டிகளிலும் தோல் வியடையும் அணிகள் போட்டியி லிருந்து வெளியேற்றப்படும். தொட ர்ந்து காலிறுதி பின்னரான ஆட்ட ங்கள் நொக்கவுட் முறையில் நடைபெறும்.

போட்டி ஒவ்வொன்றும் 15 நிமிடங்களைக் கொண்டது. அதா வது, முதற்பாதியாட்டம் 7 நிமி டங்களைக் கொண்டதாகவும், இடைவேளை 1 நிமிடம் கொண் டதாகவும், தொடர்ந்து இரண்டா வது பாதியாட்டம் 7 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும்.

கடந்த 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற புட்சால் போட்டியில் 14 வயதுப்பிரிவில் கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் கல்லூரியும், 16 வயதுப்பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 18 வயதுப்பிரி வில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், 20 வயதுப்பிரிவில் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி அணியும் சம்பியனாகியிருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

# ஈசாக் கோல் மழை தமிழர் ஐக்கியம் வெற்றி



வடக்கு- கிழக்கு மாகாண வீரர் களை ஒன்றிணைத்து நடத்தப் படும் வடக்கு- கிழக்கு பிறீமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பா ணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நடைபெற்று வருகின்றன.

இதில் தமிழர் ஐக்கிய அணிக் கும் வவுனியா வோரியர்ஸ் அணி க்கும் இடையிலான போட்டி கடந்த 15 ஆம் திகதி இரவு நடைபெற்றது.

முதற்பாதியாட்டத்தில் தமிழர் ஐக்கிய அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து இரண்டாவது பாதி யாட்டத்தில் மேலும் 3 கோல் களைப் போட்டு, 06:02 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. தமிழர் ஐக்கியம் அணி சார்பாக ஈ.ஈசாக் அபா 4 கோல்களையும், ஜக்சன் 2 கோல்களையும் அடித் தனர். (க-26)

## தமிழரசுக் கட்சியை...

போது இலங்கை தமிழரசு கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு நிலை ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாக அந்தக்கட்சியினால் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் கட்சியை புனரமைப்பு செய்வதற்கு நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது

இந்த கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டு இலங்கை தமிழரசுக் கட்சியை பலப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அவற்றிற்கான தீர்வுகள் எடுக்கப்படுவதுடன் அவை நிறைவேற்றுவது என்றும் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

## குற்றவாளிகள்...

களுடன் தொடர்புடையவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை பெற்றுக்கொடுப்பதாகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதாகவும் வாக்குறுதி அளித்தே மைத்திரி- ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் 2015ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியது.

எனினும் நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் மைத்திரி- ரணில் அரசாங்கம் ஆட்சி பீடம்' ஏறி மூன்றரை ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும்குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருப்பதுடன், மீண்டும் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகஅனைத்துத் தரப்பினராலும் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று களுத்துறைபகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரத்ன, கடந்த ஆட்சியின் போது மக்களினதும் நாட்டினதும் சொத்துக்களை கொள்ளையிட்ட கொள்ளையர்களை சட்டத்தின் முன் நிறுத்தி இதுவரை தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாது போனது தற்போதைய ஆட்சியின் மிகப்பெரியகுறைபாடு என ஏற்றுக்கொண்டார்.

எனினும் இந்த நிலை தொடராது என்று குறிப்பிட்ட அமைச்சர் ராஜித விரைவில் அனைத்துக் குற்றவாளிகளும் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு தகுதி தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் என்றும் சூளுரைத்துள்ளார். (ம)

## பாலசிங்கத்தின் அறிவு...

தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் யாழ் இளைஞருடன் சந்திப்பு கலைத்துறைக் கலாமன்ற கருத்தரங்க கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

இன்றைய சமுதாயத்தில் இளைஞரின் பங்கு என்ன? இளைஞர்கள், யுவதிகள் வயதில் குறைந்தவர்கள். ஆனால் வாலிப வலிமை கொண்டவர்கள். அவர்கள் படித்த வாலிபர்கள், யுவதிகள் எனில் பகுத்தறிவு கொண்ட கல்வியே அவர்களின் அணிகலன். விவேகமும் வேகமும் அவர்களின் மேலதிக அணிகலன்கள். ஆகவே அவர்களின் பங்கு என்ன என்று பார்த்தோமானால் பகரமாகப் பதவி பெறக் காத்திருப்பவர்கள் (அதாவது மாற்றாக), பாதுகாக்க வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள், வளர்ச்சிக்கு வித்திட வேண்டியவர்கள் என்று பொதுவாகக் கூறலாம்.

இன்னும் 20, 25 வருடங்களில் நீங்கள் தான் மக்களின் தலைவர்களாக இருப்பீர்கள். அதற்கான ஆரம்ப பயிற்சியை நீங்கள் பெற வேண்டும் என்றே நாங்கள் இளைஞருடனான இந்த சந்திப்புக்களை ஆயத்தஞ் செய்து வருகின்றோம்.

அடுத்து உங்கள் செயற்பண்பு பாதுகாத்தலாக இருக்க வேண்டும். எமது கலை, கலாசாரம், பாரம்பரியம், விழுமியங்கள் போன்ற பலவற்றையும் எமது தலைமுறையினர் உங்கள் கையில் கொடுக்க நீங்கள் அவற்றை உங்கள் காலத்தில் பேணிப் பாதுகாத்துச் சென்று அடுத்த தலைமுறையினருக்குக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யும் போது அவற்றை மேம்படுத்தவும் நீங்கள் முன்வர வேண்டும். சிதைக்கவோ சின்னா பின்னப்படுத்தவோ முனையக் கூடாது. ஒரு நாட்டில் அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியானது இளைஞர் யுவதிகள் கையிலேயே இருக்கின்றன. முதியோரான எமக்கு வலிமை குன்றக் குன்ற வளர்ச்சிக்கு முண்டு கொடுக்கப் போவது நீங்களே.

ஆகவே அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் மதிப்புக் கொடுத்து அதே நேரம் வேகம், விவேகம் ஆகியவற்றை உள்ளடக்கி எமது பாரம்பரியங்களை முன் கொண்டு செல்ல நீங்களே முன்வர வேண்டும். முதியவரின் அனுபவமும் இளையோரின் வேகமும் ஒன்று சேர்ந்தால் ஒரு சமூகம் வெகுவாக முன்னேற்றமடையலாம்.

உங்களுள் தானாகவே எழும் ஒரு குணவியல்பு தான் புரட்சி என்ற மனோபாவம். இது வரை நடந்தவற்றை எல்லாம் ஏற்க மனம் விடாது. புதியனவற்றைப் புகுத்த மனம் துடிக்கும். ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

எமக்கென செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன. அவற்றை நாம் செய்து கொண்டே நாம் பிறந்த இந்த இனத்தின் விடிவுக்காக நாம் பேசும் எமது மொழியின் நீடித்த பாவனைக்காக எமது பாரம்பரியம் அழிந்து போகாமல் இருப்பதற்காக நாம் பாடுபட வேண்டியுள்ளது.

போர்க்காலத்தில் எல்லாவற்றையும் கைவிட்டு விட்டே எம்மவர் இயக்கங்களில் சேர்ந்தார்கள். அது வேறு இன்றைய நிலை வேறு. போரை மையமாக வைத்து நடந்தேறியதே அன்றைய வாழ்க்கை. ஆனால் இன்று அவ்வாறல்ல. ஜனநாயக சூழல் வேறு போர்ச் சூழல் வேறு.

புரட்சி மட்டும் செய்து தெற்கிலும் எமது இளைஞர்கள் பயன் பெறவில்லை வடக்கிலும் எமது குறிக்கோளை நாங்கள் அடையவில்லை. ஆனால் உரிய காலம் வந்ததும் யாவரும் ஒரு இயக்க ரீதியான செயற்பாட்டுக்குள் இறங்க வேண்டி வரும் என்பது நிச்சயம்.

அது வரையில் நீங்கள் உங்களைத் தயார்படுத்த வேண்டும். அறிவு பூர்வமாக எமது குறிக்கோள்கள் என்ன, அவற்றின் தாற்பரியங்கள் என்ன, பன்னாடுகளில் அவற்றை நோக்கி முன்னெடுத்த போராட்டங்களுக்கு என்ன நடந்தது, எவ்வெவற்றை கருத்தில் எடுத்து எமது அரசியல் பவனியை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பது பற்றி எல்லாம் சிந்தித்து அறிந்து கொள்ளுதல் அவசியம். எமக்குள் ஒற்றுமையை வளர்த்தல் அவசியம். எம்மவருக்கிருக்கும் சந்தேகங்களைப் போக்குதல் அவசியம்.

ஆனால் எமது கடமைகளில் தீவிரம் அவசியம். இலஞ்சம், ஊழல் ஆகியவற்றுக்கு இடமளிக்கக் கூடாது. உங்கள் பவனியில் அறிவுடையோர், அனுபவமுடையோர் பல நல்ல விடயங்களை உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கூறுவதைச் செவிமடுப்பதில் குற்றமில்லை. தீர்மானங்கள் உங்களாலேயே எடுக்கப்பட வேண்டும். ஆனால் புதுமை காணும் விதத்தில் நீங்கள் சிந்திக்கப் பழக வேண்டும். பழமையைப் புரிந்து புதுமையை வெளிக் கொண்டுவர நீங்கள் முன்வர வேண்டும்.

தேவைகள் தான் புதிய சிந்தனைகளுக்கு வித்திடுகின்றன. ஆகவே நாங்கள் உங்களிடம் அளிப்பவற்றை என்னவாறு புதிய மெருகுடன் எமது இனத்தின் நலத்திற்குப் பாவிக்கலாம் என்பதை நீங்கள் சிந்தித்து கண்டு பிடிக்க வேண்டும்.

1.முக்கியமானதொன்று உண்டு. எமது வாழ்க்கை முறையில் பிழையானவற்றை தப்பானவற்றை கெடுதல் தருவனவற்றை களையைப் பின்னிற்கக் கூடாது. வீழ்ந்திருப்பவர்களைத் தூக்கி விட வேண்டுமே ஒளிய அவர்களைப் பரிகாசம் செய்யாதீர்கள். காலம் எமக்காகக் காத்திருக்காது. அன்றன்று செய்யு வேண்டிய வேலைகளை, பணிகளை, கடமைகளை அன்றன்றே செய்ய முன் வாருங்கள். கற்றலுக்குக் கால எல்லை இல்லை.

2.இளைஞர்கள் புதிய புதிய சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக் கூடியவர்கள். இன்றைய கால கட்டத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப சிந்திக்க கூடியவர்கள். அவர்களை சரியாக ஆற்றுப்படுத்தினால் எமது வருங்காலம் பெருமை வாய்ந்ததாக அமையும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு விரைவில் முடிவெடுக்கப்படும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டுள்ளார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டு மாலை வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு சென்று தரிசனம் மேற்கொண்டுவிட்டு கேப்பாப்பிலவில் போராட்டம் மேற்கொள்ளும் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

இந்நிலையில் அங்கு சென்று இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர்கள் போராட்டம் மேற்கொள்ளும் மக்களுக்கு காணிவிடுவிப்பு தொடர்பில் தாங்கள் எடுத்துக்கொண்ட முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்கள்.

இதன்போது ஜனாதிபதியை காணிவிடுவிப்பு தொடர்பில் சந்தித்துள்ளதாகவும் அவர் விரைவில் படைஅதிகாரியினையும் என்னையும் அழைத்து ஜனாதிபதி அலுவலகத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். இது இரண்டு கிழமை அல்லது பத்து நாட்களுக்குள் நடைபெறும் என்று போராட்ட மக்களுக்கு கருத்து தெரிவித்துள்ளதுடன் மக்களின் காணி நிலைப்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் கேப்பாப்பிலவு மக்களின். காணிவிடயம் சம்பந்தமாக தமிழரசு கட்சியின் முயற்சி நீண்டகாலமாக தொடர்ந்துள்ளது. அண்மையில் 136 ஏக்கர் காணி விடப்பட்டுள்ளது அதற்கு முன்பாகவும் வேறு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் மக்களின் கணிப்பின் படி 73 ஏக்கர் காணி இன்னும் விடுபடவேண்டும் இந்த காணிவிடுவிப்பு சம்பந்தமாக நாங்கள் அதிக முயற்சி எடுக்கின்றோம். கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியினை நான் நேரடியாக சந்தித்து கடிதம் ஒன்று கொடுத்து காணி விடுவிப்பு சம்பந்தமாக பேசியுள்ளேன் விரைவில் ஒரு முடிவு எடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

# புகையிரதத்தின் மீது கல்லெறித்தாக்குதல் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயம்

## கொடிகாமம் பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தின் மீது கல்லெறித் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் இருந்து 7 மணிக்கு புறப்பட்ட புகையிரதம் கொடிகாமம் பகுதியில் 7.30 மணியளவில் கடக்கும் போது இனம் தெரியாதவர்களினால் கல்லெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது புகையிரதத்தில் பயணித்த கடற்படைச் சிப்பாய் 28 வயதான பெரேரா என்பவரே காயங்களுக்குள்ளாகியுள்ளார். தாக்குதல் நடந்த பகுதிக்கு அண்மையில் உள்ள மிருசுவில் புகையிரத நிலையத்தில் புகையிரதம் தரித்து, காயப்பட்ட சிப்பாயை கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த தாக்குதல் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60,89)

## பாதுகாப்பை காரணம்...

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே பஷில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது ஆட்சி காலத்தில் சில தவறுகள் இடம்பெற்றுள்ளன. தேசிய பாதுகாப்பைப் போன்று தனிநபர் பாதுகாப்பு குறித்தும் கவனத்தில் கொள்கின்ற நிலையே தற்போது உலகில் காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி தனிநபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்த முடியாது. தனிநபர் சுதந்திரம் தகவலறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஊடக சுதந்திரம் என்பன முக்கியமானதாகவே கருதப்படுகின்றது. ஆனால் எமது ஆட்சி காலத்தில் காணப்பட்ட சூழல் சுதந்திரங்களுக்கு பிரச்சினை ஏற்படுத்தியது.

உலகில் மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்புடனேயே நாங்கள் போரிட்டோம். எனவே தான் தனிநபர் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களில் குறைபாடு ஏற்பட்டது. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் எல்லை மீறிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது. குறிப்பாக ரத்துபஸ்வல சம்பவத்தை குறிப்பிடலாம். அதே போன்று கட்டுநாயக்க சுதந்திர வலயத்தில் ஏற்பட்ட சம்பவத்தையும் குறிப்பிடலாம்.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறக் கூடாது. தேர்தல் காலங்களில் மேடைகளுக்கு தீ வைத்தனர். இவற்றை தற்போது கவனத்தில் கொள்ளும் போது ஒரு சூழ்ச்சியின் பின்னணியாகவே கொள்ள முடிகின்றது. (ம)

## யாழில் விகாரைகள்...

தெரிவித்த மல்வத்து பீடத்தின் அநுநாயக்க திவன்கும்புரே ஸ்ரீ விமலதர்ம தேரர் , தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கண்டிக்கு சென்றுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கு சென்று ஆசிபெற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போதே மல்வத்து பீடத்தின் அநுநாயக்க திவன்கும்புரே ஸ்ரீ விமலதர்ம தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாணத்திற்கு சென்று விகாரை ஒன்று அமைக்க முடியவில்லை. அங்கு புத்தர் சிலை வைக்க முடியவில்லை. சிங்கள மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க முடியாதளவிற்கு அங்குள்ளவர்கள் நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் கொடுக்கின்றனர். இவை குறித்து அதிகாரத்தில் உள்ளவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

எனவே தான் இடம்பெறும் தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய கல்வி பாடதிட்டத்தில் பௌத்தம், இலக்கியம் மற்றும் வரலாறு போன்ற பாடங்கள் ஒதுக்கப்பட்டு வருவதாக அறியக்கிடைத்துள்ளது. இவற்றை தட்டிக்கேட்க வேண்டும் என தெரிவித்தார். (ம)

## கிளிநொச்சி பரவி...

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் தனியார் காணியில் உள்ள கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மற்றும் வெடி மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியின் உரிமையாளர் தனது கிணற்றினை நேற்று முன்தினம் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதன்போது குறித்த கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மற்றும் பெட்டிகளில் அடைக்கப்பட்ட வெடி மருந்துகள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன், மிகவும் ஆழமான குறித்த கிணற்றில் நேற்று பெருமளவான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசம் விடுதலை புலிகளின் முக்கிய பிரதேசமாக கருதப்பட்டு வந்ததுடன், நீண்டகாலமாக படையினரும் குறித்த பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தொடர்ந்தும் மக்கள் போராட்டம் மேற்கொண்டதை அடுத்து படிப்படியாக குறித்த பகுதிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேறி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மற்றும் வெடிமருந்துகள் அடைக்கப்பட்ட பெட்டிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-315)

## பால்மா விலையை...

க்கு முன்னர் பால்மா உட்பட அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது, ஒருகிலோ கிராம் பால்மா விலையை 70 ரூபாயால் அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபையின் பணிப்பாளர் டீ.ஜீவானந்த குறிப்பிட்டுள்ளார். (ம)

## பிள்ளை...

தலாக அன்பு செலுத்தி அவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமையும் வகையில் அவர்களுக்கு புத்திமதி கூறுமாறும் முதலமைச்சர் பெற்றோர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

முல்லைத்தீவு விஸ்வமடு அட்டைக்குளத்தில் சுற்றுலா மையத்தை நேற்று திறந்துவைத்து உரையாற்றியபோது, முதலமைச்சர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார். (ம)

## தண்டப்...

மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு அமைவாக இந்த தண்டப்பணத்தை செலுத்துவதற்கான கால எல்லை 14 நாட்களில் இருந்து 28 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட மற்றும் வாகனப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க தெரிவித்தார்.

தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக இந்த தண்டப்பணத்தை தபால் அலுவலகங்களில் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை குறைத்துக் கொள்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)


சவுதி அல்மராய், கட்டாருக்கு மே மாதம் 9 பேர் தெரிவாகினர்!
ஜூன் மாத அணியில் நீங்களும் இணைய

| | | |
|---|---|---|
| இலவச விசா கட்டார் | தொழில்நுட்பவியலாளர் மின்னியல், இயந்திரவியல், இலத்திரனியல், மின்பிறப்பாக்கி, குழாய்பொருத்துநர் | 94,600/- |
| டுபாய் ஓமான் பாஃரேன் | தாதியர், பராமரிப்பாளர், பல் மருத்துவ தாதியர், மருத்துவ மாது, உதவியாளர் (ஆண் பெண் இருபாலாரும்) | 115,000/- தொடக்கம் 192,000/- |
| கட்டார் | மோட்டார் சைக்கிள், டாக்சி, பஸ் டிரைவர், Nissan கம்பனி பணியாளர் | 49,200/- தொடக்கம் 82,000/- |
| சவுதி அல்மராய் | விற்பனை உதவியாளர், டிரைவர், மெக்கானிக், வெல்டர், பிளம்பர், A/C தொழில்நுட்பவியலாளர் தொழிலாளர்கள் | 46,200/- தொடக்கம் 73,800/- + கமிஷன் |
| குவைத் | ஹோட்டேல் பணியாளர்கள் Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Commi, Chef | 67,990/- தொடக்கம் 287,650/- + சேவைக் கட்டணம் |

குறிப்பு பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
விபரங்களுக்கு ☎ 0777 324 004, 0773 616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English FAST TRACK to CAREERS
TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,
221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே: 021 - 222 00 11
90, First Floor, Chatham Street, Colombo 1 (C-2903)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-2862)



வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை



வீடு வாடகைக்கு
யாழ்.நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய (4Rooms) மாடி வீடு மேற்தளம் மாத்திரம் வாடகைக்கு.
T.P:- 076 173 4858 (4537)



வகுப்புக்கள்
ஆண்டு 9,10,11,A/L க்கான பிரத்தியேக கணித, வர்த்தக வகுப்புக்கள்.
T.P:- 075 569 5384 (4533)



CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413
(C-2931)



துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
3-5 வேலை நாட்களில்.
UK -550/=
Germany -650/=
France -700/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
Hotline -0777554528



Direct Importers of Motor Vehicles
SMART KINGS (PVT) LTD
JAPAN நேரடி வாகன இறக்குமதியாளர்






(சி-2830)
TOYOTA SUZUKI NISSAN MITSUBISHI HINO CAT ISUZU
Tel: 021.221 6999
Hotline: 077 375 4040
No.12 Point Pedro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)



INFORMATION TECHNOLOGY Park
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure
ITP
OFF.NO :- 021 222 3641 FAX.NO :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
Diploma Cources (06 Month)
Dip.in Microsoft Office
Dip.in Desktop Publishing
Dip.in Information Technology
Dip.in Computer Programming
Online Cource (06 Month)
Dip.in PC Application & Office Management
Workshop (20 Hours)
Internet & e-mail
Webpage Designing & Development
Languages (06 Month)
VB.net PHP
C Sharp Java
விண்ணப்பப் படிவங்களை யாழ் பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 14.06.2018
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 16.06.2018
127,K.k.S.Road, Jaffna, Srilanka
- Executive Officer -
(C-2945)



Parcel.lk மகாராஜா பொதிகள் சேவை GTV Express
நாம் மேலும் பின்வரும் தரமான சேவையை வழங்கிவருகின்றோம்
*வெளிநாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை.
*365 நாள் வாடிக்கையாளர் சேவை.
*குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை.
30 வருடத்திற்கு மேலதிகமாக வாடிக்கையாளர் நன்மதிப்பை பெற்ற ஒரே நிறுவனம்

| 11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| லண்டன் | ஜேர்மனி | அவுஸ்ரேலியா | சுவிஸ் | கனடா |
| Rs.600/- | Rs.600/- | Rs.800/- | Rs.900/- | Rs.900/- |

| கொழும்பு | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| இல. 18/3 டாக்டர் ஈ.ஏகுரே மாவத்தை கொழும்பு 06 | 225, நவலர் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி கிளிநொச்சி. |
| 0112 360926 011 4378164 | 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

(சி-2935)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 170

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 17.06.2018 தொலைபேசி : 021 222 3378




## உலகை காப்பாற்றிய சந்திப்பு



## மஸ்தானா மரிக்காரா

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ..

# ஆலடி மாநாடு



## சிவசேனை இயக்கத்தை உடன் ஆரம்பிக்க வேண்டும்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மாநாட்டில் பண்டிதர் பரமலிங்கம் முகம் கறுத்த படி இருந்தார். பண்டிதருக்கு ஏதோ நடந்து விட்டது என்பதை மாநாட்டு உறுப்பினர்கள் உணர்ந்து கொண்டனர்.

பண்டிதர் ஐயா என்ன நடந்தது. முகம் ஒரு மாதிரியாக, இருக்குது. ஏதேனும் வருத்தம் துன்பமோ. விதானையார் மெல்லக் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:**எங்கட இந்து சமயத்தின்ர எதிர் காலத்தை நினைக்கத்தான் கவலையாக இருக்குது.

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் மாநாட்டில் இருந்தவர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டனர்)

**சாத்திரியார்:**ஒரு முஸ்லிம் இனத்தவரை இந்து சமயத்தின்ர பிரதி அமைச்சராக நியமித்தால் யாருக்குத் தான் கவலை இருக்காது.

**வாத்தியார்:** இந்து சமயத்திற்கு ஆன தலைமை இல்லை. அதனால எங்கட சமயத்தில எல்லாரும் ஏறிச் சவாரி செய்யினம்.

**விதானையார்:** என்னைப் பொறுத்தவரை இந்து சமயத்தைப் பாதுகாக்க வேணுமெண்டால் சிவசேனை அமைப்பை இங்க உருவாக்கிறதுதான் ஒரே வழி.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். சிவசேனை போன்ற அமைப்பு இலங்கையில இல்லையெண்டால், இன்னும் பத்து வருடங்களில் எங்கட இந்து சமயம் இங்க முழுமையாக இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும்.

**சாத்திரியார்:** ஆலடி வைரவருக்கும் ஆற்றங்கரை வீரபத்திரருக்கும் கோயில் கட்டிக் குடமுழுக்குச் செய்யிறதில இங்க இருக்கிறவியளும் புலர்பெயர்ந்து இருக்கிற எங்கட உறவுகளும் கவனம் செலுத்துகினமே தவிர, இந்து சமயத்திற்கென ஒரு பொதுவான தலைமைப் பீடத்தை உருவாக்கிறது பற்றி எவரும் கவனம் செலுத்துகிறதாக இல்லை.

**விதானையார்:** தென்மராட்சியில மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று எங்கட சைவக்கார அரசியல்வாதி ஒருவர் விடாப்பிடியாக நிற்கும் போது பின்ன என்ன எங்கட சமயம் அழியாமல் வளருமோ?

**கங்காணி:** யாழ்ப்பாணத்தில உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின்ர ஏற்பாட்டில கீரிமலை நகுலேஸ்வரத்தில கடந்த சிவராத்திரி தினத்தன்று ஒரு பட்டி மன்றம் நடத்தப்பட்டதல்லோ. அந்தப் பட்டிமன்றத்தை நிறுத்தவேணுமெண்டு ஒருத்தர் படாப்பாடுபட்டவர்.

ஆனால் மஸ்தானை இந்து கலாசாரப் பிரதி அமைச்சராக நியமித்தபோது அதனை எதிர்த்து அறிக்கைவிட அவரால் முடியாமல் போயிற்றுது எண்டால் இதுதான் பாருங்கோ எங்கட நிலைமை.

**மூப்பர்:** அப்ப கீரிமலைப் பட்டிமன்றத்தை நிறுத்த வேணுமெண்டு அவர் விட்ட அறிக்கைக்குப் பின்னால இந்து சமய எதிர்ப்பாளர்கள் இருக்கினம் எண்டு சொல்லுறியள்.

**கங்காணி:** இல்லையெண்டால் பட்டிமன்றத்தை ஏன் எதிர்க்க வேணும்.

**வாத்தியார்:** அறிக்கை விடுகிறதுக்கு ஒரு அமைப்பின்ர பெயர் தேவைதானே. ஏதோ நடக்கிறது நடந்து முடியட்டும். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லுவன் ஆதிச்சமயமாகிய இந்து சமயத்தை அழிக்கி றதுக்கு யார்நினைத்தாலும் நினைத்தவர் அழிந்துதான் போவார். இதுதான் உண்மை.

**மூப்பர்:** அதுசரி வாத்தியார் இந்துசமயம், சைவசமயம் என்ற பாகுபாடும் உண்டோ.

**வாத்தியார்:** எங்கட பெயர்களும் பேப்பரில வர வேணும் என்பதற்காக ஒரு சிலர் இந்து சமயம் எண்டும் சைவசமயம் எண்டும் பிரித்துக்கூறி, தங்களை ஒரு பெரும் தத்துவஞானிகளாகக் காட்டப் பார்க்கினம். இந்து சமயம், சைவசமயம் எண்டு பிரித்துச் சொல்லுறதுக்கு முன்னதாக அந்தச் சமயத்தைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேணும்.

**பண்டிதர்:**வாத்தியார் இண்டைக்கு ஆலடியில் ஒரு தீர்மானத்தை நாங்கள் கட்டாயம் நிறைவேற்ற வேணும்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா என்ன தீர்மானம் எண்டு சொல்லுங்களன்.

**பண்டிதர்:** இலங்கையில சிவசேனை இயக்கத்தை மிக விரைவாக ஆரம்பிக்க வேணும். இந்தப் பணியை எங்கட மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா முன்னின்று செய்ய வேணும்.

ஒவ்வொரு ஊரிலும் சிவசேனை இயக்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்து அவர்கள் மூலம் அங்கங்க நடக்கிற மதமாற்ற நடவடிக்கைகள், சைவ சமயத்திற்கு எதிரான சதித்திட்டங்களை முறியடிக்க ஏற்பாடு செய்வது கட்டாயம்.

**விதானையார்:** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் சரி. நாங்கள் இதை ஒரு தீர்மானமாக எடுப்பம்.

(பண்டிதரின் கருத்தை விதானையார் விசுவலிங்கம் ஆமோதிக்க, குறித்த தீர்மானத்தை ஆலடி மாநாடு ஏகமனதாக நிறைவேற்றியது. கூடவே இந்து இளைஞர்கள் தங்கட சமயத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என்றும் குறித்த தீர்மானத்துடன் ஆலடி மாநாடு ஒரு கோரிக்கையை முன்வைக்கிறது)

தீர்மானத்தை மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களுக்கு அனுப்பிவைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில சிவசேனை இயக்கத்தை ஆரம்பிக்க வேணும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி முடிய விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். விசுவமடுவில் பணியாற்றிய கேணல் ரத்னப் பிரிய பந்து என்ற இரா ணுவ அதிகாரிக்கு அந்தப் பகுதி மக்கள் அழுதழுது பிரியாவிடை வைத்திருக்கினம்.

**பண்டிதர்:** நல்லதைச் செய்தால் மக்கள் அதனை மறக்கமாட்டினம். அந்த இராணுவ அதிகாரி அப்பகுதி மக்களுக்கு உதவி செய்திருக்கிறார். அதால அந்தப் பகுதி மக்கள் அவரின்ர சேவைக்கு நன்றி கூறியிருக்கினம்.

**சாத்திரியார்:**எங்கட அரசியல்வாதிகள் ஒரு வேலையும் செய்யாமல் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கிறதையே தொழிலாகக் கொண்டிருந்தால், எங்கட சனங்கள் தங்களுக்கு உதவி செய்யிறவியளைத்தானே மதிப்பினம்.

**வாத்தியார்:** விசுவமடுவில இராணுவ அதிகாரிக்கு எங்கட மக்கள் செய்த பிரியாவிடை என்பது சிங்களப் பேரினவாதிகளுக்கும் உச்சி அடி என்றுதான் நான் சொல்லுவன்.

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** தமிழ் மக்கள் இராணுவத்தை எதிர்க்கினம் எண்டு சொல்லுறது; தமிழர்களைக் கொன்று குவித்து, தமிழினத்தை அழித்த இராணுவத்தைத்தானே அல்லாமல் மற்றும்படி தமிழ்மக்களின்ர பிரச்சினையை உணர்ந்து கொண்டு- புரிந்து கொண்டு சேவையாற்றினால் இராணுவமாக இருந்தாலும் தமிழ் மக்கள் அவர்களையும் மனிதர்களாகப் போற்றுவினம், நன்றி கூறுவினம் என்பதைத்தான் விசுவமடுச்சம்பவம் உணர்த்திநிற்குது.

**பண்டிதர்:** தமிழ் மக்களைத் தவறாகப் புரிந்து கொண்ட சிங்கள் மக்கள் விசுவமடுவில இராணுவ அதிகாரிக்கு நடந்த பிரியாவிடை பற்றிச் சிந்திக்க வேணும்.

எங்களிட்ட இனபேதம் இல்லை. ஆனா எங்கட இனத்தைக் கந்தறுக்க நினைக்கிறவியளை நாங்கள் தூக்கிப் பிடிக்கமாட்டம்.

அதேநேரம் எங்களை உணர்ந்து கொண்டு எங்களுக்கு உதவி செய்யிறவியளை நாங்கள் மறக்கவும் மாட்டம் என்பதைத்தான் விசுவமடுச் சம்பவம் உணர்த்தி நிற்குது. இதைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை அங்கிகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# சிவபூமியாகிய இலங்கையில் அழிக்கப்படுகிறது சைவசமயம்

இராம- இராவண யுத்தத்திற்கான பேரிகை முழங்குகிறது. சீதை மீது கொண்ட காதல்நெருப்பு இராவணனை உள்ளிருந்து எரிக்கிறது.யார் எதைக்கூறினாலும் அதனைச் செவிமடுக்கும் மனநிலை அவனிடம் இல்லை.

யுத்தத்தில் வென்றால் மட்டுமே சீதையை அடைய முடியும் என்ற நினைப்பில் போரின் விளைவுகளைச் சிந்திக்க அவன் தலைப்பட்டிலன்.

போர் ஏற்பாடு நடக்கிறது.

",...உறங்குகின்ற கும்பகர்ணா எழுந்திராய் எழுந்திராய்..."

என்று போர் வீரர்கள் கும்பகர்ணனை எழுப்புகின்றனர்.

நித்திய வரம் கேட்கப்போய் நித்திரை வரம் கேட்டதன் காரணமாக கும்பகர்ணன் வருடத்தில் ஆறு மாதம் உறங்குகின்ற அவலத்திற்கு ஆளானான்.



## யாழ். பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் இருந்த நந்தியை அகற்றியது யார்?

உறக்கம் அவனுக்கு நிம்மதியைக் கொடுத்தாலும் அண்ணன் இராவணனுக்கு அதுவே பாதகமாக அமைந்தது.

இவ்வாறாக, கும்பகர்ணன் போல இலங்கையில் இந்துசமயமும் உறங்குகின்றது.

சிலவேளை சிவபக்தனாகிய இராவணனின் தம்பி கும்பகர்ணனின் உறக்கம் தான் சைவசமயத்திலும் பரம்பரை வியாதியாக இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

எது பற்றியும் சிந்திக்காமல் பூசை வழிபாடு என்பதோடு மட்டும் இந்து சமயக் குருமார் இருப்பதனால் இந்து சமயத்தைப் பாதுகாக்க முடியாது என்ற உண்மையை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இதை நாம் கூறும் அதே வேளை இந்து சமயத்தைச் சார்ந்த சில பிரகிருதிகள், குருமார்களை மதிக்காமல் அவர்களின் சேவைகளுக்கு உரிய கௌரவம் வழங்காமல் வழக்குக்கணக்கு என்று குப்பைத்தனங்கள் புரிவதாலும் இந்து சமயம் சார்ந்த மதகுருமார்கள் தாமும் தம்பாடும் என்றும் இருந்து விடுவதே சரி என்ற முடிவுக்கு வருகின்றனர்.

இன்னமும் சிலர் பதவியை மட்டும் அலங்கரித்துக் கொண்டு அந்தப் பதவிக்குரிய கடமைகளைச் செய்யாமல் விட்டுவிடுவதாலும் இந்து சமயத்திற்கு யார் எந்தக் கெடுதியும் செய்யலாம் என்பதாக நிலைமை மாறிவிட்டது.

இதற்கு தனித்து இந்து சமயத் தலைவர்கள், குருமார்களை மட்டும் குறை கூறுவது ஏற்புடையதன்று.

பொதுவில் தமிழ் அரசியல் தலைமை தொடர்பில் இந்து சமயத்தவர்கள் தமிழினம் என்று பார்க்க, தமிழினத்தில் இருக்கக்கூடிய ஏனைய சமயத்தவர்கள் தங்கள் சமயம் சார்ந்த வர்களை தமிழின அரசியலின் தலைமையில் இருத்துவது பற்றியே சிந்தித்தனர். இந்தச் சிந்தனையின் வழியில்தான் தந்தை செல்வநாயகத்தின் தலைமையும் முன்னெழுகிறது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

தவிர, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் சைவசமயத்திற்கு முன்னுரிமை கொடுப்பதை அடியோடு தவிர்த்திருந்தனர்.

சிங்களப் பேரினவாதிகள் இலங்கை பௌத்த நாடு என்று கர்ச்சித்தபடி இலங்கை முழுமையிலும் பௌத்த விகாரைகளையும் பௌத்த சின்னங்களையும் நிர்மாணிப்பதில் கவனம் செலுத்த; விடுதலைப் புலிகளோ இலங்கை சிவபூமி என்பதை உச்சரிப்பதில் இருந்து தங்களைத் தவிர்த்திருந்தனர்.

அதேவேளை கத்தோலிக்க மதகுருமாரில் ஒரு பகுதியினரும் அன்ரன் பாலசிங்கம் போன்ற அரசியல் ஆலோசகர்களும் விடுதலைப்புலிகளுடன் மிக நெருக்கமான உறவைப் பேணியதனூடு,

இலங்கை சிவபூமி. இது சிவபக்தனாகிய இராவணனால் ஆளப்பட்டது என்ற வரலாற்று ஆதாரத்தை முன்னிறுத்துவதிலிருந்து விடுதலைப்புலிகளைத் தடுத்திருந்தனர்.

அதேநேரம் இந்து சமய சிவாச்சாரியார்கள் விடுதலைப்புலிகளுடன் ஒரு நெருக்கமான உறவைப் பேணுவதற்கும் முடியாமல் போயிற்று.

வன்னிப் போருக்குப் பின்பாக, இராணுவத்துடன் கலந்துரையாடுவதில் கத்தோலிக்க குருமாரில் ஒரு பகுதியினர் நெருங்கிக் கொண்டனர். அவர்களின் நெருக்கம் பற்றி யாரும் விமர்சிக்கத் தலைப்படவில்லை.

ஆனால் இந்து சமயச் சிவாச்சாரியர்களில் யார் சரி ஒருவர் இராணுவ அதிகாரிகளுடன் கதைத்தால்கூட அதற்கான விமர்சனங்கள் கடுமையாகின.

அதேநேரம் • முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிந்து முட்கம்பி வேலிகளுக்குள் இந்து சமயக் குருமார்கள் அடைபட்டிருக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள் இராணுவத்தின் உபசரிப்புடன் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

இவ்வாறாக இலங்கையில்; ஆட்சியாளர்கள், தமிழ் அரசியல் தலைமை, ´பிற மதத் தலைமைகள், விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள் என ஒட்டுமொத்த அதிகார சக்திகளால் இந்த நாட்டின் ஆதிச் சமயமாகிய சைவசமயம் ஓரங்கட்டப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த உண்மையின் அடிப்படையில்தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையும் கூட்டமைப்பின் போக்கும் தந்தை செல்வநாயகத்தின் சமய வழிக்குத் திசை திருப்பப்படுகிறது என்ற நிதர்சனத்தை இங்கு கூறித்தானாக வேண்டும்.

தவிர, சைவப்பெரு வள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களின் ஈகையால் வந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் இருந்த இரண்டு நந்திகளும் இப்போது அகற்றப்பட்டு விட்டன.

தொல்லியல் தன்மையும் மிகுந்த வைரமும் கொண்ட பழைய தூண்களை அகற்றி புதிய இரு நெடுந்தூண்களை அமைத்ததுகூட, நுழைவாயிலில் இருந்த இரண்டு நந்திகளையும் அகற்றுவதற்காக என்ற தகவல் இன்னமும் வெளிப்படாத உண்மை.

இப்போது கதைக்கக் கூடாது நாங்கள் நிதானமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்று கூறிக் கூறியே காலத்தைக் கடத்தி கடைசியில் சேர். பொன். இராமநாதனின் அடையாளத்தையும் கந்தறுத்து விட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையும் இழுத்து மூடப்படலாம் என்பதே உண்மையாகியுள்ளது.

பேராசிரியர்கள், கல்விசார் பெரியோர்கள் என புத்திஜீவிகள் இருந்தும் நுழைவாயில் நந்தியை மீளவும் வைக்க முடியவில்லை எனும் போது இந்து கலாசார அமைச்சின் பிரதி அமைச்சராக மஸ்தானை நியமித்தால் என்ன, மகாநாயக்கரை நியமித்தால் என்ன அது பற்றி எல்லாம் நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

ஆக, ஒட்டுமொத்தத்தில் இலங்கைத் தீவிலிருந்து இந்துசமயம் விரைவில் ஒதுக்கப்பட்டு விடும் என்பதே உண்மை.

திருநந்தகனடன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

# பழகு... பழகு... நல்லதை பழகு...



வியாபாரி ஒருவர் இரண்டு கிளிகளை வளர்த்தார்.

வியாபாரத்திற்காக வெளியூருக்கு செல்லும் போது, அவரது நண்பர்களான விவசாயியிடம் ஒரு கிளியையும், கசாப்பு கடைக்காரரிடம் ஒரு கிளியையும் கொடுத்து சென்றார்.


திரும்பி வந்து கிளிகளை பெற்றுக்கொண்ட பின், அவைகளுடன் பேச்சு கொடுத்தார். ஒரு கிளி, "நல்லது, நன்றி, வருக, எல்லாம்நலமே..." என்று மிகவும் பண்புள்ள வார்த்தைகளை பேசியது. அதை கேட்டு மகிழ்ந்தார்.

இன்னொரு கிளியோ, "குத்து, கழுத்தை வெட்டு, கொல்லு..." என்று மிக கேவலமாக பேசியது. இதை கேட்டு வருத்தம் கொண்டார்.

"போகும் போது ஒரே குணத்துடன் விட்டுச் சென்ற, இரண்டு கிளிகளும் எப்படி இரு வேறு குணாங்களை வெளிப்படுத்துகின்றன" யோசித்தார்.

இருவேறு விதமான செயற்பாடு உள்ள நண்பர்களே காரணம் என்பது அவருக்கு புரிந்தது. பின், மெதுவாக அந்த கிளியை திருத்தி நல்வழிப்படுத்தினார்.

வசிக்கும் இடம், பழகும் ஆட்களை பொறுத்து நம் குணம் அமையும். இப்போது சொல்லுங்கள், நல்லதுக்கு காலம் இல்லையா என்ன?



சு.இசைப்பிரியன்
யா/நல்லூர் சி.சி.ரி. ஸ்தான
பாடசாலை
S.O.S. சிறுவர் இல்லம்

# அறிந்து கொள்வோம்

1. கோயில்களின் நகரம்- காஞ்சிபுரம்
2. அரபுக்கடல் ராணி- கொச்சி
3. விளக்குகளின் நகரம்- கேரளா
4. வாசனைத் துறைமுகம்-ஹொங்கொங்
5. மாடிக்கட்டட நகரம்- நியூயோர்க்
6. இந்தியாவின் பூந்தோட்டம்- பெங்களூர்
7. அரண்மனை நகரம்- கொல்கத்தா
8. ஏழு குன்றுகளின் நகரம்- உரோம்
9. புனித நகரம்-மக்கா
10. ரொட்டி நாடு-ஸ்கொட்லாந்து
11. கறுப்பு தங்கம்- தென்னாபிரிக்கா
12. மார்ச் 08-உலக பெண்கள் தினம்
13. மார்ச் 11-பொதுநலவாய தினம்
14. மார்ச் 13- உலக சிக்கன தினம்
15. மார்ச் 15- உலக நுகர்வோர் தினம்
16. மார்ச் 21- உலக வன தினம்
17. மார்ச் 22- சர்வதேச குடிநீர் தினம்
18. மார்ச் 23- உலக வளிமண்டல தினம்
19. மார்ச் 24-உலக காச நோய் தினம்
20. மார்ச் 27- சர்வதேச நாடக தினம்

P.Lukshika
Gr.10
S.O.S. Children's Village
Jaffna.

# நுவரெலியா



நுவரெலியா இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு மாநகரமாகும். எப்போதும் குளுகுளுவென வானிலை இருப்பது இதன்சிறப்பம்சமாகும்.

பசுமையான புற்தரைகளுடன்பசுமையாக விளங்கும் இந்நகரம் பிரித்தானியர் காலத்திலிருந்தே ஒரு விடுமுறைத் தலமாக விளங்கி வருகிறது. தேநீர் தயாரிப்புகான இடங்களும் இங்கு நிறைய உள்ளது.

# சிறுவர்கள் நமது கண்கள்




ஐக்கியப்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பின்படி சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் என்போர் 18 வயதிற்குட்பட்டோர் ஆகும். இவர்களில் வயதில் 8, 10, 12, 14, 16, 18 ஆகிய நிலைகளைக் கொண்ட பிரிவினைகள் இருந்தபோதிலும் இந்த வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் ஆகும்.

இலங்கையில் இருக்கும் சிறுவர்களுக்கான சட்டக்கோவையும் 18 வயதிற்கு உட்பட்ட எவரையும் சிறுவர்களாக கணிக்க முடியும். இவர்களுக்கான உரிமைகள் அனைத்தும் பொதுவாகவே வழங்கப்பட வேண்டும் என்று வரையறுப்புச் செய்து உறுதி செய்துள்ளதையும் காணலாம்.

சிறுவர்களை உருவாக்கும் முழுப் பொறுப்பும் சமுதாயத்திடமே இருக்கிறது. சமுதாயம் ஒரு தொழிற்சாலையாக இருந்து இந்தப் பணியைச் செய்ய வேண்டியுள்ளது.

சிறுவர்கள் மற்றும் அவர்களுக்கான உரிமைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து நினைவூட்டுவதற்கும் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒரு தினம் தேவைப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் ஒக்டோபர் முதலாம் திகதி "சர்வதேச சிறுவர் தினம்" கொண்டுவரப்பட்டது. இவற்றோடு உலக நாடுகளின் அங்கீகாரத்துடன் சிறுவர்கள் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான பிரகடனம் ஒன்றினையும் 1989 இல் நிறைவேற்றியது.

சிறுவர் உரிமை மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான அரச சட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பிற்கான சட்டங்கள் இருந்தபோதிலும் அவர்களுக்கு எதிரான வன்முறையும் துன்புறுத்தல்களும் பாலியல் துஷ்பிரயோகங்களும் தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருக்கின்றன.

இவற்றைத் தடுப்பதில் பாடசாலைகளுக்குப் பெரும் பங்குள்ளது. சிறுவர்கள் வீட்டைக் கடந்து முதல் வருகின்ற இடம் பாடசாலையாகும். பாடசாலைச் சமூகம் சிறுவர்களின் உரிமைகள், அவர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுக்கான எதிர்கால இலக்குகள் குறித்து அரவணைப்புடன் சொல்லிக்கொடுக்க வேண்டும். பெற்றோர்களை அழைத்து இது தொடர்பில் தெளிவூட்ட வேண்டும். அப்போதுதான் ஒரு சுமூகமான ஒழுக்கமிக்க சமூகச்சூழல் உருவாக வாய்ப்பேற்படும்.






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## பக்தி என்ற பெயரில் ஆலயங்களில் மிருகபலி சரியானதா?

## ஒரு மகனாக தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை?

## அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி உண்மையைச் சொல்லாமல் இருப்பது சரியா?

**சதீஸ்** — தாவடி

**அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி உண்மையைச் சொல்லாமல் இருப்பது சரியா?**

பனங்காட்டு நரிகளுக்கு சலசலப்பு காட்டி எதுவும் வந்துவிடப் போவதில்லை. தம்பி சதீஸ் எதிரிகள் எப்போதும் எமக்கு முன்புதான் நிற்பார்கள். அவர்களை எதிர்கொள்வது எளிது.

ஆனால் துரோகிகள் எமக்கு பின்னுக்கே நிற்பார்கள். அவர்களை இனங்கண்டு கொள்வது மிக்க கடினம். அதற்கெல்லாம் முகங் கொடுத்து மீண்டெழுவதில் தான் இருக்கிறது. எப்பொழுதும் பனங்காட்டு நரியாய் இரு. சலசலப்பு உன்னை ஒன்றும் செய்யாது.

**தனு** — சுணா

**போனால் வெளிநாட்டுக்குத்தான் போவேன் என யாழ்ப்பாணத்துப் பெண்கள் அடம் பிடிக்கிறார்களே?**

தண்ணி, தம் இல்லாத தலைமுடியுடன் இருக்கும் மெல்லிய மாப்பிள்ளையை விட்டு விட்டு சதா தண்ணி தம்முடன் மண்டையில் ஒன்றுமில்லாத மாமா வயது மணமகனுக்குத்தான் இப்போது மவுசு.

எல்லாம் அந்த நாட்டு ஒரு ரூபாய் இங்கு 200 ரூபாய் மதிப்பைத் தருவதன் இரகசியம் தான். விடுங்கள் சென்று நாலு சுவருக்குள் அடைபட்டுக் கிடந்து சொந்த நாட்டின் சொந்த நாட்டு மாப்பிள்ளையின் அருமையைப் புரிந்து கொள்ளட்டும். (சுத்தியமா சொந்த அனுபவம் அல்ல).

**சுதன்** — குப்பிளான்

**தமிழ் மக்கள் கூட்டமைப்பை பழி தீர்ப்பார்களா?**

கூட்டமைப்பைப் பழி தீர்ப்பது என்பதை சற்றுத் திருத்தி தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தவர்களை நிச்சயம் பழி தீர்த்தே தீருவார். இது சர்வ நிச்சயம்.

**தர்மி** — சரசாலை

**எனக்குப் பிடித்ததைச் செய்ய இந்த சமூகம் தடையாக உள்ளதே?**

தம்பி இந்தச் சமூகம் என்பது நாம் பார்க்கும் கண்ணாடி போன்றது. நாம் எப்படியோ அதையே பிரதிபலிக்கும்.

நமக்கு நல்லதாய், சரியாய் படும் சிலவிடயங்கள் சமூகத்திற்குப் பிழையாய்த் தெரியும்.

அதையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நாமுண்டு நம் தேவைகள் உண்டு என்று சமூகத்தை புறம்தள்ளி வாழ்ந்து விடமுடியாது.

அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

**சயன்** — யாழ்ப்பாணம்

**பெண்ணுக்கு பெண் எதிரிபோல் தமிழருக்கு தமிழனா எதிரி?**

உண்மை. தமிழனுக்கு தமிழன் தான் எதிரி. அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலை போய் பேசாமடந்தைகளாய் கிடக்கும் கூட்டமைப்புத் தலைமைதான் அதற்கு நல்ல உதாரணம்.

**மதி** — கோண்டாவில்

**ஜோக் ஒன்று சொல்லுங்கள் வியாசரே?**

டாக்டர் :- என்ன காலில் காயம் என்ன நடந்தது?

**கணவன் :-** அது ஒன்றுமில்லை டாக்டர் என் மனைவி முதன்முதலாக இன்று இட்லி அவித்தாள். அந்த இட்லி கை தவறி எனது காலில் வீழ்ந்துவிட்டது.

டாக்டர் :- ???




**எஸ். நிலா**

**பக்தி என்ற பெயரில் ஆலயங்களில் மிருகபலி சரியானதா?**

மிருகங்களைப் பலியிட வேண்டும் என்று அடம் பிடிப்பவர்கள் முதலில் தங்கள் பிள்ளைகளை கோவில்களில் கொண்டு சென்று பலியிடட்டும் பார்ப்போம். ஆட்டுக்கும் கோழிக்கும் கேட்பதற்கு அம்மா அப்பா இல்லை என்ற எண்ணம் தானே.

**மாதா** — யாழ்ப்பாணம்

**உலகத்தில் சிறந்த நடிகர் யார்?**

சிவாஜி என்பார்கள் சிலர், கமல் என்பார்கள் சிலர், இல்லை இல்லை விக்ரம் தான் என்பார்கள் இன்னுஞ் சிலர். என்னைப் பொறுத்தவரை உன்னை விட சிறந்த நடிகர் இந்த உலகத்தில் இல்லை என்பதைத்தான் நான் சொல்வேன். இது நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

**பரமேஸ்** — வதிரி

**முன்னாள் போராளிகளின் எதிர்காலம்?**

தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் ஆயதமேந்திப் போராடி இறுதியுத்தத்தில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து தடுப்பு எனும் நரகத்தில் இருந்து மீண்டு சமூக நீரோட்டத்துக்குள் இணைந்ததும் புறக்கணிப்புகள். அதிலிருந்து மீண்டெழ போராடிக் கொண்டிருக்க, அடுத்தடுத்து திடீர் இறப்புக்கள், நச்சு ஊசி, புற்றுநோய் என்கின்ற பேச்சுக்கள். இப்படி ஒரு இனத்தின் விடுதலைக்காய் போராடியவர்களின் நிலை மிகத்துன்பகரமானது. அதிலிருந்து அவர்களை மீண்டெழச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய தேவை.

**துபாளன்** — மயிலங்காடு

**பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற அமைச்சர்கள் என பெயர் மாற்றுவோமா?**

அடப்பாவி உறுப்பினர்களாக இருக்கும் போதே வாகனப் பேர்மிட் டீல் சுப்பராகப் போய்க் கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் என்று பெயரையும் மாத்திவிட்டால் என்னென்ன கொடுமைகள் நடக்குமோ?

**நிரு** — கல்வியங்காடு

**கல்லூரி வாழ்க்கை என்பது?**

இழந்த பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்க்க சுகமான விடயங்களில் முதன்மையானது கல்லூரி வாழ்க்கை. அந்த நினைவுகளை தொட்டுப் பார்ப்பது மனதுக்கு இதமானது.

**சாரு** — யாழ்ப்பாணம்

**ஒரு மகனாக தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை?**

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல்**

என்று திருவள்ளுவர் கூறுகிறார். அதாவது ஒரு மகனானவன் தன் தந்தைக்குச் செய்யும் கைமாறு இவன் தந்தை இவனை மகனாய்ப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தேனோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லைக் கேட்பதாகும். இந்த ஒற்றைத் திருக்குறளுக்குள் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருக்கிறது.

**கோபு** — திடலூர்

**தேசத் துரோகிகளை அடக்குவதற்கு நல்லதொரு யோசனை சொல்லுங்கள்?**

தேர்தல் காலங்களில் சரியானவர்களை இனங்கண்டு வாக்களித்தால் போதுமே. பசப்பு வார்த்தைகளுக்கு நம்பி நாசமறுப்பது பின்பு இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு என்ன பயன்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## அழகே!

கறுத்த மேகம் கரைந்து தீண்டும்
அவளின் தேகத்தை
நான் மழையாய்...

அணைத்து ஏந்தும்
அவள் கரங்கள் இரண்டில்
நான் துளியாய்...

அதற்கு அளித்திடும் முத்தம்
அவள் இதழ் வழியாய்...

கடல் அலைந்து அலைந்து
நுகர்ந்து செல்லும் அவளின் பாதத்தை
நான் நுரையாய்...

அவள் அவிழ்த்த அந்த
அடர்ந்த காட்டில் நுழைந்து வருடும்
நானீ காற்றாய்...

அவள் விழியில் நுழைய விரும்பி தினமும்
விசும்பை வில்லாய் வளைத்து
கதிர் கணையை தொடுக்கும்
நான் கதிர் ஒளியாய்...

தேய்ந்து தேய்ந்து வளர்ந்து நின்றேன்
தேவதை உந்தன் இருளை தின்றேன்
நான் முழுமதியாய்...

காந்தல் உன்னை கவர்ந்து செல்லும்
நான் காளையல்ல...

அழகே! உன்னை தினமும்
அள்ளிப் பருகும் நான் மாயையல்ல

இறவி நின் அழகை
இயற்கையாக வருடிச் செல்லும்
நான் இறைவனில்லை...

அழகி உன்னில் திளைத்து
உன்னை நிலைத்து வைத்து நிற்கும்
நான் அகிலம் உந்தன் உலகம் அழகே...!!

ஸ்ரீயோதா
மண்டைதீவு

## சிந்திக்க வேண்டும்

அன்புடை பெற்றோரே
பண்புடை வேந்தர்களாய்
உங்கள் மகவுகளை ஆக்கிவிட
நொடியும் போராடும்
பல உயிர்கள் மத்தியிலே
நாங்களும் ஒருவராய்
அணி செய்வதில்
அத்தனை ஆனந்தம்
நம் கருகிய மனங்களுக்கு

மரங்கள் மனிதம் வாழ உழைத்தாலும்
மரணத்தைத் தழுவிய வண்ணம்
தான் இருக்கின்றது
நாங்களும் அப்படித்தான்

உங்கள் மகவுகள்
கொள்ளும் முறைப்புகளும்
எதிர் பேச்சுக்களும்
கூச்சமின்றிக் கூறுகின்ற பொய்யுரைகளும்
நேரத்தைக் கழிக்கக்கூறும்
பொய்யான காரணங்களும்
ஓயாமல் கரையும் அவர் உதடுகளும்

எம் கண்களைக் குருடாக்கி
காதுகளைச் செவிடாக்கி
உடலை ஊமையாக்கும் போதெல்லாம்
நினைப்பது ஒன்று மட்டும்தான்

என்றோ ஒருநாள் அவர்
நல்லவராய் மாறுவார் என்பதுதான்
இலவு காத்த கிளியின் நினைவுமட்டும் தான்

நி.கவியழகன்
தாவடியூர்



## வேண்டும் விடுதலை

எங்கள் தேசம் எமக்கு வேண்டும்
எங்கள் மொழியும் எமக்கு வேண்டும்
என்று கேட்ட தன்மான தமிழனை
கொன்று குவித்தது கொடூர அரசு


ஆணவம் கொண்ட இலங்கை வேந்தன்
ஆன்மாவை அழித்த வரலாறும் உண்டு
இலங்கைத் தமிழர் ஆன்மாவை அழித்த
சிங்கள தலைவன் தோற்றதும் உண்டு

இனிவரும் காலம் தமிழனுக்கே உரியது
என்று முழங்கும் வலம்புரி சங்கும்
தன்மானத் தமிழன் பொங்கி எழுவான்
தன்னம்பிக்கையை தகர்க்கும் தமிழ்
தலைமைக்கு எதிராக

எதிரி காலில் விழுந்து வாழ்வதை விட
எழுந்து நின்று சாவதே மேல்
என்று கூறிய புரட்சித் தமிழனின்
வரலாற்று வரிகள்
இன்றைய இளைஞரை வழிநடத்தும்

அராலியூர்
ப.தர்மகுமாரன்






## காலச்சக்கரங்கள்

ஆடைமூடும் இடம் தவிர
அங்கமெலாம் சுருக்கங்கள்
அப்பட்டமாய் குடிகொண்ட தேகம்

மோன என்று முகம் நோக்கி
நீட்டினாள் திருவோடு

திருவோடும் அடிவாங்கி
உருக்குலைந்து போனது

பேரனும் பேத்தியும்
கண்டம் கடந்து போயினராம்
அப்பனும் ஆத்தாளும்
அதைத் தொடர்ந்து போயினராம்

அப்பனையும் ஆத்தாளையும்
அந்தரத்தில் ஆடவிட்டு

முன்னே முழுமதியாய் திகழ்ந்தாளாம்
பின்னே பேரன் பேத்தி கண்டாளாம்

பார்த்து எடுக்கவென பக்குவமாய் ஒருத்தி
நொந்து நோகாமல் நூதனமாய் அவதரித்தாள்

செத்தேன் சிவனென்டு
சீவனாரும் போனாராம்
அந்தரத்தில் ஆடினாள் கிழவி

ஆடிய காலும் ஆடிய கையும்
அடங்கிக் கிடவாமல்
அயலாரைச் சேராமல்
அடியோடு பெயர்ந்தாள்

முருகனுக்கு தங்க மாலை
தருவதாக சொன்னாளாம் அன்று

முருகன் திருவோடு தனையீந்து
இருத்திக்கொண்டானாம் தன்னோடு இன்று

எனை விலகி நீளும் திருவோடு
அமெரிக்க டொலர் ஒன்று அன்பாய் சிரித்தது

இட்டவன் தான் ஈன்றவன் மகன்
என்று அறியாமல்
சிரிக்கிறாள் கிழவி– சேர்ந்தே
சிரிக்கிறது... திருவோடும்

மா.சிவா
கரவெட்டி மேற்கு

## இறைவனின் பரீட்சை

இறைவனே நடத்தும் பரீட்சையது
ஜனனமே நீ போடும் முதற்சுழியாகி
மரணமே முடிவாகிறது
இது முடியும் காலம் தெரிவதில்லை
தெரிந்து விட்டால்
எழுதுவதில் தெளிவு இருப்பதில்லை
உன் தலைவிதியாய் நீ எழுதும்
பரீட்சையது வாழ்க்கை
பரீட்சைத்தாளை ஆயுட்காலமாக்கி
கேள்விக் கணைகளாய்
சந்தர்ப்ப சூழ்நிலைகளை அவன் தொடுக்க
செயல்மூலம் விடை எழுதி
அதை நீ சமாளிக்க
இடையிடையே தடைகளை அவன் புகுத்தி
வேடிக்கைதான் காட்ட
வேடிக்கை வெற்றியாகும் போது
மகிழ்ச்சியையும் தான் வழங்கி
அதுவே தோல்வியாக
வேதனையும் தான் தந்து
நடத்துபவனையும் அந்நொடியில்
நினைக்க வைத்தான்
தக்க தருணமதில் பரீட்சையும்தான் முடிய
சகபாடிகள் ஆரவாரத்துடன் வழியனுப்ப
நீயும் பூவுலகம் விட்டு விண்ணுலகம் செல்லலானாய்
விண்ணுலகமதில் வினாத்தாள் திருத்தும் ஆசானாய்
சித்திரபுத்திரன் தான் அமர்ந்து
தர்மங்கள் சரியாகவும் பாவங்கள் பிழையாகவும்
மதிப்பீடுதான் செய்து தன் தொழிலை நிறைவேற்ற
அதிபராய் எமதர்மராஜன் பரிசு வழங்குவதற்கு
விண்ணுலக சபையும் கூடியது
சபையினிலே வென்றோர்க்குப் பரிசாய்
மறுபிறப்பின்றி சொர்க்கமும்
தோற்றோர்க்கு மறுபிறப்பாய் என பரிசளிக்க
தோற்றவர் யாவரும் பூவுலகம் வந்து பிறப்பெடுக்க
இறைவனது பரீட்சையது மீண்டும் ஆரம்பமாகியது

த.லக்ஸ்மன்



## முடிவில் ஓர் தொடக்கம்

கனவுக் கோட்டைகள் ஆடம்பரமாய்
அலங்கரிக்கப்பட்டிருந்தது
இலட்சியங்கள் வானளவுக்கு
திட்டமிடப்பட்டிருந்தது
தன்னம்பிக்கை தாராளமாய்
கொட்டிக் கிடந்தது...
சாதாரண தரப் பரீட்சைகள்
நிறைவடைந்த காலம் அது!
உயர்தர பாடத் தெரிவுகள்
அவசர அவசரமாய் எடுக்கப்பட்டது!
எவர்கூறும் அறிவுரைகளும்
செவிகளில் விழவில்லை...
அலட்சிய தன்மையா?
அதீத நம்பிக்கையா?
அதில்கூட சந்தேகமே..
வாழ்க்கையின் திருப்பு முனையில்
நிற்கிறோம் என்பதைக் கூட
புரிந்திடமுடியா பருவம் அது!
உணர்வுகளால் சிக்குண்ட
தருணம் அது!
வைத்தியர்களும் பொறியியலாளர்களும்
மலிந்து போயிருந்தனர்.
இரண்டரை ஆண்டுகள்
இயந்திர வாழ்க்கைதான்!
இறுதிப் பரீட்சையும் முடிந்தது
உண்மைகள் உணரப்பட்டன
சிலரது கனவுகள் தொடர்ந்தன
பலரது கனவுகள் கலைந்தன
பாதை மாறிப் போனவர்களும் உண்டு!
பக்குவப்பட்டு ஜெயித்தவர்களும் உண்டு!!
பள்ளிவாழ்க்கை முடிந்த பின்தான்
வாழ்க்கை புரிய ஆரம்பிக்கின்றது பலருக்கு!!!
நான் மட்டும் விதிவிலக்கா என்ன?

த.மோகனரூபன்
சுழிபுரம் கிழக்கு




# பூமியின் விதி

பூமி வாழ்ந்ததன் அடையாளமே நீரில் கரைந்த உப்பாய் மறைந்து போய் விட்டது. அவனை நினைத்து பெருமிதம் கொள் ளவோ; மெய்சிலிர்க்கவோ எவரும் இல்லை. ஆனால், நாளுக்கு நாள் அவனைப் பற்றிய பீதி பரவி வருகிறது. பச்சிளம் குழந்தைக்கு சோறூட்டுவது முதல் பல்லுக்கொட்டிய கிழவன் பட்டை சாராயம் குடிப்பதை தடுப்பது வரை அவனை நினைவுகூறி வருகின்றனர் கிராம மக்கள். அவன் வாழ்ந்த காலத்தில் அவனது தகுதி அவனை மனிதனாக வெளிப்படுத்தவில்லை; அவனது மரணத்தின் பின் அவனது விதி அவனை மர்மரூபமாக வெளிப்படுத்திவிட்டது.

"ஹோர்வூட்" குக்கிராமம். அந்த சிங்க ராஜவனப் பகுதியிலேயே செழிப்பு மிக்க அழகிய கிராமம். கிராமத்தின் எழிலோ அங்கு வாழும் குடிகளின் அசைக்கமுடியா மகிழ்வான வாழ்வில் மூன்றில் ஒரு பங்குதான். நெடிந்த மலைப்பகுதியில் வளரும் தேயிலைச் செடிகளின் நடுவில் இரத்தம் குடிக்கும் அட்டைகளுடைய தாக்குதல்களின் மத்தியில் தேயிலை இலைகளைப் பிடுங்கி அதனை நிறுத்து கிடைக்கும் வருமானத்தில் தன் பச்சிளம் குழந்தையின் பசியை நீக்கும் தாய்மார், கொடிய அதிகாரிகள், உழைப்பின் வியர்வையை சூறையாடுகின்ற போதும் இலை மறை காய் போல ஏனைய வருமானங்களைக் கொண்டு கஷ்டப்படும் குடும்பத்தை கடைத்தேற்றும் தந்தைமார், தாய் தந்தையின் பரிதாப நிலை கண்டு பாடசாலை செல்லாது பரம ஏழையால் மீண்டும் தேயிலைத் தோட்டத்தின் கண் கவனம் செலுத்தும் சிறுவர், இங்கு வாழும் மக்களின் காலகாலமான அடிமைத்தனத்தின் முள் விதைகளே.

பூமிநாதன் இவர்களில் ஒருவன். ஊரில் எதுநடந்தாலும் தட்டிக் கேட்கும் நாலு பேரில் நாயகன் பூமிதான். இவன் தன் வாழ்வில் தனக்காக அடைந்த துன்பத்தைவிட ஊரின் பரிணாம வளர்ச்சியிலேயே அதிக ஆர்வம் கொண்டிருந்தான். வழமைக்கு மாறாக மக்கள் இவனது கருத்தில் மட்டும் கூடிய கவனம் செலுத்தக் காரணம் இவனே அவ்வூரில் தகுதி வாய்ந்த தரம் வரை கல்வி கற்றவன். எட்டாம் தரம் கல்வி கற்ற ஐவரில் ஒருவன். பூமி, சாதாரணமாக ஏனைய சராசரி மனிதரின் உடல்வாகை மற்றும் கட்டழகு தேஜஸ் கொண்டிருந்தான். அதனால் தான் அவ்வூரின் அழகிகள் என்று சொல்லப்படும் பட்டியலில் காணப்படும் அமலாவை காதலித்து திருமணம் செய்து ஒரு அழகிய பெண் குழந்தைக்கு தந்தையாகி, தபுதாரனும் ஆகி நின்றான்.

அமலாவை பிரிந்தவன் இல்வாழ்வை வெறுக்காது தன் மகள், சிவபாக்கியம் (சௌபாக்கியா)விற்காக வாழலானாள். குழந்தை பாக்கியாவின் மழலைச் சிரிப்பே அனைவரையும் மயக்கிவிடும் தன்மை வாய்ந்தது. அந்த நிலையில் அமலாவின் தங்கை மணிமேகலாவும் அவளை தன் வயிற்றுப் பிள்ளையாக எண்ணிப் பாச மூட்டினாள்.

அச்சாணி இல்லை என்று அறிந்தும் தன் வாழ்க்கைச் சக்கரத்தை இயக்கிக் கொண்டிருந்த பூமி, பல எதிர்பாராத விளைவுகளை சந்தித்தது அவனிடம் நேர்மை எனும் ஊற்று பொங்கி வழிந்தமையாலேயாகும். குக்கிராமத்தில் குன்றும் குட்டையும் இருப்பது சகஜம்தான். ஆனாலும் அங்கு வாழும் மக்கள் அவற்றால் அடையும் துன்பம், வேதனை என்பன கண்ணில் நீரை பொங்கச் செய்யும் செய்யுளாய் விபரிக்கப்படாதிருக்கின்றன. சில பெருந்தன்மைவாய்ந்த அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெற பாசாங்குப் பிரசாரங்களையும் பரிவான சொற்களையும் வெளிப்படுத்தி ஊரில் நடவடிக்கை எடுப்பதாகக்கூறி பதவியை அடைந்ததும் குடல் கசிந்து இறந்த பிராணிகளைப் போல அவர்களை நோட்டமிடுவது இயல்பு வாழ்க்கையே. அவற்றை எதிர்க்க, மறுக்க எவரிடம் தைரியம் உள்ளது.

ஆனால், நம் தைரிய ஊற்று பூமிநாதன் இவற்றில் தலையிட்டதால் தான் அடையப் போகும் விதியை கனவிலும் நினைத்திருக்கவில்லை. ஆம்! கிராமத்தின் எல்லைப் பகுதிக்குச் செல்லும் வழியில், பாதைகளின் குறுக்கங்களில் வெடிப்புகள்; மேலிருந்த இறப்பர் தோட்டச் சரிவில் பாறைகள் நகர்ந்து நகர்ந்து கீழ்ப்புற ஊற்றை நோக்கி பயணமாகியிருந்தமை; அகழப்பட்ட மணல்மேட்டில் பீலி உடைந்து நீர் சீறிட்டு ஓடிவந்த இவ்வாறான சிக்கல்களுக்கு அக்கிராம மக்கள் முகம் கொடுக்கவேண்டிய நிலையில், வாய்களை ஆலிங்கணம் செய்து கொண்டு பரபரப்புடனான மனதுடன் அந்தச் சவால்களைத் தாண்டி வந்தனர். கடந்த வாரம் கூட ஒரு சிறு பாலகன் அந்தப் பீலியின் நீரால் கல்லில் மோதப் பட்டு இரத்தம் சீறிட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். இவற்றைப் பார்வையிட்ட வீரக்கழல் அணிந்த வீரன் பூமிநாதன் நியாயம் தேடி சட்ட அலுவலக அதிகாரியிடம் விண்ணப்பம் தெரிவித்தான். அதிகாரியிடம் பதில் இன்மையால் அவன் மேலதிகாரியிடம் முறைப்பாடு செய்தான். அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் கிராம மக்களைத் தூண்டினான். பாவம்! அது நியாயமான கோரிக்கை என்று இறைவனும் அறியவில்லை போலும். அவனது நியாயத்திற்கான குரல் அரச அதிகாரிகள் மீதான புகார் என்று கணக்கெடுக்கப்பட்டு விட்டது. அவன் இந்தப் பாரதூரமான முடிவை அறியவில்லை.

அன்று அவன் வேலை முடித்து வரும் சமயம். மாலை ஏழு மணியளவில் அந்த குக்கிராமமே முடிசூடா மகாராஜனாய் அவனை வரவேற்றது. தமக்கு வாழ்விலே ஒளிதந்த விளக்காய் அவனைப் பாராட்டும் வகையில் மக்கள் அனைவரும் ஒருமித்து அவன் வீட்டு முன்றலில் காட்டு முனிக்கு விளக்கேற்றி சிறந்த வரவேற்பை தந்தனர். இது அவர்களின் கிராமத்து வழக்கம். ஒருசமயம் முனியன் மாமாவிற்கும் இது நடைபெற்றதாகக் கேள்வி. அவன் தன் மனதில் கதாநாயகனாக எண்ணிய சிறு ஆசை நிறைவேறியதாய் புளகாங்கிதம் அடைந்தான்.

நீடித்த இடைவெளி நிசப்தத்தில் முறிவதைப் போல நிர்மலம் சேர்ந்த பூமிநான் பெருமைகள் பெரியளவில் கொண்டாடப்படவேண்டியதை எண்ணிய அவன் நண்பர்கள் அவனது நாக்கில் சுவையேறும் படியாக காய்ச்சிய சாராயத்தை அமுதாக அளிக்க அவனைக் கல்லுமலைப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

நண்பரைக் கயவராகக் காணாத பூமியோ அவர்கள் சொற்படி பாறை போன்ற சிம்மாசன அமைப்பில் ஏறினான். அங்கே திடீரென்ற ஒரு தடம்புரள்வு. பறவைகள் இறப்பர் மரப்பாலை அதன் சுவையை அனுபவிக்கும் அபரிமிதமான ஆசை கொண்ட அந்த உயிரினங்கள் இருண்ட வானம் நோக்கி கலைந்தன. பாறை உருண்டோடிய ஓசை முள்ளம்பன்றியின் முட்களைகூட சிலிர்க்கச் செய்துவிட்டன. பீலி உடைந்து ஓடிய ஊற்று செந்நிறத்தில் இருண்ட வானிலும் திடமாகத் தென்பட்டது.

ஆம்! அது பூமிநாதன்தான். அவனுடைய தலையிலிருந்து இரத்தம் கழுவப் பட்டு சீறிட்ட ஊற்றுடன் கலந்து வந்தது. அவன் கண்கள் கருணையோடு கவலை சேர்ந்த நீர்க்குமிழியை வெளிவிட்டது. உடலெல்லாம் இரத்தப்பிளவு; உயிருடன் அந்த வலியை ஏற்பது துன்பம் என்று அறிந்த இறைவன் அவன் உயிரைப் பிரித்துவிட்டான் போலும். அவன் இறப்பில் முகம் மட்டும் ஓர் பெரிய அதிர்ச்சியை வெளிக்காட்டிய படி பிணைக்கப்பட்டிருந்தது துரோகம். ச்சே! என்னே மனிதர் பணத்திற்காக தன் நண்பனையே உயர் அதிகாரிகளது சொல்லினைக் கேட்டு கொலை செய்யத் தூண்டிய துரோகிகள் அவர்கள்.

அடுத்தநாள் சொல்லி வைத்ததைப் போன்று சில அதிகாரிகள் அவன் கள்ளச் சாராய போதையில் தடம்புரண்டு விழுந்து விட்டான் என்ற முடிவோடு ஊரை, ஊர் மக்களை முகம் பாராது சென்றுவிட்டனர். அந்தத் துரோகிகள் அதிகாரிகளின் பணத்தைப் பெற்று நகரத்தில் (ஹோர்டன் டவுன்) அடைக்கலம் பெற்றனர். ஆனால் கல் இடுக்குகளில் முகம் சிதைந்து, இறுதிச் சடங்கோ அல்லது எரிதகனச் சடங்கோ செய்யக்கூட வழியில்லாத பூமியின்விதி- ஏழையின் விதி அவனுடைய "ஊருக்கான உரிமை" எனும் கனவுடன் சிதைந்து விட்டது.

தன் தந்தை இறந்தது கூட அறியாத புச்சிளம் குழந்தை பாக்கியா தன் பட்டு விரலை வாயினுள் புதைந்து தேனமுத எச்சிலில் ஊறவைத்து மணிமேகலா சித்தி அழுவதைப்பார்த்து பரிகாசித்தபடி இருந்தது தன் எதிர்கால வாழ்வின் விதியறியாத அச்சிசு; அவளின் குழந்தை மனம் பற்றிக்கூட பூமியோ அல்லது அந்தக் கயவர்தானும் சிந்திக்கவில்லை.

அந்தச் சம்பவத்தின் பின் உடைந்த எல்லைப்பாதையை சீர்திருத்தும்படி எவரும் கோரிக்கை முன்வைப்பதில்லை. மேலும் அவர்கள் அடிமைத்தனத்தின் அங்கமாகவும் மாறிவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை. குளிர்ந்த நிலவு குறிவைக்கும் நேரங்களில் அவர்கள் அந்தப் பாதையால் செல்வதை நிறுத்திவிட்டார்கள். மீறிப் போகிறவர்களை பூமியின் ஆவி அடித்துக் கொன்று விடுகிறது என்றும் அவர்களில் இருவர் இரத்தம் கக்கி ஊரில் பிழைத்து வாழ்கின்றார்கள் என்றும் மூட நம்பிக்கைகள் கோர்க்கப்பட்ட நிலையில் ஊர்மக்கள் அச்சத்துடனான நம்பிக்கையில் வாழ்கிறார்கள்.

ஆயினும் அந்த ஏழை வீரன்; கதாநாயகன் பூமியை இன்றுவரை பெருமைப்படுத்தி அவனது வழியை பின்பற்ற சமூகம் உருவாகவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

தி.பிரசன்னா
தரம்-11
யாழ்.இந்துக்கல்லூரி


# பொறுத்திடம்மா பூமித்தாயே!

நிலத்தைத் தோண்டி நீரைக் குடித்தோமே அது தப்பா? கடவுள் தந்த மூளையைப் பயன்படுத்தி வானைத்தொடும் கட்டடங்கள்கட்டி அதில் பெரியோர், சிறியோர் என வாழ்ந்தோமே அது தப்பா?

இயற்கை அன்னையே ஏன் எம்மை உலுக்கிறாய்- இடிந்த கட்டத்துக்குள் நசுக்கிறாய்.

இயற்கையே உன்னிடம் நான் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தேன் அதற்கு மேல் அன்பும் வைத்திருந்தேன்.

இயற்கையை ரசித்தேன் காடுரசும் ஒலியையும் ரசித்தேன். கடல் அலையும் ரசித்தேன். உயிரினங்களையும் ரசித்தேன். ரசித்ததன் பலனாய் பூகம்பமாய் வருகிறாயே- நரபலி எடுக்கிறாயே.



இயற்கை அன்னையை மதிப்போம். கடல் அன்னையை மாசுபடுத்தாமல் இருப்போம். சூழலைப்பேணும் இயற்கையோடு ஒன்றிப் போவோம். விஞ்ஞானத்தை வைத்து இயற்கையோடு விளையாட வேண்டாம்.

கிடைத்த வளங்களை வைத்து பயன் பெறுவோம். இயற்கை அன்னையோடு ஒன்றி வாழ்வோம். பொறுத்திடம்மா பூமித்தாயே.

## சர்வதேச அரசியல் பார்வை



# வீசப்பட்ட போர் வாள்

# பூவைக் கையில் ஏந்திய கொரியா



## நிம்மதிப் பெருமூச்சில் உலகு

உலகமே எதிர்பார்த்திருந்த சந்திப்பொன்று நடந்து முடிந்துள்ளது. ஆம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் வரலாற்று சிறப்பு வாய்ந்த சந்திப்பைக் கடந்த 12 ஆம் திகதி சிங்கப்பூரில் உள்ள சென்டோசா தீவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் உச்சி மாநாட்டிலும் கலந்து கொண்டு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த வரலாற்று சிறப்பு மிக்க சந்திப்பு சாதாரணமாக ஏற்பட்டதன்று மிகக் கடின மான ஒரு பாதையினூடாக நடைபெற்ற ஒரு சந்திப்பாகக் காணப்படுகிறது. வடகொரியா என்ற நாடு உருவாகிய காலத்தில் இருந்த எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதிகளும் வடகொரியா ஜனாதிபதிகளுடன் பனிப்போர் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்தியது கிடையாது. அந்தளவிற்கு இரண்டு நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்பட்டன. இரண்டு நாடுகளும் சமாந்தரக் கோடுகளாகவே உலக அரங்கில் பயணித்தன.

அமெரிக்கா- வடகொரியா முரண்பாடானது குறிப்பிட்ட காலத்தில் மிக மோசமான ஓர் எல்லைக்கோட்டைத் தொட்டது. அதாவது வடகொரியாவின் ஜனாதிபதி பதவியில் கிம் ஜாங் உன் 2011 ஆம் ஆண்டு அமர்ந்ததில் இருந்து இம்முரண்பாடு புதிய ஒரு வடிவம் எடுத்தது. குறிப்பாக கிம் ஜாங் உன் உடைய ஆட்சியில் ஒரே இராணுவ இலக்காக அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா நாடுகள் காணப்பட்டன. அமெரிக்காவை அழிப்பதற்கென்றே அணுகுண்டுச் சோதனைகளையும் ஏவுகணைச் சோதனைகளையும் காலத்திற்குக் காலம் கிம் ஜாங் உன் மேற்கொண்டார். இதன்மூலம் கொரிய தீபகற்பத்தை மட்டுமன்றி உலகையே போர்ப் பீதியில் தள்ளிவிட்டார். அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதும் கிம்- ட்ரம்ப் பகையானது புதிய பரிணாமம் எடுத்தது. இருவரும் நிரந்தரப் பகையாளிகளாக மாறியதுடன் ஒருவரையொருவர் கீழ்த்தரமாக விமர்சித்துக்கொண்டதுடன் வடகொரியா மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. கொரிய தீபகற்பத்தில் தனிக்காட்டு சண்டியனாகவும் போர் வெறியனாகவும் உலக அரங்கில் கிம் காட்சிப்படுத்தப்பட்டார். அத்துடன் வடகொரியா மீது எந்தநேரமும் அமெரிக்கா ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது பரந்துபட்ட ஒரு இராணுவ நடவடிக்கையை தென்கொரியா, ஜப்பான் மற்றும் நேட்டோவின் உதவியுடன் மேற்கொள்ளலாம் என்ற அச்சமும் உலக நாடுகள் மத்தியில் நிலவியிருந்தது. இவை அனைத்தும் ஒரு அணு ஆயுத யுத்தத்திற்கு உலகம் சீக்கிரம் முகம் கொடுக்கும் என்ற நிலையில் காணப்பட்ட அதியுச்ச பதற்றமானது திடீரென செங்குத்தாகக் கீழிறங்கி உலகத்தை மேலும் பரபரப்பாக்கியது.

வடகொரிய ஜனாதிபதி திடீரென தன் மனநிலையை மாற்றியிருந்தார். அணுகுண்டு மற்றும் ஏவுகணைச் சோதனைகளை நிறுத்துவதாக அறிவித்ததுடன் போர் வாளை வீசிவிட்டு சமாதானப் பூவை கையில் ஏந்தி கொரிய தீபகற்பத்தில் கொழுந்து விட்டெரிந்த போர்ப் பதற்றத்தைத் தணித்தார். அத்துடன் திடீரென இரவோடு இரவாக சீனா சென்று சீன ஜனாதிபதியான ஜி ஜின் பிங்கை சந்தித்ததுடன் தன் பகையாளியான தென்கொரியாவிற்கு தானே சென்று தென்கொரிய ஜனாதிபதியான மூன் ஜே இன் ஐ சந்தித்து உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு கொரிய தீபகற்பத்தில் நிரந்தர அமைதிக்கான வாக்குறுதியை வழங்கியதுடன் தனது நாட்டில் உள்ள அணு உலைகளை தரைமட்டமாக்கும் உறுதிமொழியை வழங்கி அமெரிக்க ஜனாதிபதியுடன் நேரடிச் சந்திப்பிற்கான விருப்பத்தினையும் வெளிப்படுத்தினார்.

இவ்வாறு நிமிடத்திற்கு நிமிடம் பரபரப்பையும் திருப்பத்தினையும் உலக நாடுகள் மத்தியில் கொரியா பிரச்சினை ஏற்படுத்தியிருந்தது. வடகொரிய ஜனாதிபதியின் சந்திப்பிற்கான விருப்பத்தை அமெரிக்க ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து வடகொரியா தன்னுடைய நாட்டிலுள்ள அணு உலைகள் எனக் குறிப்பிடப்படும் இடங்களைத் தரைமட்டமாக்கியதுடன் அதனைப் பன்னாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் காட்சிப்படுத்தியது. கிம் இன் இந்தவொரு முழுமையான மாற்றம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள், ஊகங்கள், உண்மைகள் எல்லாம் உலக பார்வையாளர்களால் முன்வைக்கப்பட்டன.

ட்ரம்ப் மற்றும் கிம் ஆகியோர் சந்திப்பு தொடர்பான விருப்பத்தை வெளிப்படுத்தினாலும் அது நடைமுறைச் சாத்தியம் மிகக் கேள்விக் குறியாகவே இருந்தது. இச்சந்திப்பு தொடர்பாக சீனா, ரஷ்யாவின் மறைமுகமான தலையீடுகள் அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்கள் இச்சந்திப்பின் சாத்தியத்தை கேள்விக்குறியாக்கியது. குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி வடகொரியா மீதான பொருளாதாரத் தடை தொடரும் என்று அறிவித்ததுடன் பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்படும் என்றும் அறிவித்திருந்தார். அத்துடன் கிம் கொரியாவில் நடைபெறவிருந்த அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையை இரத்துச் செய்திருந்தமையால் பேச்சுவார்த்தைக்கான சூழல் குறைவடைந்தது. எனினும் சீனா, தென்கொரிய நாடுகளின் தலையீட்டினால் ஜூன் மாதம் 12 ஆம் திகதி பேச்சுவார்த்தைக்கான திகதியை ட்ரம்ப அறிவித்ததுடன் சிங்கப்பூர் பேச்சுவார்த்தைக்கான இடமாகத் தெரிவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

இதன்படி சிங்கப்பூரின் சென்டோசா தீவில் கேபெல்லா ஹோட்டலில் பேச்சுவார்த்தைக்கான இடம் இறுதி செய்யப்பட்டதுடன் அதற்கான ஏற்பாடுகளை வடகொரியா- அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மேற்கொண்டிருந்தன. இறுதிவரை பேச்சுவார்த்தை நடைபெறுமா? என்ற சந்தேகத்துடன் ஜூன் மாதம் 11 ஆம் திகதி இரு நாட்டு ஜனாதிபதிகளும் சிங்கப்பூர் வந்தடைந்ததுடன் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சினால் கௌரவமான வரவேற்பளிக்கப்பட்டு விருந்துபசாரம் மேற்கொள்ளப்பட்டதுடன் சிங்கப்பூர் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோருடன் தனித்தனிச் சந்திப்புக்களையும் மேற்கொண்டிருந்தனர். உலக அரங்கில் மாறுபட்ட தலைவர் என்று பெயரெடுத்த 34 வயதான கிம் சிங்கப்பூரின் முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்ததுடன் மக்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டார்.

அதன் பின்னர் உலகம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இருதுருவங்களுக்கிடையேயான சந்திப்பு ஜூன் 12 ஆம் திகதி சிவப்புக் கம்பள விரிப்பில் இருவரும் முதன்முதலாக ஒருவரையொருவர் பார்த்து கைகுலுக்கி பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. சுமார் 38 நிமிடங்கள் இருவரும் தனிமையில் உரையாடியதுடன் அதன் பின்னர் உச்சி மாநாடு, மதிய உணவு, ஹோட்டல், தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தல் ஆகியவற்றுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணங்களில் இருவரும் கையொப்பம் இட்டதுடன் இருவரும் புன்னகைத்து கைகுலுக்கி வெற்றிகரமாக பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டனர். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்கும் போது, தாங்கள் கணித்ததை விடச் சிறப்பான சந்திப்பாக அமைந்தது என்றும் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மூலம் பெருமிதம் அடைகிறோம் என்றும் கடந்த காலத்தை விட இனிவரவிருக்கும் வடகொரியாவுடனான உறவு மிகவும் வேறு மாதிரி இருக்கும் என்றும் குறிப்பிட்டதோடு கிம் புத்திசாதுரியமானவர் என்று கிம்மை புகழ்ந்தும் கருத்துரைத்தார்.

இப்பேச்சுவார்த்தை தொடர்பாக கிம் குறிப்பிடும் பொழுது பெரிய மாற்றத்தை இந்த உலகம் பார்க்கப் போகிறது என்றும் கடந்த காலத்தை மறந்து விடுவோம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத நீக்கத்தை நோக்கி வடகொரியா உறுதியுடன் செயற்படும் என்று இருதரப்பும் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அணு ஆயுதங்களை வடகொரியா பயன்படுத்த முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் வடகொரியா மீதான தடைகள் இரத்துச் செய்யப்படும் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். அத்துடன் தென்கொரியாவுடனான போர் ஒத்திகை இனிமேல் நடைபெறாது என்றும் அறிவித்துள்ளார்.

இந்த உச்சி மாநாட்டில் கையெழுத்தான ஒப்பந்தத்தில் இரண்டு நாடுகளும் நாட்டுக்காகவும் பொருளாதாரத்திற்காகவும் புதிய உறவுகளை தொடங்குவதுடன் கொரிய தீபகற்பத்தில் அமைதியை நிலைநாட்ட இரண்டு நாடுகள் இணைந்து செயற்பட்டால் போர்க்கைதிகளை விடுவித்தல், அணு ஆயுதமற்ற பகுதியாக கொரிய தீபகற்பத்தை மாற்றுதல் என்பன இதில் முக்கியம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் இப்பேச்சுவார்த்தையில் மனிதவுரிமைகள் பற்றிய விடயங்கள் பேசப்படவில்லை என்று வடகொரியாவிலிருந்து தப்பி அமெரிக்கா சென்ற கிரேஸ் ஜோ குறிப்பிட்டுள்ளார். ஆனால் இப்பேச்சுவார்த்தையில் மனிதவுரிமை பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்த்தால் பேச்சுவார்த்தை உருக்குலைய வாய்ப்புள்ளது என்று பேராசிரியர் ராபர்ட் குறிப்பிட்டிருந்தார். இதனால் மனிதவுரிமை பற்றிய பேச்சுவார்த்தை தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

சென்டோசா பேச்சுவார்த்தையை சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் உடனடியாக வரவேற்றுள்ளதுடன் ஈரான் எச்சரிக்கையுடன் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தை மிகப்பெரிய வெற்றி என்று பன்னாட்டு ஊடகமான ரொய்டர் குறிப்பிட்டுள்ளது.


இவ்வாறு கிம் மற்றும் ட்ரம்ப் சந்திப்பானது மிகவும் சவால் நிறைந்ததும் கடினமான ஒரு வழிகளைக் கடந்தும் போன்றே பேச்சுவார்த்தையில் எட்டப்பட்டிருக்கும் உடன்பாடுகளையும் நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு கடினமான பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் உலக அரங்கில் இது போன்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் செல்லாக் காசாகிப் போன பலநூறு அனுபவங்கள் காணப்படுகின்றன.

எனவே இவ்விரு நாட்டு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சென்டோசா பேச்சுவார்த்தை சென்டோசா ஒப்பந்த வரலாற்றில் இடம்பிடிக்குமா? அல்லது கானல்நீர் போன்று கற்பனையாகிவிடுமா? என்பதற்கு எதிர்காலமே விடையாக இருக்கும்.

எஸ்.கோகுலன்,
வட்டுக்கோட்டை

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலை மறுக்கப்படுவது ஏன்?

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தவறுதலாக தண்டிக்கப்பட்டு 28 ஆண்டுகளாக சிறைக் கொட்டடியில் வாடும் பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 தமிழர்களையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க குடியரசுத் தலைவர் மறுத்திருக்கிறார். தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிரான இந்திய மத்திய அரசின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கதாகும்.




இந்திய மத்திய அரசின் இந்த நடவடிக்கை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்பதால் அதிர்ச்சியோ, ஏமாற்றமோ ஏற்படவில்லை. மாறாக, 7 தமிழர்களின் விடுதலைக்காக தமிழக அரசு இன்னும் கவனமாகச் செயற்பட வேண்டும், தமிழர் கள் இன்னும் தீவிரமாகப் போராட வேண் டும் என்ற எண்ணம் உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. 7 தமிழர்கள் விடுதலை குறித்த விவகாரத்தில் மத்திய அரசு எப்போதுமே தமிழர்களின் மனநிலைக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது. பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவுகளின்படி அவர்களை விடுதலை செய்வது பற்றி உரிய அரசு முடிவு செய்யலாம் என்றும் அறிவுரை வழங்கியது. அதனடிப்படையில் 7 தமிழர்களை விடுதலை செய்ய தமிழக அரசு தீர்மானித்த நிலையில், மன்மோகன்சிங் தலைமையிலான அப்போதைய இந்திய மத்திய அரசு அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அதன்பின்னர் 7 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று 2014, 2016 ஆம் ஆண்டுகளில் இருமுறை இந்திய மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை விடுத்த போதும், அதை ஏற்க இந்திய மத்திய ஆட்சியாளர்கள் மறுத்து விட்டனர்.

**7 தமிழர்கள் விடுதலைக்கு இந்திய மத்திய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளதால் 161 ஆவது பிரிவைப் பயன்படுத்துக என்று கூறுகிறார் பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி இராமதாஸ் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.**

மற்றொருபுறம் இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் 7 தமிழர்கள் விடுதலை குறித்து 3 மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசுக்கு கடந்த ஜனவரி 23 ஆம் திகதி ஆணையிட்டது. அதன் மீது த்ான் இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் இப்போது முடிவெடுத்து குடியரசுத் தலைவர் மூலமாக அறிவித்துள்ளது. தமிழக அரசின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், எத்தகைய சூழலிலும் 7 தமிழர்களும் விடுதலையாக முடியாது என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தமிழர்களுக்கு எதிராக இந்திய மத்திய அரசு எந்த அளவுக்கு வன்மம் கொண்டிருக்கிறது என்பதையே இது அம்பலப்படுத்தியுள்ளது.

தண்டனைக் குறைப்பு தொடர்பான விடயங்களில் 7 தமிழர்கள் விவகாரத்தையும், இந்தி திரைப்பட நடிகர் சஞ்சய்தத் விவகாரத்திலும் இந்திய மத்திய அரசு எவ்வாறு மாறுபட்ட நிலைப்பாடுகளை மேற்கொண்டது என்பதிலிருந்தே இதை உணர்ந்து கொள்ள முடியும். 7 தமிழர்களை விடுதலை செய்ய இந்திய மத்திய அரசு மறுப்பதற்கு காரணம், அவர்கள் இந்திய மத்திய சட்டத்தின் அடிப்படையில் இந்திய மத்திய அமைப்பான சி.பி.ஐயால் வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் என்பதால், அவர்கள் விடுதலை குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் தங்களுக்கு மட்டுமே உண்டு என்பதாகும். மும்பை தொடர்குண்டு வெடிப்பு வழக்கில் ஆயு தங்களை வைத்திருந்ததாக கைது செய் யப்பட்ட சஞ்சய் தத் தும் இந்திய மத்திய அரசின் சட்டமான ஆயுதச் சட்டத்தின்படி சி.பி.ஐ. வழக்கில் தான் தண்டிக்கப்பட்டார். ஆனால், அவருக்கு வழங்கப்பட்ட 5ஆண்டு தண்டனையில் 17 மாதங்கள் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டு முன்கூட்டியே சஞ்சய்தத் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத இந்திய மத்திய அரசு 7 தமிழர் விடுதலையை மட்டும் எதிர்ப்பது ஏன்? இந்திய மத்திய அரசின் இந்த நிலைப்பாட்டுக்குப் பிறகாவது 7 தமிழர் விடுதலை தொடர்பான விவகாரத்தை இனி வரும் காலங்களில் எப்படி கையாள வேண்டும் என்பதை தமிழக ஆட்சியாளர்கள் தீர்மானிக்க வேண்டும். 7 தமிழர்களையும் விடுதலை செய்யும் விவகாரத்தில் தமிழக அரசின் முன் இரு வாய்ப்புகள் மட்டுமே உள்ளன. முதலாவது 7 தமிழர்கள் விடுதலை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கை சிறப்பாக நடத்தி, சாதகமான தீர்ப்பைப் பெறுவது. இரண்டாவது அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 7 தமிழர்களையும் விடுதலை செய்வது ஆகும். நீதிமன்றத்தின் மூலமாக 7 தமிழர்களையும் விடுதலை செய்ய இந்திய மத்திய அரசின் ஒப்புதல் அவசியம் என்பதாலும், இந்திய மத்திய அரசு அதற்கு ஒப்புக்கொள்ளாது என்பதாலும் முதலா வது வாய்ப்பின்படி 7 தமிழர்களையும் விடு தலை செய்வதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே, தமிழக அரசின் முன்னுள்ள கடைசி வாய்ப்பு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 161 ஆவது பிரிவின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவது மட்டுமே. இதை உணர்ந்து உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி 161 ஆவது பிரிவின்படி 7 தமிழர்களையும் விடு தலை செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அத்தீர்மானத்தை தமிழக ஆளுநருக்கு அனுப்பி அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதை தமிழக ஆட்சியாளர்கள் உறுதி செய்ய வேண்டும்"

# நேருக்குநேர் மோதவிருந்த விமானங்கள்!

அமெரிக்க லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து மெல்பேர்ன் நோக்கி அவுஸ்திரேலியாவின் குவாண்டா நிறுவன விமானம் புறப்பட்டது.

இந்நிலையில், குறித்த விமானம் பசுபிக் பெருங்கடலின் மீது பறந்து கொண்டிருந்தபோது காற்றின் சுழற்சி காரணமாக இந்த விமானம் மீது மோதுவது போல மற்றொரு விமானம் வந்தது. விமானிக்கு கடைசி நேரத்தில் தான் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இந்த இரண்டு விமானங்களும் மோதுவதைத் தடுக்க, ஆயிரம் அடி உயரத்துக்கு கீழே குவாண்டா விமானத்தை இறக்க விமானிகள் துரிதமாக முடிவெடுத்தனர்.



அதன்படி 20 நொடிகள் வரை விமானத்தை தலைகீழாக இயக்கிய அவர்கள் பாதுகாப்பான இடத்தை அடைந்தனர். என்ன நடக்கிறது என்று அறியாமலேயே பயணிகள் அனைவரும் விமானத்தில் தலைகீழாகவே பயணித்தனர்.

பின்னர் பயணிகளுக்கு நடந்த சம்பவம் குறித்து விளக்கப்பட்டதாக குவாண்டோ விமான நிறுவனம் இன்று அறிவித்துள்ளது.

நடுவானில் ரோலர்கோஸ்டரில் சென்றது போல இருந்ததாகவும் நிலைமையை விமானிகள் சிறப்பாக கையாண்டதாகவும் பயணிகள் சாதுர்த்தியமாக செயற்பட்ட விமானிக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# இது நம்ம கதைகள்...

## கனடாவும் காத்தவராயனும்

நம் நாட்டில் இனப் பிரச்சினை உச்சம் பெற்றிருந்த வேளையில் பாதுகாப்பையும்-வேலை வாய்ப்பையும் தேடி பட்டதாரி இளைஞனொருவன் கனடா நாட்டிற்கு புலம்பெயர்ந்தான். கனடாவில் வேலைதேடி படிகள் பல ஏறினான். ஆனால் வேலையோ கிடைப்பதாகவில்லை. பசியும் பட்டினியுமாக நாட்கள் கரைந்தன. ஊரிலும் வாங்கிய கடனுக்கு வட்டி கேட்டு கடன்காரரின் தொலைபேசிகள் இரைந்தன. இறுதியாக என்ன வேலையென்றாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்தான். மிருகங்களை வைத்து சாகசங்கள் செய்யும் "சர்க்கஸ் (circus)" கம்பனிக்குப் போனான்" மிருகங்களைக் குளிப்பாட்டும் வேலையென்றாலும் தாங்கோ செய்கிறேன்" என்று கெஞ்சினான். அதற்கும் இங்கே போதுமான ஆட்கள் உண்டு என்று திருப்பியனுப்பினார்கள்.

அவன் மனமுடைந்து தலையைத் தொங்கவிட்டவாறு வெளியேறும் தருணத்தில் முகாமையாளர் அவனைக் கைதட்டிக் கூப்பிட்டார். "தம்பி நீ நாடகங்கள் ஏதாவது நடித்திருக்கிறாயா" என்று கேட்டார். அவன் உற்சாகத்துடன் "ஆமாம், நம்மூர் காத்தவராயன் கூத்தில் காத்தான் வேடத்தில் நடித்தேன்" என்றன். "அப்படியென்றால் ஒரு பகுதியை நடித்துக்காட்டு" என்றார் முகாமையாளர். அவனிடம் தூங்கிக்கிடந்த கலைப்புலி விழித்துக் கொண்டது. துள்ளினான், குதித்தான், நடிகர் விஜயகாந் போல் ஒரு காலை சுவரில் வைத்து மறு காலால் பம்பரமாகச் சுழன்றான். சிலம்பம் சுற்றினான், வாள் வீசினான். சர்க்கஸ் கூடமே ஸ்தம்பித்துப் போனது. "சபாஷ்" என்று கையைத் தட்டிக் கொண்டு முகாமையாளர் சொன்னார் "உனக்கு வேலை நிச்சயம், நீ இப்போதே எம்முடன் இணையலாம்" அவன் மனதில் வண்ணத்துப்பூச்சிகள் பறந்தன.



முகாமையாளர் அவனருகே வந்தார். "தம்பி நன்றாக நடிக்கிறாய். இங்கேயும் கொஞ்ச நாள் ஒரு வேடம் போட வேணும்" என்றார். அவன் தலை - கால் புரியாத சந்தோசத்துடன் அவரது அடுத்த வார்த்தைகளுக்காகக் காத்திருந்தான். "தம்பி இங்கே ஒரு சிம்பன்சி குரங்கு வளர்த்தோம். அது பல வித்தைகள் காட்டியது. அதனால் குரங்கின் சாகசங்களைப் பார்க்க பெருந்தொகை ஆட்கள் வருவார்கள். நல்ல வருமாணம் கிடைத்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நேற்றிரவு அந்தக் குரங்கு இறந்துவிட்டது. ஆனால் இந்தச் செய்தி யாருக்கும் தெரியாது. புதிய சிம்பன்சி குரங்கைப் பிடித்து அதை பழக்கியெடுக்க கொஞ்ச நாளாகும். அதுவரை நீ குரங்காக வேடம் போட்டு வித்தை காட்ட வேண்டும். உனக்கு உச்சச் சம்பளம் தாரேன் என்றார். முகாமையாளரின் வார்த்தைகள் அவனில் இடிபோலிறங்கின. மயக்கம் வருவது போலிருந்தது. ஆனாலும் ஊரில் பட்ட கடன், ஆடம்பர வாழ்க்கைக்கனவு அவனை சம்மதிக்க வைத்தன. என்ன வேலையென்றாலும் பறவாயில்லை. கைநிறையக் காசு கிடைத்தால் போதுமென தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான். சிம்பன்சி போல தத்ரூபமாக வேடம் போடப்பட்டது. காட்சி நேரம் வந்தது. துள்ளினான், குதித்தான், தாவினான், கரணங்கள் போட்டான். சாட்சாத் குரங்காகவே மாறினான். ஒவ்வொரு நாளும் இவன் காட்சியைக்காண கூட்டம் அலை மோதியது. பாராட்டுக்கள் குவிந்தன, டொலர்கள் பெருகின.

அன்றும் வழமைபோல் காட்சி ஆரம்பித்தது. கைதட்டல்களும் விசிலொலிகளும் அரங்கை நிறைத்தன. உச்சாகத்துடன் தாவினான். ஆனால் அந்தோ பரிதாபம் கை வழுக்கியது. நிலை தடுமாறி "ஐயோ அம்மா" என அலறியவாறு சிங்கத்தை அடைத்திருந்த கூட்டினுள் விழுந்தான். அங்கிருந்த வெள்ளையர்களுக்கு அவன் அலறியது தமிழில் என்று புரியவில்லை. குரங்கின் அபயக்குரலென்றே நினைத்தனர்.

இப்போ இவன் நிலை பெரும் திண்டாட்டம். சிங்கம் கடித்துக் குதறப் போவது திண்ணம். ஆனாலும் தான் மனிதன் என இனங்காட்டினாலும் ஆபத்துத்தான். ஏனென்றால் இத்தனை காலமும் இவன் குரங்காக நடித்து நம்மை ஏமாற்றி விட்டான் என்று ஆத்திரத்தில் மக்கள் கூட்டம் அவனை அடித்தே கொன்றுவிடும். எப்படிப்பார்த்தாலும் சாவு நிச்சயம்தான். எனவே ஏமாற்றுக்காரன் என்ற அவப் பெயருடன் சாகாமல், குரங்காகவே அனுதாபத்துடன் செத்துப் போவோம் என்று இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொண்டு மூச்சையடக்கி கண்ணை மூடிக்கொண்டு அசைவற்றுக் கிடந்தான்.

சிங்கம் எழுந்தது. ஒரு கணம் நிசப்தமான சனக்கூட்டம். இப்போது மல்யுத்தத்தில் வீழ்ந்து கிடக்கும் றண்டி ஒயனை (Randi Orjen) நோக்கிப் பாயும் ஜோண் செனாவை (John Cena) உச்சாகப்படுத்துவது போல் சிங்கத்தை நோக்கி குரங்கைக் கொல்லுமாறு கோஷமிடத் தொடங்கினர். சிங்கம் அவனைச் சுற்றி 3 முறை வலம் வந்தது. நம்மூர் கோவிலில் வளர்ந்த சிங்கம் போல் என்று நினைத்தான். சிங்கம் அவன் காதருகே குனிந்தது. காதிலிருந்து கடித்துக் குதறப் போகிறது என நினைத்தான். உடல் உதறத் தொடங்கியது. காதருகே குனிந்த சிங்கம் மெதுவாகச் சொன்னது. "தம்பி பயப்படாதே. நானும் யாழ்ப்பாணத்தான் தான்"

**சிங்கங்கள் உதவிக்கில்லையென்றால் இங்கும் சிலரின் கதி சங்கடம்தான்.**


**எப்.எக்ஸ்.அன்ரன்**

### எலி!



பத்தொன்பதாம் நூற்றாண்டில் வியட்நாம் பிரெஞ்சுக்காரர்களின் காலனியாக இருந்தது. அங்கே ஹனோய் நகரத்தில் எலித்தொல்லை மிக அதிகம். அதை ஒழிக்க பிரெஞ்சுக்காரர்கள் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். 'எலிகளைக் கொன்றால் தகுந்த வெகுமதி வழங்கப்படும். கொல்லப்பட்ட எலியின் வாலை மட்டும் எடுத்து வந்தால் போதும். வால்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பணம் உண்டு' வியட்நாம் மக்கள் எலி வால்களை எடுத்துச் சென்று பணம் பெற்று வந்தார்கள்.

பிறகுதான் வியட்நாமிய அதிகாரிகள், ஊருக்குள் பல எலிகள் வாலே இல்லாமல் திரிவதைக் கண்டார்கள். உண்மையையும் புரிந்துகொண்டார்கள். எலிகளைப் பிடிக்கும் மக்கள், வால்களை மட்டும் அறுத்து விட்டு, எலிகளை விட்டுவிட்டார்கள். அந்த எலிகள் மேலும் குட்டிகள் போட்டு எண்ணிக்கையில் பெருகின. மக்கள் அதிகம் சம்பாதிக்க எலிகளின் வால்களே போதுமானவையாக இருந்தது. தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்த பிரெஞ்சுக்காரர்கள், அந்த எலி வால் திட்டத்தையே இரத்துச் செய்தனர்.



வியட்நாமுக்கு எலிகள் என்றால், இந்தியாவுக்குப் பாம்புகள். பிரிட்டிஷார் இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த காலத்தில், டில்லி பகுதியில் விஷப் பாம்புகளின் தொல்லை மிக அதிகமாக இருந்தது. பாம்புக்கடியால் உயிரிழப்புகளும் அதிகமாக இருந்தன. எனவே, பிரிட்டிஷார் ஒரு திட்டத்தைச் செயற்படுத்தினர். விஷமுள்ள பாம்புகளை, மக்கள் கொன்று எடுத்து வந்தால் அதற்குத் தகுந்த பணம் வாங்கிச் செல்லலாம் என்று அறிவித்தனர்.

மக்களும் பாம்புகளைக் கொன்று எடுத்து வந்து கொடுத்து, மகிழ்ச்சியுடன் பணம் வாங்கிச் சென்றார்கள். நாளுக்கு நாள் மக்கள் கொன்று எடுத்து வரும் செத்த பாம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது. ஆனால், பாம்புகளின் எண்ணிக்கை குறைவது போலத் தெரியவில்லை. பிரிட்டிஷார் குழம்பிப் போயினர். பின்பே ஓர் உண்மையைக் கண்டறிந்தனர்.

மக்கள் விஷப்பாம்புகளை அதிக அளவில் வளர்க்கத் தொடங்கியிருந்தார்கள். ஒரு பாம்பை வளர்க்க ஆகும் செலவைவிட, அதைக் கொன்று எடுத் துச் சென்றால் அதிகம் பணம் கிடைத்தது.

எனவே, கொல்வதற்காகவே பாம்புகளை வளர்த்து நிறையவே சம்பாதித்தனர். இந்த உண்மை தெரிந்ததும், கடுப்பான பிரிட்டிஷார், 'இனி பாம்புக்குப் பணம் கிடையாது' என்று அறிவித்தனர்.

இனி தாம் வளர்க்கும் பாம்புகளால் எந்த உபயோகமும் இல்லை என்று தெரிந்ததும், மக்கள் அந்தப் பாம்புகளை எல்லாம் வெளியில் திறந்து விட்டனர். முன்பைவிட, பல மடங்கு பாம்புத் தொல்லை அதிகமாகிப் போனது.

### பணம்!



அடால்ஃப்ஹிட்லர் என்ற பெயரைக் கேட்டதுமே எல்லோருக்குமே தோன்றுவது, உலகில் வாழ்ந்த மிக மோசமான சர்வாதிகாரி என்பது தான். இலட்சக்கணக்கில் யூதர்களைக் கொன்று குவித்தவர்.

ஹிட்லர் மீதான பயம், அவரைப் பற்றி ஏகப்பட்ட வதந்திகளையும் உருவாக்கியது. ஹிட்லரைப்பற்றிஎன்னசொன்னாலும் அன்றைக்கு மக்கள் நம்பினார்கள். அதில் மூன்றே மூன்று காமடி பொய்கள் மட்டும் இங்கே.


1. ஹிட்லர் ஸோம்பிக்களால் ஆன ஒரு படையை உருவாக்கி வைத்திருந்தார். யாராலும் தோற்கடிக்கவே முடியாத, அசுர பலம் கொண்ட அந்த நாஸி ஸோம்பி படைப் பிரிவைக் கொண்டு இரண்டாம் உலகப்போரின் முக்கியமான கட்டத்தில் பெரும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

2. ஹிட்லர், எதிரிகளைத் துவம்சம் செய்யும் வகையில் நாய்களால் ஆன படையை உருவாக்கியிருந்தார். அந்த நாய்கள் பேசும் சக்தி படைத்தவை. ஹிட்லரைப் பார்க்கும் போதெல்லாம், அவை 'Heil Hitler!' என்று வாழ்த்திக் கத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தன.

3. ஹிட்லர், ஏலியன்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். நவீன சுப்பர் ரொக்கெட், பறக்கும் விண்கலம் போன்றவற்றை உருவாக்கி வைத்திருந்தார். எதிரிப் படைகள் சூழ்ந்த போது, இறுதியில் ஹிட்லர் தற்கொலை செய்து கொள்ளவில்லை. எல்லோரையும் ஏமாற்றிய அவர், ரொக்கெட்டில் ஏறி நிலாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். நிலவில் காலடி பதித்த முதல் மனிதன் ஹிட்லர்தான்.

இன்றைக்கும் ஹிட்லர் எங்கேயோ தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று நம்புபவர்களும் இந்த உலகில் இருக்கிறார்கள்.

# கால்பந்து உலக கிண்ணத்தில் முதல் நிலை வீரர்கள்





"டொப் ஸ்கோரர்கள்' என்றாலே, இந்தத் தலைமுறை கால்பந்து ரசிகர்களின் நினைவுக்குவருவது 'மெஸ்ஸியும் ரொனால்டோவும்' மட்டுமே. ஆனால், அவர்கள் இருவருக்குமே இந்த லிஸ்ட்டில் இடம் இல்லை.

அந்த வகையில், முதல் ஐந்து இடங்களைப் பிடித்திருக்கும் 'உலகக்கோப்பையின் ஓல் டைம் டொப் ஸ்கோரர்கள்' பற்றியதே இந்தக் கட்டுரை.

**#3 – ஜெர்ட் முல்லர்**
**(GERD MUELLER)**

13 உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடி 14 கோல்கள் அடித்துள்ளார் ஜெர்ட் முல்லர். 1970 உலகக் கோப்பையில் மொராக்கோவுக்கு எதிரான முதல் போட்டியில் ஒரு கோல்



அடித்த முல்லர், பல்கேரியாவுக்கு எதிரான இரண்டாவது போட்டியில் ஒரு 'பனால்டி' உட்பட 'ஹட்ரிக் கோல்' அடித்தார். பெருவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில், முதல் பாதி முடிவதற்குள்ளேயே மீண்டும் ஒரு 'ஹட்ரிக் கோல்' அடித்து பட்டை



யைக் கிளப்பிய முல்லர், இங்கிலாந்துக்கு எதிரான கால் இறுதியில், இன்ஜுரி டைமில்' ஒரு 'வின்னிங் கோல்' அடித்து, தனது அணியை அரை இறுதிக்கு அழைத்துச் சென்றார். ஆனால், இத்தாலிக்கு எதிரான அரை இறுதியில் முல்லர் இரண்டு கோல்கள் அடித்திருந்தாலும் கூட, நூலிழையில் தோற்று வெளியேறியது மேற்கு ஜேர்மனி.

1974 உலகக்கோப்பையின் முதல் சுற்றில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது போட்டியில் ஒரு கோல் அடித்தவர், இரண்டாவது சுற்றில் யூகோஸ்லாவியா மற்றும் போலந்து அணிகளுக்கு எதிராகவும் தலா ஒரு கோல் அடித்தார். கடைசியாக, நெதர்லாந்துடனான இறுதிப்போட்டியில் வெற்றிக்கான இரண்டாவது கோலை அடித்து, மேற்கு ஜேர்மனியை சம்பியனாக்கினார் முல்லர்.

இரண்டு முறை ஜேர்மனியின், ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை' வென்றிருக்கும் முல்லர், ஜேர்மனிக்காக 62 போட்டிகளில் விளையாடி 68 கோல்கள் அடித்துள்ளார். 1970 உலகக்கோப்பையின் டொப் ஸ்கோரருக்கான விருதையும் வென்றிருக்கிறார்.

**#2 – ரொனால்டோ நசாரியோ**
**(RONALDO NAZARIO)**

19 உலகக்கோப்பைப் போட்டிகளில் விளையாடி 15 கோல்கள் அடித்துள்ள பிரேசிலின் 'உச்ச நட்சத்திரமான' ரொனால்டோ நசாரியோ, உலகக்கோப்பையின் ஓல் டைம் டொப் ஸ்கோரர்கள் லிஸ்ட்டில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

1994 உலகக்கோப்பைத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற பிரேசில் அணியில் இடம் பெற்றிருந்தாலும், ஒரு போட்டியில்கூட விளையாடாத ரொனால்டோ 1998 உலகக் கோப்பையில் சிறந்த வீரருக்கான விருதை வென்றார்.


அந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்குப் பிரேசில் முன்னேற, நான்கு கோல்கள் அடித்து உதவி செய்த ரொனால்டோ, பிறகு உடல்நலக் குறைபாடு காரணமாக இறுதிப்போட்டியில் அவதிப்பட, அந்தப் போட்டியில் பிரான்ஸிடம் தோற்றது பிரேசில்.

2002 உலகக்கோப்பைத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான கால் இறுதியைத் தவிர அனைத்துப் போட்டிகளிலுமே கோல் அடித்த ரொனால்டோ, ஜேர்மனிக்கு எதிராக இறுதியில் அடித்த இரண்டு கோல்கள் உட்பட மொத்தம் எட்டு கோல்கள் அடித்து, அந்தத் தொடரின் 'டொப் ஸ்கோரர்' விருதைத் தட்டிச்சென்றார்.

அத்துடன் உலகக் கோப்பைத் தொடர்களில் 12 கோல்கள் அடித்திருந்த பீலே வின் சாதனையையும் சமன் செய்தார். மேலும், அந்தத் தொடரில் பிரேசில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்ற முக்கியக் காரணமாகவும் விளங்கினார் ரொனால்டோ.

2006 உலகக்கோப்பையில் ஜப்பானுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் இரண்டு கோல்களும், கால் இறுதியில் கானாவுக்கு எதிரான போட்டியில் ஒரு கோலும் அடித்த ரொனால்டோ, ஒட்டுமொத்தமாக 15 உலகக் கோப்பை கோல்களுடன் ஜெர்ட் முல்லரின் சாதனையை முறியடித்தார். ரொனால்டோவின் இந்தக் கடைசி உலகக்கோப்பைத் தொடரில் கால் இறுதியிலேயே வெளியேறியது பிரேசில்.

பிரேசிலுக்காக 98 போட்டி



களில் கலந்துகொண்டு 62 கோல்கள்அடித்துள்ள ரொனால்டோ, இரண்டு முறை உலகக்கோப்பை சம்பியன் பட்டத்தையும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**#1 – மிரோஸ்லேவ் குளோஸ்**
**(MIROSLAV KLOSE)**

24 உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடி 16 கோல்கள் அடித்துள்ள, ஜேர்மனியின் முன்னாள் ஸ்டிரைக்கரான குளோஸ் தான் உலகக்கோப்பையின் டொப் கோல்ஸ்கோரர்.

2002 உலகக் கோப்பையில் சவுதி அரேபியாவுக்கு எதிரான முதல் போட்டியில் 'ஹட்ரிக் கோல்' அடித்த அவர், அயர்லாந்து மற்றும் கேமரூன் அணிகளுக்கு எதிரான தனது அடுத்த போட்டிகளில் தலா ஒரு கோல் அடித்தார். அவர் அடித்த அந்த ஐந்து கோல்களுமே சுப்பர் ஹெடர்கள்'. அதன் மூலம் ஓர் உலகக்கோப்பையில் ஐந்து 'ஹெடர்கள்' அடித்த முதல் வீரரானார்.

2006 உலகக்கோப்பையில் கோஸ்டாரிகாவுக்கு எதிரான முதல் போட்டியில் இரண்டு கோல்களும், ஈக்வடோருக்கு எதிரான மூன்றாவது போட்டியில் இரண்டு கோல்களும் அடித்தவர், ஆர்ஜென்டினாவுக்கு எதிரான கால் இறுதியில் ஒரு ஈக்வலைஸர்' கோல் அடித்தார்.

ஜேர்மனி மூன்றாவது இடத்தைப் பிடித்த அந்தத் தொடரில் மொத்தம் ஐந்து கோல்கள் அடித்த குளோஸ், தொடரின் 'டொப் ஸ்கோரர்' விருதைப் பெற்றார்.

2010 உலகக்கோப்பையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் போட்டியில் இரண்டாவது கோலை அடித்தவர், இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த சுற்றுப் போட்டியில் 'ஓப்பனிங் கோல்' அடித்தார்.

ஆர்ஜென்டினாவுக்கு எதிரான கால் இறுதியில் இரண்டு கோல்கள் அடித்து, 14 உலகக் கோப்பை கோல்களுடன் ஜெர்ட் முல்லரின் சாதனையையும் சமன்செய்தார். 2014இல் தனது இறுதி உலகக் கோப்பையில் விளையாடிய குளோஸ், கானாவுக்கு எதிரான போட்டியில் ஒரு கோல் அடித்து ரொனால்டோவின் சாதனையைச் சமன்செய்தார்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மாலையிட்ட மங்கை
இசை : எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே. ராமமூர்த்தி
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : டி.ஆர்.மகாலிங்கம்



சில்லென்று பூத்த சிறு நெருஞ்சி காட்டினிலே
நில்லென்று கூறி நிறுத்தி வழி போனாளே
நின்றாது போல் நின்றாள் நெடுந்தூரம் பறந்தாள்
நிற்குமோ ஆவி நிலைக்குமோ நெஞ்சம்
மணம் பெறுமோ வாழ்வே...ஆ...ஆ..ஆ..ஆ..ஆ..

செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

காற்றினில் பிறந்தவளோ புதிதாய்
கற்பனை வடித்தவளோ
சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ
செவ்வந்திப் பூச்சரமோ

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

கண்களில் நீலம் விளைத்தவளோ
அதைக் கடலினில் கொண்டு கரைத்தவளோ
பெண்ணுக்கு பெண்ணே பேராசை கொள்ளும்
பேரழகெல்லாம் படைத்தவளோ

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

# அன்னை ஓர் ஆலயம்

(நிமிடக்கதை)

அன்பான சற்குநாத வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கங்கள் உரித்தாகட்டும். எங்கடை லதாக்குட்டியின்ரை பிறந்த நாளுக்குப் பெரியவர் அவவை சிறுவர் இல்லம் ஒண்டுக்குக் கூட்டிப் போனவர். ஆட்டோவிலைதானே என்னையும் குளிப்பாட்டிப் புதுசா ஒரு சிவப்புக் கழுத்துப் பட்டியும் கட்டிக் கூட்டிக்கொண்டு போனவர். நல்ல சோலைகளுக்குநடுவிலைநல்லவடிவா அந்த சக்தி இல்லம் கட்டி வைச்சிருக்கினம். முப்பது பிள்ளையள்தான் அங்கை இருக்கினம். எல்லாரும் ஏழாம் வகுப்புக்கு உட்பட்டவைதான். நல்ல குஞ்சுக்குஞ்சுப் பிள்ளையள். மூண்டாம் வகுப்புப் படிக்கிற பிள்ளைதான் சரியான சின்னன். நாங்கள் போகேக்கை பின்னேரம் மூன்று மணி இருக்கும். பெரிவரைக் கண்ட உடனே ஓடி வந்துதாத்தாவணக்கம் எண்டு ஒரே கொண்டாட் டம். நல்ல சந்தோசமாத்தான் இருக்கினம். எனக்கு அதைப் பாக்கக் கவலை கவலையாக் கிடந்தது. ஆர் பெத்த பிள்ளையளோ...?தாயிருக்கோ இல்லையோ ஒண்டும் தெரியாது. லதாக்குட்டி அவைக்குக் கிட்டப் போய் கையைப் பிடிச்சு ஏதோ கதைக்கிறா. அவையும் மொலு மொலு எண்டு என்னமோ கதைக்கினம்.

ம்...ஒரு ஐஞ்சு நிமிசத்திலை ஓடி வாறம் எண்டு சொல்லிப் போட்டு பத்துப் பிள்ளையள் கையிலை சப்பாத்தும் கால்மேசும் கொண்டு ஓடிஓடிப் போகினம். ஓ... அதைக் கழுவிப் போட்டுக் காயவைச்சிட்டு வாறம் எண்டு சொல்லினம். சட்டையை பெரிய அம்மாக்கள் தோய்ச்சுக் குடுப்பினமாம். ஆனால் ஆறாம் வகுப்புக்கு மேலை அவையளேதான் தோய்ச்சு நீலம் போட்டு விரிச்சு காய வைச்சுப் பிறகு ஆறு மணிக்கிடையிலை எடுத்து மடிச்சு வைப்பினமாம். அருமையான வளர்ப்பு. ம்...வீடுகளிலை எண்டால்தாய்மார் தானேபிள்ளையளுக்கு உடுப்புத் தோய்ச்சுக் குடுக்கினம். யூனிவேசிற்றிக்குப் போன பிறகும் அம்மாதான் தோய்ச் சுக்கிறதாம்.

நல்ல பழக்கம் தான். அவை பெரிய படிப்புப் படிக்கிற பிள்ளையளாம். நேரமில்லையாம். ஒரே ரியூசனாம். ஆராய்ச்சியாம். ம்...மண்ணாங்கட்டி, தன்ரை உடுப்பைத்



தான் தோய்ச்சு அயன் பணிப் போட அப்பிடி நேரமில்லையோ... பெரியவர் இதைப்பற்றி இப்பதான் கதைச்சவர். பாலாண்ணை வாறார். அவை கதைக்கத் தொடங்கினம்...

“ஏன் சேர் இந்தத் தோய்க்கிற பவுடரிலை அப்பிடிப் பயங்கரமான கெமிக்கல் இருக்கெண்டு இவ்வளவு நாளா நான் யோசிக்கேல்லை. எங்கடை அவ...ஓமோம் பிள்ளையளின்ரை உடுப்பு அவதான் தோய்க்கிறவ...கையெல்லாம் ஒரே கொப்புளம் போட்டு மருந்தெடுத்துக் கொண்டு வாறன். அவ்வளவுக்கு ஆபத்தோ சேர்...'' பாலா குழம்பிப் போட்டார். பெரியவர் தலையாட்டுறார்.

ஓமோம் பாலா... வோஷிங் மெஷினுக்குள்ளை போடுறதுகளைக் கையாலை தோய்ச்சால் அது சும்மா விடுமே. சரி...சரி...அப்ப...சமையல் சாப்பாட்டெல்லாம் என்ன மாதிரி...பாவம் சரியான வேதினையா இருக்கும்'' பெரியவர் கவலைப்படுறார்.

''ஓம் சேர்... இண்டைக்குக் கடையிலைதான் எடுத்தது. இரவைக்கு நான் சமாளிப்பன் சேர். ம்...அவ... சொன்னாலும் கேக்கமாட்டா... எல்லாற்றை உடுப்புக்களையும் அள்ளிப் போட்டு தானே கிடந்து முறிவா...கேட்டால் பிள்ளையள் பாவம் எண்டு சொல்லுவா. அவையளும் சரியான செல்லம். கொஞ்சம் கூடத் தாய் பாவம் எண்டு நினைக்க வேண்டாமே... ஒரே விசராக் கிடக்குது சேர்... வீடே படுத்திட்டுது...'' நல்ல வடிவான சின்னக் குடும்பத்திலை இப்பிடி ஒரு சின்ன வருத்தம் வந்தாலும் தாங்க முடியாது தான். பெரியவர் ஆதரவாகக் கதைக்கிறார்.

“தம்பி பாலா...இதுக்குப் போய் இப்பிடி மனசை தளரவிடுறதே...தாய் எண்டு சொல்லுறது ஒரு தெய்வம் ஐயா...மற்றவையள் துன்பப்பட்டால் தாங்காது. தன்ரை நோயைக்கூடப் பெரிதுபடுத்தாமல் மற்றவைக்காக உழைச்சு ஓடாய்ப்போற பிறவிதானையா தாய். அது ஆரோக்கியமா இருந்தால் தான் வீடே கலகலப்பா இருக்கும். நீ பிள்ளையளுக்குப் புத்தியைச் சொல்லு தம்பி. சின்னச் சின்ன வேலைகளைப் பிள்ளையள் பங்கு போட்டுச் செய்ய வேணும் ராசா. கோயிலுக்குப் போய் கடவுளை வணங்குகிறதும் சரி, தாயை அன்பாப் பேணி அவளுடைய சுமைகளிலை பங்கு கொள்ளுறதும் சரி. இரண்டும் ஒண்டுதான். குடியிருந்த கோயில் எண்டு சொல்லுவினம். அதை அழகாப்பாது காக்க வேண்டியது கட்டின புருஷனும் பெத்த பிள்ளையளும் தான். மனிசிக்கும் புத்தியைச் சொல்லு... பிள்ளையள் தங்கடை வேலையைத் தாங்கள் செய்யப் பழக்க வேணும். அதுகள் ஆரையும் எதிர்பார்த்து ஆரிலையும் தங்கி வாழக் கூடாது. நீயும் கொஞ்சம் நயமாச் சொல் லிப் பழக்கு ராசா. அதுகள் புத்தியுள்ள நல்ல அன்புள்ள பிள்ளையள்தானே. ஒருக் கால் சொன்னால் போதும். வேணுமெண்டால் பாரன் எல்லாம் சரி வரும். கவலைப் படாதை. இராசவள்ளிக் கிழங்கு கிடக்கு எடுத்துக் கொண்டு போய் அவிச்சுக்குடு. கரண்டி யாலை சாப்பிடட்டும். மருந்தை ஒழுங்காப் போடச் சொல். சோப் பவுடரைப் பாவியுங்கோ...? பெரியவர் பெருமூச்சோடு எழும்புறார்.

ம்...ஒரு குடும்பத்தின்ரை அச்சாணியே அன்னை தானே. அதுக்குப் பிறகு தான் எல்லாம். ம்...கண்ணும் கருத்துமாப் பாக்க வேணும். சரி... சரி...எனக்கும் நித்திரை வருகுது. அப்ப போட்டு வாறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்

# மலர்களாய் மலர்வோம்

மலர்களுக்கு மயங்காதவர்களே உலகில் இல்லை எனலாம். அதுவும் பெண்கள் என்றால் சொல்லத்தேவையில்லை. “மலர்களும் மங்கையும் ஒரு ஜாதி" என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். பண்டைய காலத்தில் இருந்தே பெண்கள் மலர்களை நேசித்து வந்தார்கள். இது மட்டுமல்லாது, மலர்கள் உள்ளத்துக்கும் மனமகிழ்வைத் தர வல்லன. இன்று மலர்கள் மூலம் பெறுகின்ற நன்மைகள் சொல்லில் அடங்காது. இம்மலர்கள் இயற்கை அன்னையின் அருங்கொடைகள்.

மலர்கள் மனிதவாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. ஏனெனில் மனித வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் மலர்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இது மட்டுமல்லாது ஆலயங்களில்கூட மலர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. ஏனெனில் மலர்கள் கொண்டு இறைவனை அர்ச்சிக்க வேண்டும் என்று ஆன்றோர்கள் சான்று பகர்கின்றனர்.

இப்படி மனிதவாழ்விலும் இறை வழிபாட்டிலும் முக்கியத்துவம் பெறுகின்ற மலர்கள் மருத்துவத்திலும் முக்கிய பங்கை வகிக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் மனிதனுக்கு வருகின்ற நோய்களைத் தீர்க்க மருந்து மாத்திரைகளை உட்கொள்



கிறான். ஆனால் காலப்போக்கில் மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாத நோய்களை மலர்களால் குணப்படுத்தலாம் என்று மருத்துவத்துறை மூலம் அறியக்கிடைக்கின்றது.

ரோஜா, செவ்வந்தி, செவ்வரத்தை, மல்லிகை போன்ற மலர்கள் மனிதனின் நோய்களை குணப்படுத்தவல்லன. இதனாலன்றோ என்னவோ பண்டையகால மக்கள் மலர்கள் கொண்டு தங்கள் நோய்களை குணப்படுத்தினார்கள். எனவே மருத்துவத்துறையில் மலர்களின் பங்களிப்பு அளவிட்டு சொல்ல முடியாது.

மனிதனின் நோய்களை தீர்க்கும் மலர்கள் மனதிற்கும் சந்தோசத்தைக் கொடுக்கவல்லன. உங்கள் வீட்டு மலர்த்தோட்டத்தில் ஒரு மலர் மலர்ந்தாலும் உங்கள் மனம் எவ்வளவு சந்தோசமடையும். இது மட்டுமல்லாது அதிகாலையில் மலர்ந்திருக்கின்ற மலர்கள் கண்ணுக்கு விருந்தாகவும் மனதிற்கு மகிழ்வாகவும் இருக்கக் கூடிய உணர்வினை கொடுக்கின்றன.மலர்களின் சிறப்பினையும் அதன் மகத்துவத்தினையும் அறிந்து “மலர்க்கண்காட்சி" இலங்கையில் நடைபெறுகின்றது என்பது யாவரும் அறிந்ததே.

எனவே நாமும் மலர்த்தோட்டம் அமைத்து மலர்களில் ஒரு மலராக மலருவோம்.வாழ்க்கை மலர்களைப்போல் மணம் வீசும் என்பது திண்ணம்.

உமா வேல்முருகன்

# கோலி சோடா 2

திரைவிமர்சனம்



விஜய் மில்டன் ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநராக அவதாரம் எடுத்தவர். தன் முதல் படத்தில் சறுக்கினாலும் கோலி சோடா என்ற படத்தின் மூலம் வெற்றிக்கொடி நாட்டியவர்.

கோலிசோடா என்றாலே எளியவரை வலியவர் மிதிக்க, அவர்களை ஒரு கட்டத்தில் எளியவர் எப்படி திரும்பி அடிக்கின்றார் என்பதே கதை. இதே பார்முலா தான் கோலிசோடா-2வில் என்றாலும், இது எந்த விதத்தில் ரசிகர்களை கவர்ந்தது பார்ப்போம்.

சமுத்திரக்கனி ஆரம்பத்திலேயே பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றார். கௌதம் மேனன் அவரை விசாரிக்கின்றார்.

இதைத் தொடர்ந்து மூன்று இளைஞர்களை சமுத்திரக்கனி குறிப்பிட்டு பேச ஆரம்பிக்கின்றார். அந்த மூன்று இளைஞர்களுமே வாழ்க்கையில் அடுத்தகட்டத்திற்கு வர முயற்சி செய்கின்றார்கள். அவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் கனி உதவுகின்றார்.

ஒருவர் ஆட்டோவிலிருந்து கார் வாங்க வேண்டும். மற்றொரு இளைஞர் ரவுடியிடமிருந்து விலகி நல்ல வேலைக்கு போகவேண்டும். இன்னொருவர் பாஸ்கட்போல் ப்ளேயர் ஆக வேண்டும்.

ஆனால் இவர்கள் வாழ்க்கையில் ஒரு சில அதிகார வர்க்கத்தால் திசை மாறுகின்றது. முன்னரே சொன்னது போல் இந்த எளியவர்கள் வலியவர்களை எப்படி எதிர்த்தார்கள் என்பதே மீதிக்கதை.

கோலிசோடா என்றாலே ஒரு வகை யதார்த்தம் படத்தில் இருக்கும். சிறுவர்கள் பெரிய ரவுடிகளை எதிர்க்கின்றார்கள் என்றாலும், 4 பேர் ஒருவரை அடிப்பார்கள். ஆனால், இதில் 3 பேர் 300 பேரை கூட அடிப்பார்கள் போல. அந்த அளவிற்கு படத்தின் இரண்டாம் பாதி முழுவதும் அடிதடி தான்.

முதல் பாதி கதைக்குள் படம் வருவதற்கு கொஞ்சம் நேரம் எடுக்கின்றது. மாறனின் காதல், நல்ல வேலை, ஒளியின் பாஸ்கெட் போல்ப்ளேயர் ஆசை மற்றும் காதல், ஆட்டோ சிவாவின் கார் ஆசை என மூன்று இளைஞர்கள் கனவு எப்படி ஒரு புள்ளியில் சந்தித்து பிறகு எப்படி அது சிதைகின்றது என்பதை திரைக்கதையில் கொண்டு வந்த விதம் சுப்பர் விஜய் மில்டன்.

அதைவிட மூன்று வில்லன்கள் அவர்களை ஒரே ஜாதி என்ற புள்ளியில் இணைக்கும் இடம் சுப்பர். தற்போது மூவருக்குமே பொது எதிரி என்பது போல் கொண்டு வந்து இளைஞர்கள் எப்படி அந்த பெரும் சக்தியை எதிர்க்கின்றார்கள் என்பதையும் தெளிவாக காட்டியுள்ளார்.

ஆனால், இத்தனை தெளிவு இருந்தும் கோலிசோடா முதல் பாகத்தில் இருந்த ஒரு யதார்த்தம் இதில் கொஞ்சம் கூட எங்கும் இல்லை. அதிலும் சண்டைக் காட்சிகள் எல்லாம் கொஞ்சம்



செயற்கையாகவே இருந்தன.

முதல் பாதியில் அடி வாங்கினால், இரண்டாம் பாதியில் திருப்பி அடிக்கத்தான் போகின்றார்கள் என்று ஓடியன்ஸ் மைண்ட் செட் முன்னாடியே செட் ஆனதால், இரண்டாம் பாதி கொஞ்சம் விறுவிறுப்பாக சென்றாலும், யூகிக்கக்கூடிய காட்சிகளாகவே அடுத்தடுத்து வந்தன. அதிலும் கிளைமேக்ஸில் சமுத்திரக்கனி ப்ளேஷ்பேக் ஓபன் செய்யும் போதே இது தான் நடந்திருக்கும் என தெரிகின்றது.

அச்சு ராஜமணியின் இசை பாடல்களை விட பின்னணியில் கலக்கியுள்ளார். அதே நேரத்தில் சண்டைக்காட்சிகளில் கொஞ்சம் இரைச்சலையும் தருகின்றது. தானே ஒளிப்பதிவு என்பதால் கமராவை கையில் கட்டி ஓடியிருப்பார் போல விஜய் மில்டன்.

படத்தின் இரண்டாம் பாதி, கொஞ்சம் விறுவிறுப்பாக செல்கின்றது. படத்தின் வசனம் குறிப்பாக பாங்க் மனேஜர் ஒருவர் இந்த உலகமே ஒரு மிஷின் தான். உங்களை போல சிறிய சக்கரத்தினால் தான் ஓடுகின்றது நீங்கள் முன்னேறி விட்டால் பிறகு நாங்க எப்படி பிழைப்பது என்று கேட்கும் இடத்தில் நம் அரசாங்கம் மீதே நமக்கு சந்தேகம் வருகின்றது. நடிகர், நடிகைகளின் நடிப்பு, குறிப்பாக சமுத்திரக்கனி. கோலி சோடாவில் இருந்த யதார்த்தம் இதில் மிஸ்ஸிங்.

படத்தின் முதல் பாதி ஒரு சில நிமிடம் படம் எதை நோக்கி போகின்றது என்றே தெரியவில்லை.

மொத்தத்தில் கோலிசோடா 2 முதல் பாகம் அளவிற்கு பொங்கவில்லை என்றாலும் ஓரளவிற்கு தாகத்தை தணிக்கும்.

# பரபரப்பை ஏற்படுத்திய இளம் இசையமைப்பாளரின் மரணம்



சினிமாவில் சாதிக்க வேண்டும் என ஆசையுடன் வருபவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் தான் தனக்கான இடத்தை பிடித்து விடுகிறார்கள்.

இந்நிலையில் தெலுங்கு சினிமாவை சேர்ந்த இளம் இசையமைப்பாளர் அனுராக் வினில் தற்கொலை செய்து கொண்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவர் பல இடங்களில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருவதோடு, படங்களுக்கும் இசையமைத்து வருகிறார். அவருக்கும் ரசிகர்கள் இருக்கிறார்களாம். கடந்த வாரம் இறந்த அவரின் மரண பின்னணி குறித்து தற்போது சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. ஆனால் அவர் இறந்த காரணம் தெரியவில்லை.

எந்த கடிதமும் கிடைக்கவில்லை. ஆனால்அவர்போதைக்கு அடிமையாகியிருப்பது தெரிய வந்துள்ளது. இதற்கு காரணம் அவரின் பெண் தோழி ஒருவர் தான் என சொல்லப்படுகிறது. இருவருக்கும் காதல் என சொல்லப்பட்டு வருகிறது.

மேலும் இதில் அவருக்கு பலரால் தொல்லைகள் கொடுக்கப்பட்டது தெரியவந்துள்ளது. இதனால் அவர் நகோல், மம்தா நகரில் தன் வீட்டில் தற்கொலை செய்துகொண்டாராம்.

மேலும் அவரின் மரணம் குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது.

# காலா படத்தில் காயத்திரி ரகுராமிற்கு பதிலடி



காலா சுப்பர் ஸ்டார் நடிப்பில் வெளிவந்து செம்ம ஹிட் அடித்துள்ளது. இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பில் உள்ளது.

இந்த வாரம் ரமழான் என்பதால் கண்டிப்பாக படத்திற்கு நல்ல கூட்டம் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் சில மாதங்களுக்கு முன் நடந்த பிக்போஸ் நிகழ்ச்சியில் காயத்ரி ரகுராம் 'சேரி பிகேவியர்' என ஒரு வார்த்தையை விடுவார்.

இதற்கு பெரும் கண்டனங்கள் வர, கமலே மன்னிப்பு கேட்டார். அதைத் தொடர்ந்து காயத்ரி ரகுராமும் வருத்தம் தெரிவித்தார்.

தற்போது வந்துள்ள காலா படத்தில் ரஜினியின் மகனும் இந்த வார்த்தையை கூற, ரஜினி ஓங்கி கன்னத்தில் அறைவார்.

பலரும் இது காயத்ரி ரகுராமிற்கு கொடுத்த பதிலடி தான் என கூறி வருகின்றனர்.

# சிக்கலில் இருந்து தப்பிய திரிஷா

திரிஷா பல வருடங்களாக தமிழ் சினிமாவை கலக்கி வரும் நடிகை. அவர் முன்னணி ஹீரோயினாக இருந்த காலத்தில் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்.




2010-11 நிதி ஆண்டில் அவர் வெறும் 89 இலட்ச ரூபாய் தான் சம்பளம் வாங்கியதாக கூறி வருமான வரி தாக்கல் செய்துள்ளார். ஆனால் அவர்கள் நடத்திய ஆய்வில் அவர் கூடுதலாக ரூ.3.52 கோடி வருமானத்தை ஈட்டியதாக கண்டுபிடிக்கப்பட்டு 1.16 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து நடிகை திரிஷா வழக்கு தொடர்ந்தார். வருமானவரித்துறை மேல் முறையீட்டு தீர்ப்பாயம் திரிஷாவுக்கு ஆதரவாக தீர்ப்பளித்தது.

வருமானவரித்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் நடிகை திரிஷாவுக்கு விதிக்கப்பட்ட அபராதம் இரத்து செய்யப்பட்டது.

# புலிகள் குறித்த வரலாற்றுத் தீர்ப்புக்களின் வரிசையில் இடம்பிடித்த சுவிஸின் தீர்ப்பு!



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை குற்றவியல் அமைப்பாக அறிவித்து, அதன் செயற்பாடுகளை முடக்கி தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை குற்றவியலாகவும், பயங்கரவாதமாகவும் சித்திரித்து அடக்குவதற்கு, 2000ஆம் ஆண்டு முதல் தமிழினப் படுகொலைக்கு முண்டுகொடுத்துச் செயற்படும் வல்லாதிக்க சக்திகள் சுவிஸ் அரசிற்கு அழுத்தம் கொடுத்து வந்தன.

அந்த அழுத்தத்தின் காரணமாக 2005 ஆம் ஆண்டிலும் 2007 ஆம் ஆண்டிலும் முனைப்புப் பெற்ற இச் சட்ட நடவடிக்கைகள் 2011 இல் வலுப்பெற்று சுவிஸின் வரலாற்றில் இதுவரையும் இடம்பெற்றிராத மாபெரும் வழக்காக பெரும் செலவில் இடம்பெற்றது.

08.01.2018 அன்று, சுவிஸ் நாட்டில், "பயங்கரவாதத்துக்கான நிதிசேகரிப்பு" எனும் குற்றச்சாட்டோடு 13 பேர் மீது வழக்கு ஆரம்பமானது. இந்த 13 நபர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்கள் என்று குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டது.

சுவிஸ் நாட்டின் ஊடகங்களிலும், தமிழ் ஊடகங்களிலும் இவ்வழக்கு ஒரு பிரதான செய்தியாக அமைந்திருந்தது. இருப்பினும், இவ்வழக்கின் ஆழம் மிகப்பெரியது. அதனால் இவ்வழக்கையும் கடந்த 14.06.2018 வெளியான தீர்ப்பையும் மேலோட்டமாகப் பார்க்காமல் பரந்துபட்ட கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டிய கட்டாயத்தில் தமிழ் ஊடகங்களும் அரசியற் செயற்பாட்டாளர்களும் தமிழ் மக்களும் உள்ளனர்.

இதைத் தமிழர்கள் சரியாக புரிந்து கொண்டு, அதற்கு அமைவாக செயற்பட வேண்டும்.

### பயங்கரவாதத்துக்கான நிதி சேகரிப்பு

20.07.2016 அன்று சுவிஸ் நாட்டின் மத்திய அரசின் சட்டத்தரணி சம்மேளனத்தின் இணையத்தளத்தில், 13 நபர்கள் மீது வழ்க்குத் தொடரப் போவதாக அறிவிக்கப்பட்டது. இந்த நபர்தள் மீது ஒரு குற்றவியல் அமைப்பின் அங்கத் துவம், ஒரு குற்றவியல் அமைப்புக்கான உதவி, நிதி மோசடி, பத்திர மோசடி மற்றும் பண மோசடி போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

அத்தோடு, விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய நிதி உதவியினால் யுத்தம் இன்னும் கொடூரமாகவும் நீண்ட காலமாகவும் நடைபெற்றது என்றும், அக்குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதற்கு ஒப்பானதொன்றாகவும், தமிழின அழிப்பை நியாயப்படுத்தும் ஒரு மோசமான விடயமாகவும் காணப்பட்டது.

இவற்றுக்கும் அப்பால் இவ்வழக்கின் பிரதான கேள்வியாகப் பார்க்கப்படும் விடயம் என்னவெனில், "தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பா?" என்பதாகும்.

சுவிஸ் நாட்டின் மத்திய அரசின் சட்டத்தரணி சம்மேளனம், இதனை பயங்கரவாதத்துக்கான நிதிசேகரிப்பு எனக் கருதுவதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒரு பயங்கரவாத அமைப்பாகச் சித்திரித்திருந்தது.

இக் கேள்விக்கான பதிலை, அவ்வழக்கின் நீதிபதிகள் சட்ட வல்லுநர்களின் உதவியோடும் வரலாற்று வல்லுநர்களின் உதவியோடும் வழங்கினர்.

### கிளர்ச்சி முறியடிப்புச் சூழலும் இவ்வழக்கும்

**COIN (Counter-insurgency)** என்றழைக்கப்படும் கிளர்ச்சி முறியடிப்புத் திட்டம், வெறும் இராணுவ விடயங்களை உள்ளடக்கிய ஒரு பொறிமுறையல்ல. ஏனெனில், கிளர்ச்சி முறியடிப்பு என்பது ஆயுதம் தரித்த கிளர்ச்சியாளர்களைக் கொல்வது மட்டுமன்றி, அக்கிளர்ச்சியூடாக உருவான அரசியல் வெற்றிடத்தை அழித்தலே ஆகும்.

அதன் அடிப்படையிலேயே 2009ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளோடு சேர்த்து, அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழீழ நடைமுறை அரசும் அழிக்கப்பட்டது. ஏனெனில் இலங்கை அரசின், "அரசியல் நிர்வாக மற்றும் ஆயுத ஏகபோகங்களை" முறியடித்து, தமிழீழ நடைமுறை அரசு நிறுவப்பட்டது.

2009ஆம் ஆண்டு இலங்கைத் தீவிலிருந்த தமிழீழ நடைமுறை அரசு அழிக்கப்பட்டு, தமிழரின் தாயகத்தில் இலங்கை அரசின் ஏகபோகம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது. ஆனால், 2009ஆம் ஆண்டின் இராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கைகளின் மூலம், புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் நிலவுகின்ற தாயகக் கோட்பாட்டை அழிக்க முடியவில்லை.

அதனால்தான், புலம்பெயர்ந்த தமிழர்களின் மீதும் கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் வேலைத்திட்டங்களுக்குள் இவ்வழக்கும் அடங்குகின்றது.

### சுவிஸ் நாட்டின் நிலைப்பாடு

24.12.2000 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தனர். மூன்று தடவைகள் இதன் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டாலும், இலங்கை அரசாங்கம் இதற்கு ஓர் தகுந்த பதிலை அளிக்கவில்லை. கட்டுநாயக்க விமான நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரே, இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தத்துக்குத் தகுந்த பதிலை அளித்தது. தமிழர் தரப்பின் முயற்சியாலேயே, யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து, அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

"இத் தருணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு குற்றவியல் அமைப்பாக அறிவிப்பது ஒரு தவறான முடிவு. ஏனெனில், சமாதான நடவடிக்கைகளுக்கு சுவிஸ் அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதால், தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு குற்றவியல் அமைப்பாக அறிவித்தல் ஒருதலைப் பட்சமானதாக அமைந்துவிடும்," என்று 2005ஆம் ஆண்டிலும் 2007ஆம் ஆண்டிலும் சட்டத்தரணி சம்மேளனம் தெரிவித்திருந்தது.

ஆனால் வோஷிங்டன் நகரில் நடைபெற்ற மகாநாட்டில் தமிழர்களைப் புறக்கணித்து, சுனாமி கட்டுமானத்தை நிலை குலைய வைத்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையினைக் கொண்டு வந்து, இப் பேச்சுவார்த்தை முறிவு பெற்றது.

இந்த நிகழ்வுகளின் பின்னணியில் இந்திய, அமெரிக்க வல்லாதிக்கங்கள் இருந்தன. இப்பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததுடன், 2008ஆம் ஆண்டு இலங்கை போர் நிறுத்தத்திலிருந்து விலகியது. இதன் பின்னரே, 2009ஆம் ஆண்டில் யுத்தம் உக்கிரமடைந்து முடிவுபெற்றது.

பேச்சுவார்த்தையை வெளிப்படையாக சில சக்திகள் தடுத்த போதும், திட்டமிட்ட வகையில் தமிழர்கள் அழிக்கப்பட்ட போதும், சுவிஸ் மௌனம் காத்தது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க்குற்றம் புரிந்தனர் என்றும், விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றும், விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதால் யுத்தம் இன்னும் கொடூரமாக நடைபெற்றது என்றும், சட்டத்தரணி சம்மேளனம் குறிப்பிட்டது.

மறு புறத்தில், இலங்கையுடன் இடப்பெயர்வு தொடர்பான உடன்படிக்கையைச் செய்து, தமிழர்களின் அடையாளத்தை மறுக்கிறது. அத்துடன் இவ்வழக்கின் ஊடாக சேகரிக்கப்பட்ட அனைத்து நகல்களையும் இலங்கைக்கு கையளித்ததுடன் சட்ட உதவிகள்சார் கூட்டாண்மை எனும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டது.

அத்தோடு, 2011ஆம் ஆண்டு இவ்வழக்குத் தொடர்பாக கைதுகளை மேற்கொண்ட பொழுது, சட்டத்தரணி சம்மேளனத்தின் இணையத்தளத்தில், "சட்டத்துக்குப் புறம்பான நிதிசேகரிப்பு" எனும் வார்த்தைப் பிரயோகம் பிரயோகிக்கப்பட்டது. ஆனால் 2016ஆம் ஆண்டு, அதே இணையத்தளத்தில் "பயங்கரவாதத்துக்கான நிதி சேகரிப்பு" எனும் வார்த்தைப் பிரயோகம் பயன்படுத்தப்பட்டது.

இதில் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில், 2005ஆம் ஆண்டிலும் 2007ஆம் ஆண்டிலும் சட்டத்தரணி சம்மேளனத்தின் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள், இப்பொழுது இப் பதவியை வகிக்கவில்லை. இப்பொழுது இப்பதவியை வகிக்கும் நபர், **IMF** மற்றும் உலக வங்கியுடன் இணைந்து, அவர்களின் சில வேலைத்திட்டங்களில் சேர்ந்து செயற்பட்டவர் ஆவார்.

எவ்வளவு பொதுமக்கள் இறப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகள் அழிய வேண்டும் என்று **IMF** அமைப்பும், உலக வங்கியும் தெரிவித்திருந்தமை, **"WIKILEAKS"** வெளியிட்ட **"Hilary Clinton"** னின் மின்னஞ்சலில் தெரி விக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### இன்றைய வரலாற்றுத் தீர்ப்பும் போராடும் மக்களுக்கான செய்தியும்

இன்றைய வரலாற்றுத் தீர்ப்பை அறிவித்த சுவிஸின் உச்ச நீதிமன்ற நீதிபதி இவ்வழக்கை மேலோட்டமாக மட்டும் பார்க்காமல் வரலாற்று ரீதியாக ஆய்வுக்குட்படுத்தி தீர்ப்பளித்துள்ளார்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்றது ஒரு பயங்கரவாதம், தீவிரவாதமோ அல்ல. அது ஒரு இன விடுதலைக்கான போராட்டம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், விடுதலைப்புலிகள் அமைப்பானது வெறுமனவே ஆயுதம் தரித்த தரப்பாக மட்டும் செயற்படவில்லை எனவும், அரசியல் ரீதியாகவும் அனைத்துக் கட்டுமானங்களையும் கொண்டிருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

அவர்களின் இராணுவமானது பெண்களையும் உள்ளடக்கிய நான்கு மார்க்கமான படைகளையும், அதற்கான நேர்த்தியான நெறியாள்கையில் ஒரு இராணுவத்திற்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே இருந்ததென்று இடுத்துரைத்தார்.

### கரும்புலிகள் சார்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

அப்படையானது ஓர் விசேட படைப் பிரிவாகவே செயற்பட்டதென்றும் ஆனால் தற்கொலைப்படையென்று பொதுவெளியில் அழைக்கப்பட்டதென்றும் குறிப்பிட்டார். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு நிழல் நிலை அரசையும் நிறுவி நடைமுறைப்படுத்தினார்கள் என வரலாற்றை மீள்ஞாபகப்படுத்தி தீர்ப்பின் காரணிகளை தெளிவுபடுத்தினார்.

1983இற்கு முன்- பின் என தமிழர்களின் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்தி தீர்ப்பெழுதப்பட்டுள்ளமை பல இடங்களில் ஈழத் தமிழர்கள் பட்ட அவலங்களை தொட்டுச்சென்ற போது தெளிவாகப் புலப்பட்டது.

இவ் ஆய்வுகளின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு விடுதலை இயக்கம் என சுவிஸின் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டோர்கள் அனைவரும் குற்றவியல் அமைப்பின் அங்கத்துவம், குற்றவியல் அமைப்புக்கான உதவி, கட்டாய நிதி சேகரிப்பு, மிரட்டிப் பணம் பறிப்பு எனும் குற்றங்களில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் நால்வர் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றங்களும் தள்ளுபடி செய்யப்பட்டு, வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் பணிப்பு வழங்கியது.

ஏனைய மூன்று முன்னாள் புலி உறுப்பினர்களுக்கும் வங்கி மோசடி தொடர்பில் அறிந்திருந்து உதவியதற்காக தண்டனைப் பணம் செலுத்தவும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படும் தடுப்பும் வழங்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு குற்றங்கள் புரியாமல் நன்னடத்தையை வெளிப்படுத்த வேண்டும். அரச தரப்பு சட்டத்தரணி திருமதி நோத்தோ இலங்கையிலும், சுவிஸிலும் விடுதலைப்புலிகள் ஒரு குற்றவியல் அமைப்பு என்பதற்கு தேடி அளித்த சான்றுகளை நீதிமன்றம் நிராகரித்தது.


சுவிஸின் உச்ச நீதிமன்றம் இலங்கையிலும் அதற்கு அப்பால் எந்த நாட்டிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு எவ்வேளையிலும் குற்றவியல் அமைப்பாக செயற்பட்டதற்கோ அல்லது குற்றவியல் செயலை ஊக்குவித்தற்கோ எவ்வித சான்றுகளும் இல்லை எனத் தெளிவாக தெரிவித்தது.

இத்தாலி நாட்டின் நாப்போலி மாநகரத்தின் நீதிமன்றனம், டென்மார்க் உயர் நீதிமன்றம், ஐரோப்பிய நீதிமன்றம் போன்றவற்றின் தீர்ப்புக்களின் வரிசையில் சுவிஸின் தீர்ப்பானது விடுதலைக்காக போராடும் தமிழீழ மக்களாகிய எமக்கு மட்டுமன்றி ஏனைய இனங்களுக்குமான புத்துணர்ச்சியையும், தன்னெழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# facebook

# முதலை செய்த கொலை

ஒரு பிரிட்டிஷ், 24 வயது ஊடகவியலாளன் கைகழுவும் போது முதலை தாக்கி உயிர் இழந்தான். இது பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி. இலங்கையில் முதலையின் தாக்குதலினால் உயிர் இழந்தவர்கள் பலர். தென் பகுதியில் உள்ள களுகங்கை, ஜின் கங்கை நதிகளில் முதலைகள் உள்ளன. இந்த செய்தியை வாசித்தவுடன் உடனே 1949இல் தென் பகுதியில் நடந்த முதலை செய்த கொலைதான் என் நினைவுக்கு வந்தது



இலங்கையின் தென்பகுதியில் உள்ள பண்டாரகம நகரத்தில் இருந்து 14 கிமீ தெற்கே உள்ள கிராமம் படப்போல. இக்கிராமத்தில் தென்னை, இறப்பர் தோட்டங்களும் வயல்களும் உள்ளன. மாதம்பே நதியானது இதன் அருகே ஓடி அம்பலாங்கொட அருகே கடலோடு கலக்கிறது. இந்த நதியின் ஹப்புகோட எல என்ற சிற்றாறு இருபது ஏக்கர் வயல், தென்னை, இறப்பர் விளையும் போரளுவா தோட்டத்தின் மேற்குப் பகுதியில் செல்கிறது. இந்த சிற்றாற்றின் இரு பக்கத்திலும் குதறு என்ற மரம் செழித்து வளர்ந்திருந்தது. சிற்றாற்றினை கடக்க மரத்தினாலான இரண்டு பாலங் கள் நூறு யார் இடைவெளிகளில் இருந்தன.

ஆற்றினைக் கடக்க உதவியாக அந்த பாலங்கள் இருந்தன. படகிலும் கடக்கலாம். படகு சிற்றாறினைக் கடந்து சென்று நிற்கும் இடத்தை ஊர்வசிகள் "தொட்டுப் போல" என்பர். அந்த இடத்தில. இளம் பெண்கள் குளித்துக் கும்மாளம் அடிப்பார்கள். முதலைகளின் தாக்குதலில் இருந்து அவர்களைப் பாதுகாக்க அவர்கள் குளிக்கும் இடம் சுற்றி வலையினால் வேலி போட்டிருந்தது. அப்படி இருந்தும் ஒரு பெண் முதலைக்கு பலியானாள்.

போரளுவா தோட்டத்தின் மேற்பார்வையாளராக பண்டாரகம 75 வயது அப்புசிங்கோ இருந்தான். மீசைக்காரன். அந்த வயதிலும் திடகாத்திரமான தன் தேகத்தை அவன் பேணி வந்தான். அவனை கங்காணி சிங்கோ என்று அடைப்பெயர் சொல்லி அழைத்தனர். தோட்டத்தை பராமரிக்க கிராமவாசிகள் கூலிக்கு உதவினார்கள்.

அப்புசிங்கோ பல வருடங்களுக்கு முன் திருமணமாகி அவனின் மனைவி இறந்தாள். அத்திருமணத்தால் சிங்கோவுக்கு 55 வயதில் மகன் இருந்தான். அவனுக்கு தந்தையின் போக்குப் பிடிக்காததால் தந்தையோடு வாழவில்லை. தனிமையில் வாழ்ந்த சிங்கோ ஒரு துணையைத் தேடினான்.

அந்த கிரமத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் உள்ள விதவை நோனாஹாமிக்கு நான்கு பெண் பிள்ளைகள். அதில் மூன்றாவது மகள் 26 வயதுள்ள மங்கோநோனா. அழகானவள். 1944 ஆம் ஆண்டில் அப்புசிங்கோவின் தோட்டத்தில் வேலை செய்ய சென்ற போது அப்புசிங்கோவின் பார்வை அவள் மேல் விழுந்து. அவளை தன் வைப்பாட்டியாக வைத்திருக்க விரும்புவதாக கல்யாணத் தரகர் தேமிஸ் என்ற தன் நண்பனுக்கு சிங்கோ தன் விருப்பத்தைச் சொன்னான். அப்புசிங்கோவுக்கு. அந்த வயதிலும் பெண் ஆசை விடவில்லை. அப்புசிங்கோவுக்கும் அந்த இளம் யுவதிக்கும் 45 வயது வித்தியாசம். சிங்கோவுக்கு ஒரு மகள் இருந்தால் மங்கோநோனாவுக்கு சில வருடங்கள் மூத்தவளாக இருந்திருப்பாள். இளம்வயது பெண்ணை வயது கூடியவர்கள் வைப்பாட்டியாக வைத்திருப்பது தென் பகுதி கிராமங்களில் உள்ள கலாசாரம்.

சிங்கோ, என்னால் அவளின் தாயோடு பேசி அதை ஒழுங்கு செய்து தர முடியும். ஆனால் கொஞ்சம் செலவாகும்" என்றான் தேமிஸ். எவ்வளவு செலவு வரும். சிங்கோ தேமிசிடம் கேட்டான்.

நீ என் நண்பன் என்பதால் என் தரகு பணம் எடுக்க மாட்டேன். உனக்கு ஒரு துணை தேவை மங்கநோனாவின் தாயுக்கு முந்நூறு ரூபாய் கொடுத்தால் அவள் சம்மதிக்கலாம். அவள் சம்மதித்தால் நீ அவளை திருமணம் செய்யாமல் உன் வீட்டில் வைத்திருக்கலாம். ஆனால் அவளின் உடை உணவு. செலவு. எல்லாம் உன் பொறுப்பு. அதுக்கு நீ சம்மதமா? தேமிஸ் கேட்டான்.

சற்று சிந்தித்த பின் சம்மதம் தெரிவித்தான். அப்புசிங்கோ அவனுக்கு தேவை அவனின் தனிமையைப் போக்க ஒரு பெண். தரகு வேலையை தேமிஸ் வெற்றிகரமாக செய்து முடித்தான்.

மங்கோநோனா அப்புசிங்கோவின் குடிசை வீட்டில் வாழத் தொடங்கினாள். அந்த குடிசை சிற்றாருக்கு அருகில் ஒரு குன்றத்தில் இருந்தது. அந்த தென் பகுதி கிராமங்களில் அக்கால கலாசாரத்தின் படி திருமணமாகாமல் கணவன்-மனைவியாக வாழ்வது சகஜம். அதை சமூகம் தடுப்பதில்லை. தமிழ் நாட்டில் சில ஜமீன்தார்கள், பண்ணையார்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்தது போல் அப்புசிங்கோவும், மங்கோநோனாவும் திருமணம் செய்யாமல் ஒன்றாக 1944 ஆண்டு முதல் வாழத் தொடங் கினார்கள். ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்! என்பார்களே அது அவர்களின் வாழ்க்கையில் உண்மையாயிற்று. அவர்களுக்கு 1945 இல் மாப்பிநோனா என்ற பெண் பிறந்தாள்.

அந்த பெண்ணுக்கு மூன்று வயதான போது அப்புசிங்கோ மங்கநோனாவின் மேல் சந்தேகப் படத் தொடங்கினான்' தனக்கும் அவளுக்கும் பெரிய வயது வித்தியாசம்.

அதனால் தனது 72 வயதில் தனக்கு எப்படி குழந்தை பிறக்கும் என்பது அப்புசிங்கோவின் வாதம்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1442

Search for people, places and things | Nagendram | Home

### அபி



மத்தவங்களுக்கு பிடித்த மாதிரி பளபளப்பா வாழுவதைவிட நமக்கு பிடித்த மாதிரி கலகலப்பா வாழனும்

### உஷா

என் வாழ்வில் நான்பட்ட கஷ்டங்களை விட



நான் தவறவிட்ட சந்தோஷங்கள்தான் அதிகம்

### அபிதன்


ஒருவரிடம் "நாணயம்" இருப்பதனால் மட்டுமே நல்லவராகிவிட முடியாது...



அவரிடம் நா- நயமும் இருந்தால்தான் நல்லவராக முடியும்

### ராஜா

உலகத்தை ஆழமாக நேசி. ஆனால் ஒருவரையும் நம்பாதே



ஆழமாக உறங்கும் போதும் ஒரு கண்ணை மூடாதே

### துளசி

பணத்தை மட்டுமே தேடும் மக்கள் மத்தியில்தான்



இப்படி பாசத்தைத் தேடும் மனிதமும் வாழ்கின்றது...!

### ராஜ்

மனிதனின் பொம்மலாட்டத்தில் காட்சிக்கு காட்சி சுவாரசியம்



இறைவனின் பொம்மலாட்டத்தில் ஒவ்வொரு காட்சியும் இரகசியம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 136

## சிறுவர்களுக்கு தலைக்கவசம் அணிவது அவசியமா?



எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் "நம் முன்னோர் நமக்கு அளித்த நற்செய்தி. எமது உடலில் உள்ள அங்கங்களில் சிரசு/தலை/ Head மிக முக்கியமானது.

இவ் அங்கத்தை பாதுகாக்கவே நாம் பயணங்களின் போது தலைக்கவசம் / தொப்பி அணிகின்றோம். இந்த தலைக்கவசம் பல வர்ணங்களில் **(Colours)**, பல வடிவங்களில் **(Designs)**, பலவித மேலதிக பகுதிகளைக் கொண்டதாக **(Accessories)** காணப்படுகின்றது. அத்துடன் பயன்படுத்தும் தேவைகளைப் பொறுத்தும் **(Indications)** இத் தலைக்கவசம் சைக்கிள் ஓட்டம், மோட்டார் சைக்கிள் ஓட்டம், விமான ஓட்டி, விண்வெளி வீமானி, கார்ஓட்டம் போன்ற காரணங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

எம்வாழ்க்கையின் இனிமையான பருவம் சிறுவர் பராயம். இது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும். இந்தச் சிறுவர்கள் எனப்படுவோர் பதினெட்டு **(18Years)** வயதிற்கு குறைந்தவர்கள் என்பது **United Nations Convention on the Rights of Child** அமைப்பினதும் **WHO** எனும் உலக சுகாதார அமையத்தினதும் அறிவுறுத்தலுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

ஆனால் பெரியவர்களும் சிறுவர்களும் இன்று தம் இலகுவான, விரைவான பயணத்திற்காக **(Transport)** அதிகளவு பயன்படுத்துவது மோட்டார் சைக்கிள் **(Motor bike)** எனும் வாகனத்தையே **(Vehicle)** என்பது கண்கூடான உண்மையாகும். இம் மோட்டார் சைக்கிளை பாவிப்பது பெரியவர்களும், இளைஞர்களும் அவர்களுடன் அவர் தம் இனிய சிறுவர்களும் தம் பல அவசர தேவைகளை அதி வேகத்துடன் அடைய வேண்டும் என்பதற்காகவே. எனினும் இவர்களில் பலர் தம் இனிய அன்பிற்குரிய சிறுவர்களிற்கு தலைக்கவசம் அணியாமல் பெரியவராகிய தாம் மட்டும் தலைக்கவசம் அணிந்து பயணிப்பதை அதிகளவு காணக் கூடியதாக உள்ளது.

தலைக்கவசத்தை அணியாது செல்வதற்குரிய காரணங்களாக பின்வருவனவற்றைக் கருதலாம்.

- பெரியவர்களாகிய எம்மிடம் உள்ள போலி நம்பிக்கைகள் **(False belief)**. அதாவது முடி உதிர்தல் **(Hair loss)**, தலையிடி **(Headache)** .கழுத்து நோ **(Neckpain)**, பார்வைக் குறைபாடு **(Vision impairment)**, முள்ளந்தண்டு காயம் **(Spinal injuries)** போன்ற பல நிலைமைகள் ஏற்படலாம் என்ற மனநிலை.
- விலை உயர்ந்த பொருள் என்ற கருத்து உள்ளமை **(Expensive)**.
- சிறுவர்க்கு அணிவது கட்டாயம் இல்லைதானே என்ற மனநிலை **(Not compulsory)**.
- தலைக்கவசம் அணிவதால் அழகற்ற நிலைமை, தலைமுடி சீரற்ற தோற்றத்தைக் கொண்டு அமையலாம் போன்ற கருத்துக்கள் அமைகின்றன.

**தலைக்கவசத்தை எம் அன்புச் சிறுவர்களுக்கு அணிவித்துப் பயணிப்பதால் ஏற்படக் கூடிய நன்மைகள் பல உண்டு. அவையாவன,**

- அன்புச் சிறுவர்களை ஏற்படும் விபத்துக்களில் இருந்து பாதுகாக்கலாம். எப்படி?வீதிகளில் மோட்டார் வாகனத்தில் தலைக்கவசத்துடன் பயணிக்கும் போது மற்றப் பயணிகளுக்கும் தலைக்கவசம் தெளிவாக கண்களுக்குப் புலப்படும்.

இந்நிலைமை விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தை குறைக்க/ தவிர்க்க உதவும் **(Prevent Accidents)**



- பாதுகாப்பு –தலையை, மூளையை பாதுகாக்கும். அது மட்டுமல்ல முகம்,பற்கள், கண்கள் போன்றவற்றை மூடி **(Cover)** காணப்படுவதால் வீதிகளிலிருந்து ஏற்படும் தூசிகள், சிறிய பொருட்கள், உயிரினங்கள் (வண்டு/பூச்சிகள்) போன்றவற்றிலிருந்து இந்த சின்னஞ் சிறிய தலையை / மூளையை பாதுகாக்கலாம். **Protect your head/Brain/Face/Eyes/ Teeth/ From Road Debris.**

தலைக்கு ஒருவிதமான சூடான தன்மையையும், உலர்ந்த தன்மையையும் வழங்கும். **(Keep Your Head Warm &Dry)**



- மோட்டார் சைக்கிளில் சவாரி/பயணம் செய்கையில் ஒரு விதி அழகான தோற்றத்தை எமக்கும் / மற்றவர்க்கும் எம்மால் பொருத்தமான, பாதுகாப்பான, அழகான தலைக்கவசம் அணிவதால் பெற்றுக்கொள்ளலாம், கொடுக்கலாம்.
- நாமும் எம் சிறுவர்களும் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் பயணிக்கையில் இது எம்நாட்டிற்குரிய போக்குவரத்துச் சட்டங்களை மதிப்பவர்களாகின்றோம்.

**(You'll be following the law).**

அத்துடன் எம் சின்னஞ் சிறார்களுக்கு நாம் ஒரு உதாரண புருஷர்களாக, வழிகாட்டிகளாக **(Set an Example for Your Child and role model)** எம் வாழ்க்கையை அவர்களுக்கு உதாரணமாக்கலாம்.

- விபத்துக்களுக்கு உள்ளான பின்னர் வைத்தியசாலையை நாடவேண்டி ஏற்படலாம்.

இதனால் பாரிய/சிறிய விளைவுகள் ஏற்படும். இவற்றை தவிர்ப்பதால் மருத்துவ பராமரிப்பிற்கான செலவைக் குறைக்கலாம். அந்த பணத்தை இன்னொரு தேவைக்குப் பயன்படுத்தலாம். **(Avoid High Medical Bills)**. விபத்தின் பின் ஏற்படும் வைத்தியசாலைப்பராமரிப்பிற்கான காலம் **(Long Hospitalized)** விபத்தின் விளைவுகளிலிருந்து மீள வரும் காலம் **(Long Recovery Period)**.

அங்கங்களை இழப்பது, உடலின் சாதாரண தோற்றங்களை, அமைப்பை மாற்றிக் கொள்ளும் நிலைமை, வாழ்க்கையின் தரம் மாறுதல் **(Loss of Quality of Life)**போன்ற நிகழ்வுகளின் விகிதத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

விதிமுறைகளுக்கு அமைவாக வாழ்க்கையில் நாட்டிற்குரிய சட்டங்களை பின்பற்றி நாம் ஒரு நல்ல பிரஜைகளாக **(Citizen)** வாழ்ந்து நம் சிறுவர்களுக்கும் அவற்றை கொடுக்கலாம். மதிப்பளிக்கும் தன்மையை **(Obey)** சிறுவர்களின் உள்ளங்களில் உண்டாக்கலாம்.

பண விரயத்தைக் குறைக்கலாம்.நேரத்தை மீதப்படுத்தலாம். போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர்க்கு உரிய விதத்தில் மதிப்பளித்து **(Sense of Responsibility)** அவர்கள் தம் கடமையை இடையூறின்றி புரிய உதவி செய்யலாம்.

பெரிய மூளையும் தலையும் உள்ள பெரியவர்களாகிய நாம் எம் அன்புக்கும் பாத்திரமாகிய சின்னஞ் சிறார்களின் சின்னஞ் சிறிய தலைக்கு நாமும் அவர்களும் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் பயணிப்பதால் பல்வேறுபட்ட நன்மைகள் எமக்கும் எம் சமுதாயத்திற்கும் என்பது மிக தெளிவான ஒன்றாகும்.

எனது தலைக்கவசம் எனது வாழ்க்கைக்கு பாதுகாப்பாகும். **(My Helmet Saved My Life)**. எம் சிறுவர்களுக்கு தலைக்கவசம் அணிந்து பயணிப்போம். அவர்களை நல்ல சிறந்த எம் நாட்டுப் பிரஜைகளாக்குவது பெரியவர்களாகிய எங்களின் கடமையல்லவா?

திருமதி.சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக் கல்லூரி

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 468 5555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்